June 2021

தமிழ்

12-ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA • SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers

iதமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

June 2021

சுவடி — 11
ஓலை — 4

வணக்கம் பல

போர் என்பது மனிதகுலத்திற்கு வெகுகாலமாகவே பழக்கப்பட்ட ஒன்றுதான் என்றாலும், அதனை எதிர்கொள்ளும் அப்பாவி மக்கள், பெரும் துயர் மிகுந்த வலியை அடைகிறார்கள். காசா மீது நிகழ்த்தப்பட்ட மீள்தாக்குதலில் எண்ணற்ற உயிர்கள் பலி வாங்கப்பட்டிருக்கிறது. உலக நாடுகளின் உதவியால் போர் நிறுத்தம் ஏற்பட்டு காசா இயல்பு நிலைக்கு திரும்பிக் கொண்டிருப்பதால், அந்நாட்டு மக்கள் சற்றே நிம்மதி அடைந்து இருக்கிறார்கள்.

தீநுண்மித் தொற்றிலிருந்து உலக மக்கள் இன்னமும் நிம்மதி பெறவில்லை! பல நாடுகளில் ஊரடங்கு நடைமுறையில் இருந்து வருகிறது. குறிப்பாக ஆசிய நாடுகளின் அவலம் மிகப் பெரியதாக இருக்கிறது. மீண்டும் பழைய இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும். அதுவும் விரைவில் நடக்கும்! எதிர்பார்ப்போம்!!

தமிழகத்தின் புதிய முதல்வர், பதவியேற்ற வேகத்திலேயே நல்ல பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார் என்பது மக்களுக்கு ஆறுதல் தரும் செய்திதான்! எவ்வளவு காலந்தான் ஊரடங்கை நீட்டித்துக் கொண்டேயிருப்பது? மக்களின் வாழ்வாதாரத்தையும் கவனிக்க வேண்டியது அரசாங்கம் என்பதையும் உணர வேண்டும்.

ஊரடங்கின் மூலம் உலகம் முழுதுமேயுள்ள மக்களின் வாழ்வாதாரம் மிகவும் முடங்கிப் போயிருக்கிறது. நோய்த் தொற்றால் இறப்பவர்களை விடவும், பசி பட்டினியால் இறக்கும் நிலைக்குச் சென்று கொண்டிருக்கும் குடும்பங்களை அரசாங்கங்கள் உணர்கின்றனவா? பசியை விடவும் ஒரு பெரும் நோய் இவ்வுலகில் உண்டோ? நோய்த் தொற்றைத் தாண்டி, மக்களின் பசியையும் அரசுகள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஊரடங்கினால் எவ்வித நன்மை மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது துல்லியமாய் சொல்ல முடியாமல் போனாலும், சுற்றுச் சூழலுக்கு மிக உகந்த ஒரு நிலையை செயற்கையாக இந்த தீநுண்மித் தொற்று ஏற்படுத்தியிருக்கிறது என்று ஆறுதல் கொள்வோம்!

இவ்வாண்டு இறுதிக்குள்ளாவது தொற்று முற்று பெறும் என்று முழுமையாக நம்புவோமாக! நம்பிக்கையே வாழ்க்கை! அந்த வகையில் நம்பிக்கையை முன்னெடுத்து மலர்கின்ற இம்மாத 'அய் தமிழ்' வழமைபோலவே அற்புதமான படைப்புகளோடு மலர்கின்றது! வாசியுங்கள்!... வரவேற்று மகிழுங்கள்!...

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

உள்ளே...

புது உதயம்!
தணியுமா? அணையுமா?

கொரோனா அரசியல்!
ஞாலம் பெரிது

தமிழே தமிழே
சேரமான் கனவு

அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்

கவனச் சிதறல்

மருத்துவ தமிழ்
உறவின் மகிமை

IThamil Monthly Magazine

Chief Editor & Publisher
Sivanesan

Editor
Khottravan

Editorial Team
Ganesan
Navani
Shanthakumar

Art Editor
Sriram

Art & Marketing Director
Jaya

Printers
Kanagam Pathippagam

Contact us:
editor@ithamil.com

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

வாழ்த்துகள் மு.க.ஸ்டாலின்–நல்லாட்சி தாருங்கள் !

வழக்கம்போல உறுதியான ஒரு தீர்ப்பை 2021 சட்டமன்றத் தேர்தலிலும் வழங்கியிருக்கிறார்கள் தமிழக மக்கள். திமுகவுக்குத் தனிப் பெரும்பான்மையையும், அக்கூட்டணிக்கு உறுதியான அறுதிப் பெரும்பான்மையையும் வழங்கியிருப்பதன் மூலம், ஒரு சவாலான காலகட்டத்தில் நிலையான ஆட்சி அமைந்திடும் சூழலை இந்தத் தீர்ப்பு உருவாக்கியிருக்கிறது; அதேசமயம், சென்ற முறையைப் போலவே சட்டமன்றத்தில் காத்திரமான அளவில் எதிர்க்கட்சிகள் செயல்படுவதற்கான வாய்ப்பையும் இந்தத் தீர்ப்பு உத்தரவாதப்படுத்துகிறது.

இரு திராவிடக் கட்சிகளின் கூட்டணிக்கும் தங்கள் தீர்ப்பின் வழி ஒரே செய்தியைத்தான் சொல்லியிருக்கிறார்கள் தமிழக மக்கள்; 'தமிழ்நாட்டின் உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்காதீர்கள்' என்பதே அந்தச் செய்தி. மாநிலத்தின் ஆட்சியில் பழனிசாமி நிர்வாகத்தின் மீது இருந்த அதிருப்தியைக் காட்டிலும் மாநிலத்தின் உரிமைகளை அவருடைய அரசு நிறைய விட்டுக்கொடுத்தது என்பதே தமிழக மக்களிடம் வெளிப்பட்ட பெரும் அதிருப்தி ஆகும். திமுக சரியாக அதைச் சுட்டியது. ஸ்டாலின் இந்தத் தேர்தலின் பிரகடனமாகவே அதை மாற்றினார்.

'தமிழகத்தின் சுயமரியாதையை மீட்டெடுப்பதற்கான போர்' என்று இத்தேர்தலை அவர் வரையறுத்தார்; கூட்டாட்சிக்கான உறுதியான குரலாக திமுக செயல்படும் என்று அவர் உறுதியளித்தார். தன்னுடைய வார்த்தைகளில் அவர் நிற்க வேண்டும். ஒன்றிய அரசுடன் சுமுகமான ஓர் உறவைப் பராமரிக்கும் அதேசமயம், தமிழக மக்களின் உணர்வைப் பிரதிபலிக்கும் ஒரு நல்லாட்சியைத் திமுக வழி

அவர் வழங்கிட வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சராகப் பதவியேற்கவிருக்கும் மு.க. ஸ்டாலின் ஒரு நீண்ட, கடினமான பயணத்தின் முடிவில் இந்தப் பொறுப்பை ஏற்கவிருக்கிறார். மிக நெருக்கடியான சூழலில் கட்சியை வழிநடத்திய பொறுமையும் துணை முதல்வராக இருந்த அனுபவமும் அவரது புதிய பதவியில் உதவக்கூடும்.

1960களின் பிற்பகுதியில் சென்னை கோபாலபுரத்தில் அப்பகுதி இளைஞர்களை ஒருங்கிணைத்து நிகழ்ச்சிகளை நடத்தியதில் துவங்கி, தி.மு.கவின் தலைவராகவும் முதலமைச்சராகவும் உயர்ந்திருக்கும் மு.க. ஸ்டாலினின் பயணம் மிக நீளமானது, கடினமானது என்பதை அவரது அரசியல் எதிரிகள்கூட ஒப்புக்கொள்வார்கள்.

2016ல் கருணாநிதியின் உடல்நலம் குன்றியதிலிருந்து 2019ஆம் ஆண்டுத் தேர்தல்வரை கட்சியை வழிநடத்துவது, தேர்தல் கூட்டணிகளை அமைப்பது, பிரசாரத்தை முன்னெடுத்துச்

செல்வது என அவர் முன்னெடுத்த விஷயங்கள் அனைத்திலும் அவர் வெற்றி பெற்றிருந்தார். இருந்தபோதும், எதிர்க்கட்சிகள் அவரது வெற்றியைப் புறம்தள்ளின.

எழுதுவதற்கே தகாத வார்த்தைகளால் மு.க. ஸ்டாலின் சமூக வலைதளங்களில் குறிப்பிடப்பட்டார். கட்சியின் கீழ்மட்டத் தொண்டர்கள் மட்டுமல்லாது, சில கட்சியின் தலைவர்களே, அவரை துண்டுச் சீட்டு இல்லாமல் பேச முடியாதவர் என்று கீழிறங்கி விமர்சித்தார்கள். அவர் தேர்தல்களில் பெற்ற பிரம்மாண்டமான வெற்றிகள் கணக்கில் கொள்ளப்படவில்லை.

"மு. கருணாநிதியின் மறைவுக்குப் பிறகு அவர் தொடர்ந்து பொறுப்புகளை ஏற்றும், அவற்றை செயல்படுத்தியும் காட்டியிருக்கிறார். எல்லோரும் அவரை கருணாநிதியுடன் ஒப்பிட முயல்கிறார்கள். அவர் சிறப்பாகப் பேசவில்லை என்கிறார்கள். ஆனால், நவீன தலைமை என்பது மேடையில் சிறப்பாக பேசுவது கிடையாது. எந்த அளவுக்கு பொறுப்புகளை ஏற்று, அதை நிறைவேற்றிக் காட்டுகிறார்களோ அதுதான் சிறந்த தலைமை.

இப்போது கட்சியை நடத்துவது என்பது, ஒரு பெரிய நிறுவனத்தின் நிர்வாகத்தை நடத்துவதுபோலத்தான். அதை வெற்றிகரமாகச் செய்ய திறமை தேவை. அதுதான் மு.க.ஸ்டாலினின் பலம்.

மு.க.ஸ்டாலினைப் பொறுத்தவரை, அவர் தனது அரசியல் வாழ்வைத் துவங்கியதிலிருந்தே வாரிசு என்கிற சுமை அவருக்கு இருந்திருக்கிறது. ஆகவே அவர் தொடர்ந்து தன்னை நிரூபிக்க வேண்டியிருந்தது. அதற்காக, பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு அதனை அவர் நிறைவேற்றிக் கொண்டே இருந்தார். பொறுப்புகளை ஏற்றுக்கொள்வது என்பது அவரது ஆளுமையின் ஓர் அடையாளமாகவே ஆகிவிட்டது.

மு.க.ஸ்டாலின் தி.மு.கவிற்குள் முக்கியமான தலைவராக உருவெடுக்க ஆரம்பித்த காலத்தில் அவர் முன்பாக இரண்டு வாய்ப்புகள் இருந்தன. ஒன்று கட்சியைக் கட்டமைக்கும் வேலை. மற்றொன்று மக்களைச் சென்றடையும் பணி. மக்களை அணுகும் பணியில் மு.கருணாநிதியும் க. அன்பழகனும் ஏற்கெனவே இருந்தனர். ஆகவே அவர் கட்சியைக் கட்டமைப்பது என்ற கடினமான பணியைத் தேர்வுசெய்தார்.

காங்கிரஸுடனான உறவு துண்டிக்கப்பட்டிருந்த நிலையில், அன்றைய பிரதமர் இந்திரா காந்திக்கும் கருணாநிதி தலைமையிலான திமுக அரசுக்கும் சுமுகமான உறவு இல்லாமல் இருந்த நேரம். அந்த பரபரப்பான சூழலில் திமுக மாநில மாநாடு கோவை மாநகரில் கூடுகிறது. அந்த மாநாட்டில் பேசுகிறார் ஓர் இளைஞர். திமுக தலைவர் கருணாநிதியின் மகன் மு.க. ஸ்டாலின் இவர்தான் என்று பொதுமக்களுக்கு அடையாளம் தெரிந்தது அப்போதுதான்.

வேடிக்கை என்னவென்றால், கருணாநிதி தனது வாரிசாக அடையாளம் காட்ட நினைத்தது என்னவோ, இன்னொரு மகன் மு.க. முத்துவை.

தாயில்லாப் பிள்ளை என்று செல்லமாக வளர்த்து, அவருக்கு எம்ஜிஆருக்கு நிகராக திரையுலக செல்வாக்கை ஏற்படுத்தி, தனது அரசியல் வாரிசாக்க நினைத்த கருணாநிதியின் கணக்கு பொய்த்துவிட்டது. மு.க. முத்து பெரிய நடிகரும் ஆகவில்லை; அரசியலுக்கும் வரவில்லை. அரசியலில் பரபரப்பாக அறிமுகமானது என்னவோ மு.க. ஸ்டாலின்தான்.

காரணமல்ல. திமுகவின் தேர்தல் வெற்றிக்காக பிரசாரத்தில் ஈடுபட்டும், நாடகங்கள் நடத்தியும் மு.க. ஸ்டாலின் பணியாற்றியது முக்கியக் காரணிகள்.

மு.க. ஸ்டாலினின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்த நிகழ்வு 'மிசா' சட்டத்தின்கீழ் அவர் கைது செய்யப்பட்டதுதான். திருமணமாகி ஐந்தே மாதங்கள் ஆகியிருந்த

மு.க. ஸ்டாலின், ஏதோ அதிருஷ்டவசமாக அரசியலுக்கு வந்தவரும் அல்ல. 1953 மார்ச் 1—ஆம் தேதி கருணாநிதி — தயாளு அம்மையார் தம்பதியரின் மூன்றாவது மகனாகப் பிறந்த மு.க. ஸ்டாலினின் அரசியல் பிரவேசம், 'கோபாலபுரம் இளைஞர் திமுக' என்கிற அமைப்பை அவரும் அவரது நண்பர்களும் ஏற்படுத்தியதில் இருந்து தொடங்கியது. ஆர்வ மிகுதியால் தொடங்கிய அந்த அமைப்பு பின்னாளில் திமுக இளைஞர் அணியாக உருவெடுக்கும் என்று யாருமே கணிக்கவில்லை.

1967—இல் திமுக ஆட்சிக்கு வந்தது, 1969—இல் அண்ணாவின் மறைவைத் தொடர்ந்து கருணாநிதி முதல்வரானது போன்ற நிகழ்வுகள் தமிழக வரலாற்றில் மட்டுமல்ல, மு.க. ஸ்டாலினின் வாழ்க்கையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தின. 1973—இல் அவர் பொதுக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு, முதல்வரும் கட்சித் தலைவருமான மு. கருணாநிதியின் மகன் என்கிற பின்னணி மட்டுமே

நிலையில், மதுராந்தகத்தில் பிரசார நாடகம் முடித்து திரும்பி இருந்த மு.க. ஸ்டாலின் கைது செய்யப்பட்டதும், அடுத்த ஓர் ஆண்டு சிறையில் கழித்ததும் அவரின் அரசியல் வாழ்க்கைக்கு அஸ்திவாரமிட்டது. அப்போதே அடுத்த வாரிசு இவர்தான் என்று தலைமை மட்டுமல்ல, கட்சித் தொண்டர்களே முடிவு செய்து விட்டனர்.

சிறையிலிருந்து வெளிவந்தது முதல், மு.க. ஸ்டாலின் முழுநேர அரசியலில் இறங்கிவிட்டார். இளைஞரணியின் தலைவராக நியமிக்கப்பட்டபோது அவருக்கு சூட்டப்பட்ட 'தளபதி' பட்டம், மேயர், அமைச்சர், துணை முதல்வர், துணைப் பொதுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர், கட்சித் தலைவர் என்று பல பதவி ஏற்றங்களைக் கண்டு இப்போது 'முதல்வர்' என்கிற பதவி வரை வந்திருக்கிறது.

1989—இல் ஆட்சிக்கு வந்தபோதும் சரி, 1996—இல் நான்காவது முறையாக முதல்வர் பதவி ஏற்றபோதும் சரி, துணிந்து மு.க. ஸ்டாலினைத் தனது அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளாதது,

திமுக தலைவர் கருணாநிதி செய்த மிகப் பெரிய தவறு. ஆற்காடு வீராசாமி, வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன், கே.என். நேரு, பொன்முடி, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், ஐ. பெரியசாமி உள்ளிட்ட திமுகவின் மூத்த தலைவர்கள் பலர் முதன்முறையாக அமைச்சர்களானது 1989—இல்தான். அப்போது ஆயிரம் விளக்குத் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தும்கூட மு.க. ஸ்டாலின் அமைச்சரவையில் இடம்பெறாததற்குக் காரணம், முதல்வர் மு. கருணாநிதியின் தயக்கம்.

சரி, அவர்தான் தரவில்லை. இவராவது கேட்டுப் பெற்றாரா என்றால் இல்லை. மு.க. ஸ்டாலினுடைய அணுகுமுறையும், தந்தை கருணாநிதியை மீறி எதுவும் செய்துவிடக் கூடாது என்கிற அடக்கமும்தான் அதற்குக் காரணங்கள். மற்றவர்களைப்போல முண்டியடித்துக் கொண்டு முன்னால் போய் நிற்கும் ஆர்வமோ, சண்டைபோட்டுத் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்கிற வெறித்தனமோ அவரிடம் இருந்ததே இல்லை.

ஆலமரத்தில் அரசமரம் முளைப்பது போல உருவாகி இருக்க வேண்டிய மு.க. ஸ்டாலின், கருணாநிதி என்கிற ஆலமரத்தின் விழுதுகளில் ஒன்றாக மகிழ்ச்சியுடன் இருந்துவிட்டார். அவரை 'இலவு காத்த கிளி' என்று பலர் வர்ணித்தபோது ஆத்திரப்படவில்லை. 'ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு' என்பதுபோல, தனது வாய்ப்புக்காக சற்றும் மனம் தளராமல், பொறுமையுடன் அவர் காத்திருந்தார் என்பதை இப்போது நிரூபித்திருக்கிறார்.

ஜெயலலிதாவின் மரணத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தைப் பயன்படுத்தி அவர் ஆட்சியைக் கைப்பற்றுவார் என்றுதான் அவரது கட்சிக்காரர்கள் உள்பட பலரும் எதிர்பார்த்தார்கள். குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிப்பதில் அவர் அக்கறை காட்டாதது, அவரைச் சுற்றி இருந்தவர்களுக்கே எரிச்சலை ஏற்படுத்தியது. ஆனால், அவர் அதைப் பொருட்படுத்தாததற்கு ஒரு முக்கியமான காரணம் இருந்தது.

அப்படி ஒருவேளை ஆட்சியைக் கைப்பற்றி இருந்தால், தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகப் பல சமரசங்களை செய்துகொள்ள வேண்டிவரும் என்று அவருக்குத் தெரிந்திருந்தது. பல்வேறு அழுத்தங்களுக்கும், பலர் இழுத்த இழுப்புகளுக்கும் ஆளாக நேர்ந்திருக்கும் என்று அவர் உணர்ந்திருந்தார். தனது தலைமையில் மக்களை சந்தித்து இப்போது பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்க இருக்கும் முதல்வர் மு.க. ஸ்டாலின், கட்சியையும் ஆட்சியையும் தனது முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்திருக்கிறது. இதற்காகத்தான் அவர் இத்தனை காலமும் காத்திருந்தார் என்பது இப்போது புரிகிறது.

VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

Idli / Dosa Wet Mix

ఇడ్లీ దోస పిండి

இட்லி / தோசை மாவு

ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്

100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

அண்ணாவைத் தவிர, தமிழக முதல்வர்களாக இருந்த அனைவரும் தேசிய அளவிலோ, மாநில அளவிலோ ஆளுங்கட்சியாக இருந்த கட்சிகளின் தயவில்தான் ஆட்சி அமைத்திருக்கிறார்கள். இதற்கு, ராஜாஜி, காமராஜர், பக்தவத்சலம், மு. கருணாநிதி, எம்.ஜி.ஆர். ஜெயலலிதா, எடப்பாடி கே.பழனிசாமி யாருமே விதிவிலக்கல்ல. மத்திய ஆளுங்கட்சியையும் மாநில ஆளுங்கட்சியையும் ஒருசேர எதிர்கொண்டு மக்கள் ஆதரவுடன் முதல்வர் பதவியில் அண்ணாவுக்குப் பிறகு அமரப்போவது மு.க. ஸ்டாலின்தான்!

மு.க. ஸ்டாலினுடன் நெருங்கிப் பழகிய சிலருக்கு தெரிந்த அவரைப் பற்றிய உண்மை — அவர் ஒளிவுமறைவே இல்லாத சுபாவத்துக்கு சொந்தக்காரர் என்பது. அவரது கோபம் என்பது அலை வீசுவது போல வந்த சுவடு தெரியாமல் அடுத்த நிமிஷமே மறைந்துவிடும். தனக்கு ஒருவரைப் பிடிக்கவில்லை, அவரது செயல்பாட்டில் அதிருப்தி இருக்கிறது என்றால் அதை மறைத்து வைத்துப் பேசும் பழக்கம் இருந்ததே இல்லை. முகத்திலேயே விருப்பு, வெறுப்பு வெளிப்பட்டுவிடும்.

பழிவாங்கும் எண்ணம், நம்ப வைத்துக் கழுத்தறுக்கும் வஞ்சகம், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல் இவையெல்லாம் இல்லாத அரசியல்வாதி ஒருவர் உண்டென்றால், அது முதல்வராக பதவி ஏற்கவிருக்கும் மு.க. ஸ்டாலினாகத்தான் இருக்கும். தன்னை மிகக் கடுமையாக விமர்சித்தவர்களைக்கூட, நடந்ததை மறந்துவிட்டு பாராட்டும் குணம் அவருக்கே உரித்தான தனித்துவம். இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும்.

மக்கள் மன்றத்தின் பேராதரவுடன் தமிழக சட்டப்பேரவையில் பெரும்பான்மையுடன் முதல்வராகிறார் மு.க.ஸ்டாலின். நாளைய ஸ்டாலின் எப்படி விஸ்வரூபம் எடுப்பார் என்பதை அடுத்த மக்களவைத் தேர்தல் முடிவு செய்யும்..!

கருத்துப் ப(ர)டம்

நன்றி: 'தினமலர்'



சொல்றாங்க...

"பிரதமருடன் நடந்த ஆலோசனையில் கைப்பாவைகளாக இருந்தனர் முதலமைச்சர்கள்"

மம்தா பானர்ஜி

(இப்போ மட்டுமா? அவங்க கைப்பாவைகளாகி ரொம்ப வருஷம் ஆகுதும்மா!)

"2024, 2026 தேர்தல்களிலும் தனித்தே போட்டி! எந்த சமரசமும் கிடையாது"

சீமான்

(ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரைன்னு சும்மாவா சொன்னாங்க?)

"பா.ஜ.க.வுக்கு 2022 தேர்தலில் உ.பி பதிலளிக்கும்!"

அகிலேஷ் யாதவ்

(உங்க மாநிலத்துக்கு நீங்க சொல்லிட்டீங்க. தென்னாடு எப்பவுமே பதில் தந்திடுமே!!)

"உயிர் உள்ளவரை அரசியலில் இருப்பேன்"

கமல்ஹாசன்

(சிங்கம் சிங்கிளா நிக்கிறது சரி! ஆனா கடைசி வரைக்குமே சிங்கிள்னா எப்பூடி?)

தணியுமா?

இஸ்ரேல் – பாலத்தீனம்: புதிய சண்டைகளுக்கு வித்திடும் பழைய சிக்கல்கள்

இஸ்ரேலியர்களுக்கு பாலத்தீனியர்களுக்கும் இடையே இப்போது நடந்து வரும் சண்டைகள் இருதரப்புக்கும் இடையே தீர்க்கப்படாத பழைய சிக்கல்களின் தொடர்ச்சிதான். மத்திய கிழக்கில் இது ஆறாத காயம். அதனால்தான் நேருக்கு நேரான மோதல்களும், ராக்கெட் தாக்குதல்களும் உயிரிழப்புகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

சமீப ஆண்டுகளாக சர்வதேச ஊடகங்களின் தலைப்புச் செய்திகளில் இஸ்ரேலிய — பாலத்தீன விவகாரம் இடம்பெறவில்லை என்பதற்காக பிரச்னை முடிவுக்கு வந்துவிட்டதாகப் பொருள் இல்லை. பல ஆண்டுகளாக மாத்திரமல்ல, பல தலைமுறைகளாப் பிரச்னையில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. வெறுப்பும் கசப்பும் குறைந்துவிடவில்லை.

யோர்தான் ஆற்றுக்கும் மத்திய தரைக்கடலுக்கும் இடைப்பட்ட நிலம் தங்களுக்கே சொந்தம் என்று கோரி யூதர்களும் அரபுக்களும் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக சண்டையிட்டு வருகிறார்கள். இஸ்ரேல் என்றொரு நாடு 1948—ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிறகு, பாலத்தீனியர்களைப் பல முறை தோல்வியடைச் செய்திருக்கிறது. ஆனாலும் இதுவரை வெற்றிபெற முடியவில்லை.

இந்தச் சிக்கல்களால் இருதரப்பினருக்குமே பாதுகாப்பு இல்லை. சில ஆண்டுகளுக்கு ஒரு முறை பெரிய சண்டை நடப்பது மட்டும் உறுதியாகிவிடுகிறது. கடந்த 15 ஆண்டுகளாக காஸாவையும் இஸ்ரேலையும் பிரிக்கும் வேலி நெடுக மோதல்கள் நடைபெற்று வருவது வழக்கமாகிவிட்டது.

ஜெருசலேமும் அங்குள்ள புனிதமான இடங்களும் வேறெங்கும் இல்லாத அளவுக்கு வன்முறைகளைத் தூண்டுவதற்கான காரணிகளாக அமையும் என்பது

அணையுமா?

ராம்குமார்

இந்த முறை நினைவுபடுத்தப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவர்கள், யூதர்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கு ஜெருசலேம் நகரம் புனிதமானது என்பது வெறும் மதம் சார்ந்த விவகாரம் மட்டுமல்ல. யூதர்கள் மற்றும் இஸ்லாமியர்களின் புனித இடங்கள், தேசிய அடையாளங்களும் கூட. இரண்டும் கல்வீசும் தொலைவில்தான் அமைந்திருக்கின்றன. அதற்கு நெருக்கமாக பாலத்தீனிய கிறிஸ்தவர்களின் புனித இடமான திருக்கல்லறைத் தேவாலாயம் அமைந்திருக்கிறது.

ஷேக் ஜார்ரா என்ற பகுதியில் இருந்து பாலத்தீனர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்ற அச்சமும் வன்முறைகள் தூண்டுப்பட்டதற்கு ஒரு காரணி. இந்த இடம் பழைய ஜெருசலேம் நகரின் எல்லைச் சுவர்களுக்கு வெளியே உள்ள பகுதி. இந்தப் பகுதி தங்களுக்கு உரியது என யூதக் குடியேறிகள் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள்.

ஜெருசலேமை யூதமயமாக்கும் இஸ்ரேலின் ஒரு முயற்சிதான் யூதக் குடியேற்றங்களை அதிகப்படுத்துவது. ஜெருசலேம் நகரைச் சுற்றி ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் சர்வதேச சட்டங்களை மீறும் விதமாக பெரிய யூதக் குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. ஜெருசலேம் பழைய நகரத்தின் பாலத்தீனியர்களின் பகுதிகளில் அதிக அளவு யூதர்களைக் குடியமர்த்துவதற்கு அரசும் யூதக் குடியேற்றங்களுக்கான அமைப்புகளும் தொடர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. ஆக்கிரமிப்பு பகுதியில் யூதக் குடியேற்றங்கள் அமைக்கப்படுவதை பாலத்தீனர்கள் எதிர்க்கிறார்கள்.

இப்படி ஏற்கெனவே எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் எண்ணெய் ஊற்றும் விதமாக கடந்த

சில வாரங்களாக பாலத்தீனர்கள் மீது காவல்துறை அடக்குமுறைகளில் ஈடுபட்டது. மெக்காவுக்கும் மதீனாவுக்கும் அடுத்தபடியாக இஸ்லாமியர்களால் புனிதத் தலமாகக் கருதப்படும் அல்—அக்சா மசூதிக்குள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும், கையெறி குண்டுகளையும் காவல்துறையினர் வீசினார்கள்.

பதிலுக்கு காஸாவில் இயங்கும் ஹமாஸ் இயக்கம் வழக்கத்துக்கு மாறாக இஸ்ரேலியப் படைகள் அல்—அக்சா மசூதியை விட்டும் ஷேக் ஜார்ரா பகுதியை விட்டும் வெளியேறுவதற்கு கெடு விதித்தது. பின்னர் ஜெருசலேமை நோக்கி ராக்கெட்டுகள் மூலம் தாக்குதல்களை நடத்தியது.

"காஸாவின் பயங்கரவாத இயக்கம் எல்லை மீறிவிட்டது. பெருஞ்சக்தியுடன் இஸ்ரேல் பதில் கொடுக்கும்" என்று இஸ்ரேலியப் பிரதமர் பெஞ் சமின் நெதன்யாகு ட்விட்டரில் பதிவிட்டார்.

பாலத்தீனப் பகுதிகளில் இயங்கி வரும் பல்வேறு ஆயுதக் குழுக்களில் மிகப் பெரியது ஹமாஸ்.

இந்தப் பெயர் இஸ்லாமிய கிளர்ச்சி இயக்கம் என்பதன் அரேபியச் சுருக்கத்தில் இருந்து பெறப்பட்டது. மேற்குக் கரையையும் காசா நிலப் பகுதியையும் ஆக்கிரமிக்கும் இஸ்ரேலிய முயற்சிக்கு எதிரான முதல் பாலத்தீன எழுச்சி தொடங்கிய பிறகு 1987—ஆம் ஆண்டில் உருவானது ஹமாஸ். இஸ்ரேலை அழிப்பதே தங்களது நோக்கம் என இதன் சாசனம் கூறுகிறது.

ஹமாஸ் இரு வேறு பணிகளைச் செய்து வருகிறது. ஒன்று இஸ் அட்—டின் அல்—காசம் என்ற தனது ராணுவப் பிரிவின் மூலம் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை நடத்துவது. மற்றொன்று நலத்திட்டங்கள் மூலம் சமூகப் பணிகளைச் செய்வது.

ஆனால் 2005—ஆம் ஆண்டில் காசா பகுதியில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு ஹமாஸ் இயக்கம் அரசியல் நடவடிக்கைகளில் இறங்கியது. 2006—ஆம் ஆண்டு நடந்த பாலத்தீன தேர்தலில் ஹமாஸ் இயக்கம் வெற்றி பெற்றது. கூட்டணி அரசிலும் பங்கேற்றது. அதிபர் முகமது அப்பாஸின் ஃபதா இயக்கத்தைப் பகைத்துக் கொண்டதால் அரசில் இருந்து வெளியேற்றப்பட்டு காசாவுக்குள் முடங்கியது.

அதன் பிறகு இஸ்ரேலுடன் மூன்று பெரிய போர்களில் காசா ஈடுபட்டிருக்கிறது. இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையே அடைபட்டிருக்கும் காசா பகுதிக்குள் ஹமாஸ் இயக்கத்தை தனிமைப்படுத்துவதற்காகவும் தாக்குதல்களைத் நிறுத்தவதற்காகவும் இஸ்ரேல் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஹமாஸ் இயக்கத்தை முழுமையாகவும், சில நேரங்களில் அதன் ராணுவப் பிரிவை மட்டும் பயங்கரவாத இயக்கமாக இஸ்ரேலும், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன் ஆகிய நாடுகள் பட்டியலிடுகின்றன. 1996—ஆம் ஆண்டு ஜெருசலேமில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலுக்கு ஹமாஸ் பொறுப்பேற்றது

இஸ்ரேலும் பாலத்தீன நிர்வாகமும் எத்தனையோ நடவடிக்கைளை ஹமாஸுக்கு எதிராக எடுத்தன. அதைக் கட்டுப்படுத்த முயற்சித்தன. ஆனால் தற்கொலைத் தாக்குதல்கள் மூலமாக இஸ்ரேலுக்கும் — பாலத்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையேயான அமைதி உடன்பாட்டை தகர்த்தது ஹமாஸ்.

1995—ஆம் ஆண்டு டிசம்பரில் ஹமாஸின் வெடிகுண்டு தயாரிப்பாளரான யாயா ஆயாஷை இஸ்ரேல் கொன்றது. இதற்குப் பழிவாங்கும் வகையில் 1996—ஆம் ஆண்டு பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பல்வேறு தற்கொலைத் தாக்குதல்களை ஹமாஸ் இயக்கம் நடத்தியது. சுமார் 60க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டார்கள்.

ஓஸ்லோ உடன்பாட்டுக்குப் பிறகு, குறிப்பாக அமெரிக்க அதிபர் பில் கிளின்டனின் கேம்ப் டேவிட் பேச்சுகள் தோல்வியடைந்த பிறகும், இரண்டாவது பாலத்தீன எழுச்சியைச் தொடர்ந்தும் ஹமாஸ் இயக்கம் வலுவடைந்தது.

ஃபதா அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்த பாலத்தீன நிர்வாகத்தில் ஊழலும் நிர்வாகச் சீர்கேடும் நிறைந்திருப்பதாக அதிருப்தி எழுந்த நிலையில், ஹமாஸ் இயக்கம் மருத்துமனைகளும் பள்ளிகளையும் உருவாக்கியது. 2004—ஆம் ஆண்டு நடந்த ராக்கெட் தாக்குதலில் ஹமாஸ் மதத் தலைவர் ஷேக் அகமது யாசின் கொல்லப்பட்டார்

இரண்டாவது பாலஸ்தீன எழுச்சியின் தொடக்க ஆண்டுகளில் ஹமாஸ் இயக்கத்தின் தற்கொலைத் தாக்குதல்களை பாலத்தீனர்கள் பரவலாக ஆதரித்தனர். அவற்றை தியாக நடவடிக்கைகள் என்று அவர்கள் கருதினார்கள். மேற்குக் கரையில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்குப் பழிவாங்கப்படுவதாக எண்ணினார்கள்.

2004—ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஹமாஸ் மதத் தலைவர் ஷேக் அகமது யாசின் மற்றும் அவருக்கு அடுத்த நிலையில் இருந்த அப்துல் அஜீஸ் அல்—ரேன்டிஸ்ஸி ஆகியோரை ஏவுகணைகள் மூலம் கொன்றது இஸ்ரேல்.

அதே ஆண்டில் ஃபதா இயக்கத்தின் தலைவர் யாசர் அராஃபத் மரணமடைந்தார். பாலத்தீன நிர்வாகத்துக்கு முகமது அப்பாஸ் தலைவராக நியமிக்கப்பட்டார். ஹமாஸின் ராக்கெட் தாக்குதல்கள் மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதாகக் கருதக்கூடியவர் அவர்.

2006—ஆம் ஆண்டு நடந்த பாலத்தீன நாடாளுமன்றத் தேர்தலில் ஹமாஸ் இயக்கம் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றது. ஃபதா இயக்கத்துக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் அதிகார மோதல் தொடங்கியது.

தேர்தலில் வெற்றிபெற்றிருந்த ஹமாஸ் இயக்கம், அதற்கு முன் பாலத்தீன நிர்வாகத்தால் கையெழுத்திடப்பட்டிருந்த அனைத்து உடன்பாடுகளையும் எதிர்த்தது. இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிப்பது உள்ளிட்டவையும் அவற்றில் அடங்கும். அதிபர் முகமது அப்பாஸ் தலைமையிலான பாலத்தீன அரசில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியா (இடது) சிறிது காலம் பிரதமராகப் பணியாற்றினார்.

இஸ்ரேல் நாட்டை உள்ளடக்கிய வரலாற்று ரீதியிலான நிலப்பரப்பே பாலத்தீனம் என ஹமாஸின் சாசனம் வரையறுக்கிறது. யூத நாட்டுடன் எந்தவிதமான அமைதி உடன்பாடும் கூடாது என்கிறது.

யூத மக்களுக்கு எதிரான கடுமையான கருத்துகள் அந்த சாசனத்தில் கூறப்பட்டுள்ளன. அதனால் யூத எதிர்ப்புக் கொள்கையைக் கொண்ட அமைப்பு என ஹமாஸ் மீது விமர்சனம் வைக்கப்படுகிறது.

2017—ஆம் ஆண்டு ஹமாஸ் இயக்கம் தனது புதிய கொள்கைகளைக் கொண்ட ஆவணத்தை வெளியிட்டது. 1988—ஆம் ஆண்டு சாசனத்தின் பல்வேறு அம்சங்களில் தீவிரத்தன்மை இதில் குறைந்திருந்தது. நிலைப்பாடுகள் மாறியிருந்தன. ஆயினும் இஸ்ரேல் என்றொரு நாட்டை அங்கீரிப்பதாயில்லை. ஆனால் காசா, மேற்குக்கரை, கிழக்கு ஜெருசலேம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பாலத்தீன நாட்டை உருவாக்குவதை ஒப்புக் கொண்டது.

ஹமாஸின் சண்டை, யூதர்களுக்கு எதிரானதல்ல, "ஸியோனிச ஆக்கிரிப்பாளர்களுக்கு" எதிரானது என்கிறது ஹமாஸின் புதிய ஆவணம். ஆனால் இஸ்ரேல் இதை ஏற்கவில்லை. உலகை ஏமாற்றும் முயற்சி என்று விமர்சித்தது. 2007—ஆம் ஆண்டில் ஃபதா ஆதரவுப் படைகளை வெளியேற்றிய பிறகு காசா பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது ஹமாஸ்.

ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேலும் அதற்கு ஆதரவான மேற்கு நாடுகளும் பல்வேறு அரசியல் மற்றும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன. 2007—ஆம் ஆண்டு காசா துண்டு நிலப் பகுதியில் இருந்து ஃபதா இயக்கத்துக்கு ஆதரவான படைகளை ஹமாஸ் இயக்கம் வெளியேற்றியது. பதிலடியாக காஸாவின் எல்லைகளில் தடைகளைக் கடுமையாக்கியது இஸ்ரேல். ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலை நோக்கி ராக்கெட்டுகளை ஏவியது. இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது.

காசா பகுதியில் இருந்து நடத்தப்படும் அனைத்து ராக்கெட் தாக்குதல்களுக்கும் ஹமாஸ் இயக்கமே காரணம் என்கிறது இஸ்ரேல். இதுவரை காசா பகுதிக்குள் மூன்று முறை ராணுவ நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்கிறது.

2008—ஆம் ஆண்டு டிசம்பரில் காசா பகுதியில் இருந்து ராக்கெட் தாக்குதல்களைத் தடுப்பதற்காக ஆபரேஷன் கேஸ்ட் லீட் என்ற பெயரில் ராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் நடத்தியது. 22 நாள்கள் நடந்த இந்தப் போரில் 1,300 பாலத்தீனர்களும் 13 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டார்கள்.

ஹமாஸும் பிற இயக்கங்களும் அவ்வப்போது இஸ்ரேலை நோக்கி ராக்கெட்டுகளை ஏவுகின்றன. இதேபோன்றதொரு காரணத்துக்காக 2012—ஆம் ஆண்டில் ஆபரேஷன் பில்லர் டிஃபன்ஸ் என்ற பெயரில் காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. அப்போது நடந்த வான்வெளி தாக்குதலில் காசம் படைப் பிரிவின் தலைவர் அகமது ஜபாரி கொல்லப்பட்டார். 8 நாள்கள் நீடித்த சண்டையில் 170 பாலத்தீனர்களும் 6 இஸ்ரேலியர்களும் பலியானார்கள்.இந்த இரு சண்டைகளில் இருந்து மீண்டு வந்தது ஹமாஸ். ராணுவ ரீதியாக பின்னடைவு ஏற்பட்டாலும் இஸ்ரேலை எதிர்த்த இயக்கம் என்ற வகையில் பாலத்தீனர்களின் பரவலான ஆதரவு ஹமாஸுக்குக் கிடைத்தது.

காசா பகுதியைச் சுற்றி கடுமையான தடைகளை இஸ்ரேல் விதித்திருந்தாலும், ஹமாஸ் இயக்கம் காசாவை தன்னுடைய கட்டுப்பாட்டில்

வைத்திருக்கிறது. ராக்கெட்டின் வலிமையையும் அதிகரித்திருக்கிறது. ஃபதா இயக்கத்துடனான அமைதி முயற்சிகளும் தோல்வியடைந்துவிட்டன.

இந்நிலையில், இஸ்ரேல் மற்றும் பாலத்தீனத்திற்கு இடையே கடந்த சில நாட்களாக நடைபெற்று வந்து மோதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதுவரை நடைபெற்ற மோதலால் சுமார் 240 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் பெரும்பாலானவர்கள் காசாவை சேர்ந்தவர்கள்

மோதல் முடிவுக்கு வந்தவுடன் பாலத்தீன மக்கள் காசாவின் சாலைகளுக்கு வந்து "இறைவன் சிறப்பானவர், இறைவனுக்கு நன்றி" என கோஷம் எழுப்பினர். இந்த சண்டையில் இஸ்ரேல் மற்றும் பாலத்தீனத்தை சேர்ந்த ஹமாஸ் ஆயுதக் குழு

என இரு தரப்புமே தாங்கள் வெற்றி பெற்றதாக அறிவித்து கொண்டன.

சண்டை நிறுத்தம், அடுத்தகட்டத்திற்கு செல்வதற்கான "ஓர் உண்மையான வாய்ப்பை" வழங்குகிறது என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

சண்டை நிறுத்தத்திற்கு என்ன காரணம்?

இருதரப்பினரும் தொடர்ந்து சர்வதேச அழுத்தங்களை பெற்று வந்தனர். மோதல்கள் பெரிதும் குறைய வேண்டும் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வலியுறுத்தியிருந்தார்.

எகிப்து, கத்தார் மற்றும் ஐ.நா, இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இயக்கத்தினருக்கு இடையேயான சண்டை நிறுத்த பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் செய்து வைத்தன.

எகிப்தின் அதிபர் சிசி இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட காசா பிராந்தியத்திற்கு, சண்டை நிறுத்த முயற்சிகளில் ஈடுபட இரு பாதுகாப்பு அதிகாரிகளை அனுப்பி வைத்தார்.

வெள்ளை மாளிகையில் பேசிய அமெரிக்க அதிபர் ஜோ பைடன், சண்டை நிறுத்த ஒப்பந்தத்திற்கு பிறகு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாஹுவை தொலைப்பேசியில் அழைத்து பாராட்டியதாக தெரிவித்தார்.

"பல அப்பாவி உயிர்களை பலிவாங்கிய ஹமாஸ் குழுவினர் மற்றும் காசாவிலிருந்து இயங்கும் பிற பயங்கரவாத அமைப்புகளின் கண்மூடித்தனமான ராக்கெட் தாக்குதல்களிலிருந்து தற்காத்துக் கொள்ளும் இஸ்ரேலின் உரிமையை அமெரிக்கா ஆதரிக்கிறது." என தெரிவித்தார்.

மேலும், அமெரிக்காவின் ஆதரவுடன் இஸ்ரேல் தயாரித்த ஏவுகணைகளை தடுக்கும் பாதுகாப்பு அமைப்பு குறித்து நேதன்யாஹு பாராட்டியதாக பைடன் தெரிவித்தார்.

"இஸ்ரேல் மற்றும் பாலத்தீனம் இருதரப்பிலும் தங்களின் அன்பிற்குரியவர்களை இழந்த குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன். காயமடைந்தவர்கள் பூரணமாக குணமடைவார்கள் என நம்புகிறேன்," என்றும் பைடன் தெரிவித்தார்.

காசாவில் மறுகட்டமைப்புகளுக்கான நடவடிக்கை மற்றும் மனிதநேய உதவிகள் ஆகிய நடவடிக்கைகளில் ஐ.நா.விற்கு உதவ அமெரிக்கா தயாராக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். மேலும் இந்த நடவடிக்கைகள் பாலத்தீன அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்படுமே தவிர ஹமாஸ் ஆயுதக் குழுவினருடன் அல்ல என்றும் தெரிவித்தார்.

இதுகுறித்து பேசிய எகிப்து அதிபர் சிசி, பைடனின் தொலைப்பேசி அழைப்பை "மிகுந்த மகிழ்ச்சியுடன்" எதிர்கொண்டதாகவும், இருவரும் இஸ்ரேல்—காசா மோதலை நிறுத்துவதற்கான திட்டங்கள் குறித்து பேசியதாகவும் தெரிவித்தார்.

கொரோனா

இந்தியா கொரோனா சுழலில் சிக்கிக்கொண்டது எப்படி? படிப்பினை என்ன?

"தொற்றுநோயின் இறுதிக்கட்டத்தில்" இருப்பதாக இந்தியாவின் சுகாதார அமைச்சர் அறிவித்தார். உண்மையில் மீண்டும் மீண்டும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. அவை

- ஆக்ஸிஜனின் போதிய சப்ளை இல்லை, அரசு மருத்துவமனையில் படுக்கைகள் போதுமான அளவிற்கு இல்லை என்று கடந்த ஆண்டு நவம்பர் மாதமே சுகாதாரத்துறை தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழு தெரிவித்தது.

- வரவிருக்கும் 'கோவிட் சுனாமி' குறித்து தாங்கள் அஞ்சுவதாக பல வல்லுநர்கள், கடந்த பிப்ரவரி மாதத்திலேயே பிபிசியிடம் தெரிவித்தனர்.

- கொரோனா வைரஸின் அதிகம் பரவக்கூடிய திரிபு வகை நாட்டில் வேகமாகப் பரவி வருவதாக, அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட ஒரு நிபுணர் குழு, கடந்த மார்ச் மாத தொடக்கத்தில் அதிகாரிகளை எச்சரித்தது. ஆனால் குறிப்பிடத்தக்க கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று குழுவின் ஒரு ஆராய்ச்சியாளர் தெரிவித்த குற்றச்சாட்டுகள் குறித்து அரசு எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை.

கடந்த ஆண்டு செப்டம்பரில் 90,000 ஆக நாட்டின் தினசரி தொற்று எண்ணிக்கை, ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 20 ஆயிரத்திற்கும் கீழே சென்றது. கோவிட் தோற்கடிக்கப்பட்டதாக பிரதமர் நரேந்திர மோதி அறிவித்தார். பொது இடங்கள் அனைத்தும் திறக்கப்பட்டன. விரைவில் மக்கள், கோவிட் பாதுகாப்பு நெறிமுறைகளை கடைப்பிடிப்பதை கைவிடத்தொடங்கினர். அரசிடமிருந்து வந்த குழப்பமான சிமிஞ்சைகள் ஓரளவு இதற்குக் காரணம் என்று சொல்லலாம்.

மோதி தனது செய்திகளில், முக கவசம் அணியுமாறும், சமூக இடைவெளியை கடைப்பிடிக்குமாறும் மக்களைக் கேட்டுக் கொண்டாலும், ஐந்து மாநிலங்களில் தனது

அரசியல்!

கதிரேசன்

தேர்தல் பிரசாரத்தின்போது முக கவசம் அணியாத பெருந்திரளான மக்களுக்கிடையேதான் அவர் உரையாற்றினார். மோதியின் பல அமைச்சர்களும் முக கவசம் அணியாமல் பெரிய பொதுக்கூட்டங்களில் உரையாற்றினர்கள். லட்சக்கணக்கானோர் கலந்து கொள்ளும் கும்பமேளா என்ற இந்து திருவிழாவை நடத்த அனுமதிக்கப்பட்டது.

இதயத்தை கசக்கிப்பிழியும் காட்சிகள் — சிகிச்சை கிடைக்காமல் உயிரிழக்கும் மக்கள், இந்தியாவின் சுகாதார உள்கட்டமைப்பின் மோசமான உண்மை நிலையைக்காட்டுகிறது.

"அவர்கள் பிரசாரம் செய்ததற்கும், கடைப்பிடித்தவற்றிற்கும் இடையே எந்த தொடர்பும் இருக்கவில்லை" என்று பொது கொள்கை மற்றும் சுகாதார அமைப்பு நிபுணர் டாக்டர் சந்திரகாந்த் லஹாரியா கூறுகிறார். ஆனால், இந்தத்துயரக்கதையில் இன்னும் பல விஷயங்கள் உள்ளன: இந்த பேரழிவு, இந்தியாவில் பொது சுகாதார அமைப்பிற்கான குறைவான நிதிஒதுக்கீடு மற்றும் புறக்கணிப்பை அம்பலப்படுத்தியுள்ளது.

மருத்துவமனைகளுக்கு வெளியே காணப்பட்ட "இந்தியாவின்'பொது சுகாதார உள்கட்டமைப்பு' எப்போதுமே வலுவற்றதாகவே இருந்துள்ளது. ஆனால் பணக்காரர்களும் நடுத்தர வர்க்க மக்களும் இப்போதுதான் அதை உணர்ந்துள்ளனர்," என்று ஒரு நிபுணர் சொல்கிறார்.

வசதியானவர்கள் தங்கள் சிகிச்சைக்கு எப்போதுமே தனியார் மருத்துவமனைகளை நம்பியிருக்கிறார்கள். அதே நேரத்தில் ஏழைகள் மருத்துவரின் சந்திப்பு முன்பதிவைப் பெறக் கூட

போராடுகிறார்கள்.

சுகாதார காப்பீடு மற்றும் ஏழைகளுக்கான மானிய மருந்துகள் போன்ற சமீபத்திய திட்டங்களும் உதவவில்லை. ஏனெனில் மருத்துவ ஊழியர்கள் அல்லது மருத்துவமனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திசையில் பல தசாப்தங்களாக ஏறக்குறைய எதுவுமே செய்யப்படவில்லை. கடந்த ஆறு ஆண்டுகளாக , தனியார் மற்றும் அரசுத்துறை ஆகிய இரண்டையும் சேர்த்து சுகாதாரம் தொடர்பான இந்தியாவின் செலவு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 3.6% ஆகும். இது ஐந்து பிரிக்ஸ் நாடுகளில் மிகக் குறைந்த சதவீதமாகும்: 2018 ல் பிரேசில் அதிகமாக 9.2%, தென்னாப்பிரிக்கா 8.1%, ரஷ்யா 5.3% மற்றும் சீனா 5%. வளர்ந்த நாடுகள் தங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிக அதிகமான விகிதத்தை ஆரோக்கியத்திற்காக செலவிடுகின்றன. உதாரணமாக, 2018 ஆம் ஆண்டில், அமெரிக்காவின் செலவு 16.9%, ஜெர்மனி 11.2%. இலங்கை (3.76%), தாய்லாந்து (3.79%) போன்ற சிறிய நாடுகள் கூட இந்தியாவை விட அதிகமாக செலவிடுகின்றன. இந்தியாவில் 10,000 பேருக்கு 10 க்கும் குறைவான மருத்துவர்கள் உள்ளனர். சில மாநிலங்களில் இந்த எண்ணிக்கை ஐந்துக்கும் குறைவு.

தயார் நிலை

கடந்த ஆண்டு பல "அதிகாரம் பெற்ற குழுக்கள்" அடுத்த கொரோனா வைரஸ் அலையைச் சமாளிக்கத் தேவையான முன்னேற்பாடுகளை கண்காணித்துக்கொண்டிருந்தன. இந்த நிலையில் ஆக்சிஜன், படுக்கைகள் மற்றும் மருந்துகளின் பற்றாக்குறையானது வல்லுநர்களை குழப்பமடையச் செய்துள்ளது."முதல் அலை குறைந்துகொண்டிருந்த வேளையில் அவர்கள் இரண்டாவது அலைக்கு தயார்படுத்திக் கொண்டிருக்க வேண்டும். மிக மோசமான சூழலுக்கு தயார்நிலையில் இருந்திருக்கவேண்டும். அவர்கள் ஆக்சிஜன் மற்றும் ரெமெடிசிவர் மருந்து ஆகியவற்றின் கையிருப்பை கணக்கில்கொண்டு உற்பத்தித் திறனை அதிகரித்திருக்க வேண்டும்," என்று மகாராஷ்டிரா மாநில முன்னாள் சுகாதாரச்செயலர் மகேஷ் ஜகாடே பிபிசியிடம் தெரிவித்தார்.

அதிகரித்துள்ள தேவையை சமாளிக்கத்தேவையான ஆக்ஸிஜனை இந்தியா உற்பத்தி செய்கிறது, போக்குவரத்துதான் பிரச்சனை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால் இதை முன்பே சரிசெய்திருக்க வேண்டும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். அரசு இப்போது ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு ஆக்ஸிஜனைக்கொண்டுசெல்லும் சிறப்புரயில்களை இயக்குகிறது மற்றும் தொழிற்சாலைகளில் ஆக்சிஜன் பயன்பாட்டை நிறுத்தியுள்ளது. ஆனால்



ஆக்சிஜன் பற்றாக்குறையால் பல நோயாளிகள் இறந்த பின்னரே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"இதன் விளைவு என்னவென்றால், நோயாளியின் குடும்பத்தினர் கள்ளச்சந்தையில் ஒரு ஆக்சிஜன் சிலிண்டரைப் பெறுவதற்கு ஆயிரக்கணக்கான ரூபாயை செலவழிக்கிறார்கள். பின்னர் அதை நிரப்ப பல மணிநேரங்கள் வரிசையில் நிற்கிறார்கள்" என்று டாக்டர் லஹாரியா சுட்டிக்காட்டுகிறார். இதற்கிடையில் வசதிபடைத்தவர்கள், ரெம்டெசிவிர் மற்றும் டோசிலிசுமாப் போன்ற மருந்துகளை வாங்குவதற்கு அதிக தொகையை செலவு செய்கின்றனர்.

ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் "தேவை வறண்டுவிட்டது" என்று ரெம்டெசிவிர் தயாரிக்கும் மருந்து நிறுவனத்தின் நிர்வாகி ஒருவர் கூறினார். "அரசு ஆர்டர் செய்திருந்தால் நாங்கள் இருப்பு வைத்திருப்போம். எந்த பற்றாக்குறையும் இருந்திருக்காது. இப்போது நாங்கள் உற்பத்தியை அதிகரித்துள்ளோம், ஆனால் தேவை கணிசமாக வளர்ந்து விட்டது," என்று அவர் மேலும் தெரிவித்தார்.இதற்கு நேர்மாறாக தென் மாநிலமான கேரளா இரண்டாவது அலைக்கு முன்கூட்டியே திட்டமிட்டது. கடந்த ஆண்டு அக்டோபரில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதால் மாநிலத்தில் ஆக்ஸிஜனுக்கு பற்றாக்குறை இல்லை என்று மாநில கோவிட் பணிக்குழுவின் ஒரு பகுதியாக இருக்கும் டாக்டர் ஏ. ஃபத்தாஹுதீன் கூறுகிறார்.

அதிக தொற்று ஏற்படுத்தக்கூடிய மற்றும் ஆபத்தான புதிய உருமாற்றங்களை அறிய வைரஸின் மரபணு தொடரை வரிசைப்படுத்தல் என்பது ஒரு முக்கியமான படியாகும், இந்திய ஷிகிஸிஷி—சிஷீக்ஷி—2 ஜெனோமிக் கன்சோர்டியா கடந்த ஆண்டு அமைக்கப்பட்டது. மேலும் இது நாட்டில் 10 ஆய்வகங்களை இதற்கென ஒன்றாகக் கொண்டு வந்துள்ளது.ஆனால் இந்த குழு ஆரம்பத்தில் நிதி பெற சிரமப்பட்டதாக கூறப்படுகிறது. இந்தியா வைரஸின் திரிபுகளை மிகவும் தாமதமாகவே பார்க்கத் தொடங்கியது. வரிசைப்படுத்தும் முயற்சிகள் 2021 பிப்ரவரி நடுப்பகுதியில்தான் "சரியாகத் தொடங்கின" என்று வைராலஜிஸ்ட் டாக்டர் ஜமீல் கூறுகிறார். இந்த நேரத்தில் மொத்த மாதிரிகளில் 1% க்கும் மேலாக இந்தியா வரிசைப்படுத்துகிறது.

"ஒப்பிடுகையில், இங்கிலாந்து தொற்றுநோயின் உச்சத்தில் 5—6% வரை செய்தது. ஆனால் உடனடியாக அத்தகைய திறனை உருவாக்க முடியாது," என்று அவர் கூறினார். இருப்பினும், தடுப்பூசியே இந்தியாவின் முக்கிய நம்பிக்கையாக இருந்து வருகிறது.

"கோவிட்டுக்கு எதிரான போராட்டத்தில் திறன்வாய்ந்த மற்றும் மிகச் சிறந்த மாற்று வழி, மக்களுக்கு சீக்கிரம் தடுப்பூசி போடுவதாகும். இதனால் பெரும்பான்மையானவர்களுக்கு மருத்துவமனை பராமரிப்பு தேவைப்படாது. எனவே சுகாதார அமைப்பின் மீது அதிக சுமை ஏற்படாது,"என்கிறார் அவர். இந்தியா



ஆரம்பத்தில் ஜூலை மாதத்திற்குள் 300 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசி போட விரும்பியது. "ஆனால் இந்த திட்டத்தை செயல்படுத்தத்தேவையான தடுப்பூசிகளை வாங்கி விநியோகம் செய்வது தொடர்பாக அரசு சரியாக திட்டமிடவில்லை," என்று டாக்டர் லஹாரியா கூறுகிறார்.

1.4 பில்லியன் மக்கள்தொகையில் சுமார் 26 மில்லியன் மக்களுக்கு மட்டுமே இதுவரை தடுப்பூசி போடப்பட்டுள்ளது. சுமார் 124 மில்லியன் மக்கள் ஒரு டோஸை மட்டுமே பெற்றுள்ளனர். இந்தியா கோடிக்கணக்கான டோஸ்களுக்கான ஆர்டர்களை அளித்துள்ளது. ஆனால் அது உண்மையில் தேவைப்படுவதை விட மிகக் குறைவு. 45 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் அதாவது சுமார் 440 மில்லியன் மக்களுக்கு முழுமையாக தடுப்பூசி போட மத்திய அரசுக்கு 615 மில்லியன் டோஸ் தேவை. 18 முதல் 44 வயதிற்குள் 622 மில்லியன் மக்கள் உள்ளனர். அவர்களுக்கு தடுப்பூசி போட 1.2 பில்லியன் டோஸ் தேவைப்படுகிறது. சர்வதேச கடமைகளிலிருந்து பின்வாங்கி தடுப்பூசி ஏற்றுமதியையும் அரசு ரத்து செய்துள்ளது.



தடுப்பூசிகளை தயாரிக்கும் பணியில், பயலாஜிக்கல்—இ மற்றும் அரசு நடத்தும் ஹாஃப்கைன் கழகம் போன்ற பிற நிறுவனங்களையும் அரசு இணைத்துள்ளது. உற்பத்தியை அதிகரிக்க சீரம் இன்ஸ்டிடியூட் ஆஃப் இந்தியாவிற்கு 609 மில்லியன் டாலர் கடன் ஆதரவை அரசு வழங்கியுள்ளது. இந்த நிறுவனம் ஆக்ஸ்போர்டு—அஸ்ட்ராஜெனெகா ஊசியை தயாரிக்கிறது. இது இந்தியாவில் கோவிஷீல்ட் என்ற பெயரில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் விலைமதிப்பற்ற உயிர்களை காப்பாற்றும் பொருட்டு அந்த நிதி முன்பே அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

SAKTHI CASH & CARRY
245-247 High Street North,
East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡ്ലി / ദോശ മാവ്
CRISPY DOSA • SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा
SWATHI CASH & CARRY
306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

திராவிடக் கட்சிகளின் மேலாதிக்கம்

திராவிடக் கட்சிகளின் ஆளுமை மிக்க தலைவர்களான ஜெயலலிதாவும் மு. கருணாநிதியும் மறைந்ததற்குப் பிறகு தமிழ்நாட்டு சட்டமன்றத்துக்கு நடைபெற்ற தேர்தலில் அந்தக் கட்சிகள் தங்களின் தேர்தல் மேலாதிக்கத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றன. பதிவான வாக்குகளில் திமுகவும் அதிமுகவும் மட்டும் 67.1% வாக்குகள் கிடைத்திருக்கின்றன. அமமுக, மதிமுக ஆகிய சிறிய திராவிடக் கட்சிகளைச் சேர்த்தால் மொத்தம் 70.4% வாக்குகள். இதுதான் திராவிடக் கட்சிகள் இதுவரை பெற்றிருக்கும் இரண்டாவது அதிகபட்ச வாக்குவீதம்; திராவிடக் கட்சிகள் 2016—ல் பெற்ற இதுவரையிலான அதிகபட்ச வாக்குவீதமான 73.9%—ஐவிட இது 3.5% மட்டுமே குறைவாகும். திமுக ஆட்சிக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டதைவிட திராவிடக் கட்சிகள் தேர்தல் மேலாதிக்கத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டிருப்பது நம் கவனத்தை அதிகமாகக் கவர்கிறது.

எதிர்பார்ப்புகள், விளைவுகள்

அதிமுகவின் ஆதரவுத் தளம் திமுகவினுடையதைவிட குறைந்திருப்பதாகத் தோன்றுகிறது; ஏனெனில் அந்தக் கட்சி தொடர்ந்து வந்த இரண்டு தலைவர்களின் (எம்ஜிஆர், ஜெயலலிதா) ஆளுமைக் கவர்ச்சியையே சார்ந்திருந்தது, கருணாநிதி தனக்குப் பிறகு ஒரு தொடர்ச்சியை விட்டுச்சென்றதுபோல் ஜெயலலிதா தனக்குப் பிறகு கட்சியை வழிநடத்தக்கூடிய ஒரு தலைமையை உருவாக்கவில்லை. மேலும் கட்சியின் கட்டமைப்பும் பலவீனமாக இருந்தது. ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அந்தக் கட்சியின் தலைவர்கள் பெரிதும் ஒன்றிய அரசையே சார்ந்திருந்தார்கள், மாநிலத்தின் மிதமான மக்கள்நல பாணியை அவர்களால் போதிய அளவுக்குத் தக்கவைக்க முடியவில்லை, ஒன்றிய அரசின் எதேச்சாதிகாரத்தனத்தை, இந்துப் பெரும்பான்மைவாதத்தை, முழுமையான நவதாராளமயக் கொள்கைகளை அவர்கள் ஆதரித்தார்கள் அல்லது கிட்டத்தட்ட எதிர்க்கவே இல்லை. குடியுரிமை (திருத்தச்) சட்டம், ஜம்மு & காஷ்மீரை ஒன்றியப் பிரதேசங்களாக ஆக்கியது, பள்ளிக்கல்வியின் வெவ்வேறு தேர்வுகளை மையப்படுத்தியது, விவசாய மானியங்களைக் குறைத்தது, வேளாண்மையைப் பெருநிறுவனமயத்தை நோக்கி முடுக்கிவிட்டது போன்றவைதான் இந்தக் கொள்கைகள்.

அதிமுகவை திமுக வெற்றிகொண்டது என்றாலும் அதை மிகப் பெரிய வெற்றி என்று சொல்ல முடியாது. 3.1% வாக்கு வித்தியாசத்தில்தான் திமுக வென்றிருக்கிறது. திமுகவுக்கு 35.1% வாக்குகளும் அதிமுகவுக்கு 32% வாக்குகளும் கிடைத்திருக்கின்றன. 2016—ம் ஆண்டு தேர்தலைவிட திமுக தற்போது 3.2% வாக்குகள் அதிகமாகப் பெற்றிருக்கிறது, அதிமுக 9.1% வாக்குகளை இழந்திருக்கிறது. பிரதானக் கட்சிகளுக்கிடையிலான 12.3% வாக்குகள் நகர்வு என்பது முக்கியமானது. இரண்டு பெரிய கூட்டணிகளுக்கு இடையிலான வாக்கு வித்தியாசம் 5.7% ஆகும். திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி 45.4% வாக்குகளைப் பெற்றது; அதிமுக தலைமையிலான

நரேந்திர சுப்பிரமணியன்

தேசிய ஜனநாயகக் கூட்டணி 39.7% வாக்குகளைப் பெற்றது. இரண்டையும் கூட்டினால் கிடைக்கும் 85.1% வாக்கு வீதமானது தேர்தல்களில் திராவிடக் கட்சிகளின் மேலாதிக்கம் தொடர்வதைக் காட்டுகிறது. வட தமிழகத்திலும் காவிரிப் படுகையிலும் திமுக ஆதிக்கம் நிலவிய அதே சமயத்தில் மேற்குப் பகுதியில் அதிமுக வலுவாகக் காணப்பட்டது; ஆனால், தெற்கில் அதன் ஆதிக்கம் குறைந்துவிட்டது.

இதற்கு மாறாக, உறுதியற்ற தலைமை மாற்றத்தால் பலனடையலாம் என்று நம்பிய அரசியல் கட்சிகள் பெரிதும் வளரவில்லை. பழைய தேசிய கட்சிகள் தேங்கிப்போயின. காங்கிரஸ் கட்சியின் வாக்கு வீதம் 6.5%—லிருந்து 4.3%—ஆகக் குறைந்தது, முன்பைவிட குறைந்த தொகுதிகளில் போட்டியிட்டது இதற்குக் காரணம் (2016 தேர்தலில் 41 இடங்கள், 2021—ல் 25) 1989—ல் 20.2% வாக்குகள் பெற்றதிலிருந்து சீராகக் கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. பாஜக 2.9%—லிருந்து 2.6%—ஆகக் குறைந்திருக்கிறது, ஏனெனில் 2016—ல் எல்லாத் தொகுதிகளிலும் நின்ற அக்கட்சி இந்தத் தேர்தலில் 20 இடங்களில் மட்டுமே போட்டியிட்டது. இதுவே 2001 தேர்தலில் அதிகபட்சமாக 3.2% வாக்குகளை அந்தக் கட்சி பெற்றது. மக்கள்தொகையில் எல்லாப் பெரிய பிரிவினர்களையும் உள்ளடக்கும் கட்சிகள் தற்போது 13.0% வாக்குகள் பெற்றிருக்கின்றன. 2016—ல் 4.4% வாக்குகள் மட்டுமே பெற்றன; 2006—ல் 14.4% வாக்குகள் பெற்றதுதான் அதிகம். குறிப்பிட்ட சாதிகள், மதக் குழுக்கள் அல்லது பிராந்தியங்கள் போன்றவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறிய கட்சிகள் 2011—ல் 8.1% வாக்குகளும் தற்போது 6.7% வாக்குகளும் பெற்றிருக்கின்றன.

எல்லாத் தரப்புகளுக்குமான புதிய கட்சிகளில் பெரியது நாம் தமிழர் கட்சிதான் அதற்கு 6.6% வாக்குகள் கிடைத்திருக்கின்றன. அதற்கு அடுத்ததாக அமமுக, கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் ஆகிய கட்சிகள் தலா 2.3% வாக்குகள் பெற்றிருக்கின்றன. இந்தக் கட்சிகள் 0.4% வாக்குகள் பெற்ற தேமுதிகவை பின்னுக்குத் தள்ளியுள்ளன. தேமுதிக 2016—ல் பெற்ற 2.4% வாக்குகளோடும் 2006—ல் பெற்ற 8.4% வாக்குகளுடனும் இதை ஒப்பிட்டுப் பார்க்கலாம். பாமகவை உள்ளடக்கிய சாதிக் கட்சிகள் ஒட்டுமொத்தமாகத் தற்போதைய தேர்தலில் 6.0% வாக்குகளைப் பெற்றிருக்கின்றன. இவற்றில் பாமகவே பெரிய கட்சி. இந்தக் கட்சிகள் 2016—ல் 7.7% வாக்குகளும் அதிகபட்சமாக 2011—ல் 8.4% வாக்குகளும் பெற்றிருக்கின்றன. பாமக தற்போது 3.8% வாக்குகளே பெற்றிருக்கிறது. அந்தக்

கட்சி அதிகபட்சமாக 1991—ல் 5.9% பெற்றது. மதரீதியிலான கட்சிகள் ஒட்டுமொத்தமாக 3.6% வாக்குகளைப் பெற்றிருக்கின்றன, இவற்றுள் பாஜக 2.6% வாக்குகளுடன் பெரிய கட்சியாக உள்ளது. இவ்வாறாக, 1990—களிலிருந்து திராவிடக் கட்சிகளின் சமூகப் பங்கேற்பு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டேவந்தாலும் அந்தக் கட்சிகள்தான் தேர்தல்ரீதியாக ஆதிக்கம் செலுத்துகின்றன. இந்தத் தேர்தல் போக்குகளைத் தீர்மானித்தது எது? இது எதற்குக் கட்டியம் கூறுகிறது? இந்தியாவின் வேறு இடங்களுடன் அதை எப்படி ஒப்பிட முடியும்? இந்திய அரசியல் களத்தை மாற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து இந்தப் போக்குகள் எதை உணர்த்துகின்றன?

நீடித்த வெற்றிக்கான அடித்தளம்

இடைநிலை சாதிகளையும் தாழ்த்தப்பட்ட சாதிகளையும் பிற கட்சிகளும் அரசாங்கங்களும் குறைவாகவே கணக்கிலெடுத்துக்கொண்டன. 1950—களில் வளர ஆரம்பித்த திராவிடக் கட்சிகள் அந்தப் பிரிவினர்களை அணிதிரட்டுவதன் மூலம் வளர்ந்தன. சாதி, மொழி, வட்டார வழக்கு, தொழில் போன்றவற்றின் அடிப்படையின் வெகுமக்களையும் மேல்தட்டினரையும் பிரித்துக் காட்டும் வெகுஜன சொல்லாடல்களைக் கொண்டு திராவிடக் கட்சியினர் இதைச் செய்தனர். அதைத் தொடர்ந்து அவர்களின் ஆதிக்கம் நீடித்ததற்குப் பல காரணங்கள் உண்டு. கட்சியின் கட்டமைப்புகளை வலுவாக ஆக்கியது, ஒன்றுடன் ஒன்று இணைந்துகொள்ளும் வகையில் உட்குழுக்களை உருவக்கியதும்தான்; இவையெல்லாம் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட வளர்ச்சிக் கொள்கைகளின் மூலம் தக்கவைக்கப்பட்டன, 1990—களில் ஒன்றிய அரசின் நவதாராளமயப் போக்கை சுவீகரித்துக்கொண்ட பிறகும் அந்த கொள்கைகளை திராவிடக் கட்சிகள் தக்கவைத்துக்கொண்டன. இவற்றுள் மிக முக்கியமானவை உயர்கல்வியிலும் அரசு வேலைகளிலும் இடஒதுக்கீடு (69%), ஏழைகளிடையே ஊட்டச்சத்து, உடல்நலம், கல்வி ஆகியவற்றை மேம்படுத்திய மதிய உணவுத் திட்டம், கல்வியிலும் ஆரம்ப சுகாதாரத்திலும் செய்யப்பட்ட அதிக அளவிலான முதலீடுகள், 2016 வரை சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களுள் ஒன்றான கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவை ஆகும்.

திராவிடக் கட்சிகள் 1970—களிலிருந்து மேல்நோக்கி நகரும் சமூகக் குழுக்களுக்கும் முன்னேறிய குழுக்களுக்கும் நெருக்கமாக ஆயின. அவர்களின் இடஒதுக்கீட்டுக் கொள்கைகள் தலித்துகள் ஆதிவாசிகளை விட இடைநிலை சாதிகளுக்கே அதிக பலன்கள் அளித்தன. இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை அவர்கள் இரு மடங்காக்கி 50%—ஆக ஆக்கினார்கள், அதேவேளையில் மேலும் 27% மக்கள்தொகையினர் அந்தச் சலுகையை அடையும்படி செய்தனர், இதில் கொங்கு வெள்ளாள கவுண்டர்கள் உள்ளிட்ட செல்வச் செழிப்பான சாதியினரும் அடங்குவார்கள், இவர்கள் இந்தச் சலுகைகளை அதிக அளவில் பெற்றார்கள். இதற்கு மாறாக, பட்டியல் இனத்தோர்—பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டை ஐந்தில் ஒரு பங்குக்கும் குறைவாக மட்டுமே, அதாவது 16%—லிருந்து 19%—ஆக மட்டுமே உயர்த்தியுள்ளனர். இந்தப் பிரிவினரின் மக்கள்தொகை 21% என்று உண்மைக்கும் குறைவாகவே கணக்கிடப்பட்டிருக்கிறது, அதற்கும் குறைவாகவே இந்த இடஒதுக்கீடு இருக்கிறது. 1989—ல் பழங்குடியினருக்கு 1% உள்ஒதுக்கீடும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், சீர்மரபினருக்கு 20% உள்ஒதுக்கீடும், 2009—ல் அருந்ததியருக்கு 3% உள்ஒதுக்கீடும் வழங்கப்பட்டது — பாமகவை சமாதானப்படுத்தவும் தேர்தல் காரணங்களை முன்னிட்டும் கடந்த பிப்ரவரியில் அதிமுக அரசு மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டில் 10.5% வழங்கியது. இது சீர்மரபினரின் இடஒதுக்கீட்டை 7%—ஆகக் குறைத்தது, இதர மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை 2.5%—ஆகக் குறைத்தது.

திராவிடக் கட்சிகளின் பிற கொள்கைகளும் திட்டங்களும் சமூக அடுக்கில் மேல்நோக்கிய நகர்வுக்குத் தேவையானவற்றை வழங்கின. நிலவுடைமையும் குத்தகை சீர்திருத்தங்களும் பெரிதும் இடைநிலை சாதிகளைச் சார்ந்தவர்களுக்கே உதவின, மிகவும் சிறிய அளவிலேயே தலித்களுக்கு அவை உதவின. இந்தப் பிரிவினர், பாசனமும் மண்வளமும் குறைந்துபோனதால் நிலவுடைமையாளர்கள் விற்ற நிலங்களை வாங்கினார்கள். மானிய விலையில் வழங்கப்பட்ட இடுபொருட்கள், கடன்கள், கடன் தள்ளுபடி போன்றவற்றால் பலனடைந்தார்கள். இதுபோன்ற கொள்கைகள் சமூக அடுக்கின் கீழ் நடுத்தரப் பிரிவினரும் இடைப்பட்ட நிலையினரும் மேலே வருவதற்கு உதவின. இவையெல்லாம் சேர்ந்து திராவிடக் கட்சிகள் தங்கள் தேர்தல் மேலாதிக்கத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்கு உதவின. கூடவே சாதிக்கும் வர்க்க ஏற்றத்தாழ்வுகளுக்கும் எதிராக எழுந்த சவால்களைக் கட்டுப்படுத்தின.

மாற்றுகளும் அவற்றின் சாத்தியங்களும்

இந்த அனுபவங்களெல்லாம் திராவிடக் கட்சிகளுக்கு இதுவரை மேலாதிக்கத்தை வழங்கிவந்தன; ஆனால் 1990—களில் இந்தக் கட்சிகள் அணிதிரட்டலை நிறுத்திக்கொண்டுவிட்டதால்

இந்த மேலாதிக்கத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளும் என்று சொல்ல முடியாது. அதற்குப் பிறகு, பிற கண்ணோட்டங்கள் சிவில் சமூகத்தை ஈர்த்தன, குறிப்பாக சாதி சார்ந்த அணுக்கங்கள், பெருநிறுவன மயமாதலை எதிர்ப்பவர்கள், மதவிய தேசியர்கள் போன்ற கண்ணோட்டங்கள். கட்சி அமைப்புகளில் அவற்றின் தாக்கங்கள் இதுவரை குறைவாகத்தான் இருந்துவந்திருக்கின்றன — பாமக மற்றும் 1989—லிருந்து பிற இடைநிலை சாதிக் கட்சிகள், 2000—களிலிருந்து பாஜக, தேமுதிக, தலித் கட்சிகள், 2016—லிருந்து நாம் தமிழர் கட்சி போன்றவற்றின் சிறிய அளவிலான வளர்ச்சிக்கு அந்தக் கண்ணோட்டங்கள் உதவிவந்திருக்கின்றன. இந்த சக்திகளெல்லாம் பாமக, தலித் கட்சிகள் செய்ததுபோல் குறிப்பிட்ட சாதியினருக்கான உரிமைகளைக் கோரியிருக்கின்றன, அல்லது சாதாரண மக்களின் இன—மொழி அரசியலுக்குப் புத்துயிர் கொடுத்து, திராவிட மாதிரியிலான இன—வெகுஜனவிய அம்சங்களைச் சார்ந்து தங்கள் அரசியல் போக்குகளைக் கட்டமைத்துக்கொண்டன.

பிரதான சமூகங்களைச் சார்ந்தோ மொழி சார்ந்தோ இயங்காத பிரபலங்களான கமல்ஹாஸன், ரஜினிகாந்த் போன்றோர் கட்சி அரசியல் போட்டிகளில் குறைந்த அளவே தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். திராவிடக் கட்சிகள் செய்ததைவிட மேலும் சமத்துவமான வகைகளில் அதிகாரத்தையும் வளங்களையும் மறுபகிர்மானம் செய்ய முயலும் கட்சிகளுக்கு, அவை ஏற்கெனவே இருக்கும் தமிழ்நாட்டின் அரசியல் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு தங்கள் அரசியலைக் கட்டமைத்தால், பிரகாசமான எதிர்காலம் உண்டு என்பதையே இது உணர்த்துகிறது.

பாஜகவின் ஆட்சியின் கீழ் இந்தியாவில் ஜனநாயகமும் சிறுபான்மை மதத்தினர், ஒடுக்கப்பட்டோர் ஆகியோரின் உரிமைகளும் நசுக்கப்படுவதைத் தடுக்க நினைப்பவர்கள் தற்போதைய சட்டமன்றத் தேர்தல் முடிவுகளிலிருந்து நம்பிக்கை பெறலாம். வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ், கேரளத்தில் இடதுசாரிக் கூட்டணி, தமிழ்நாட்டில் திமுக ஆகியவை தமக்கேயுரிய வகைகளில் ஒன்றிய அரசின் இந்துப் பெரும்பான்மைவாதம், அதிகாரக்குவிப்பு, ஜனநாயக மீறல்கள் போன்றவற்றை எதிர்த்துவந்திருக்கின்றன. அவர்களின் வெற்றி களேல்லாம் முறையான கூட்டணி அமைத்தால் சில பிராந்தியங்களில் இந்துத்துவத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியும் என்பதைக் காட்டுக்கின்றன. ஆனால், வங்கத்தின் நிலை வேறு. அங்கே 2016—ஐவிட தற்போது பாஜகவின் வாக்கு வீதம் 28% வளர்ந்திருக்கிறது; சிபிஐ(எம்), காங்கிரஸ் ஆகியவற்றைப் பின்னுக்குத் தள்ளி அங்கே பாஜக பிரதான எதிர்க்கட்சியாக உருவெடுத்திருக்கிறது.

பாஜகவின் வளர்ச்சியையும் ஒன்றிய அரசின் எதேச்சாதிகாரப் போக்குகளையும் தடுக்கக் கூடியவை என்று நாம் எண்ணிக்கொள்வதன் வலுவைக் குறைப்பவையாக இரண்டு விஷயங்களைக் கருதலாம். முதலாவது, நாடு முழுவதும் பாஜக வளர்ச்சி பெற்றுவரும் நிலையில் தமிழ்நாடும் கேரளமும் விதிவிலக்காக இருக்கின்றன. இரண்டாவது, இந்தியாவின் சீர்மையற்ற கூட்டாட்சித்துவமானது வளங்களின் பகிர்மானத்தைத் தீர்மானிப்பதற்கு போதுமான சுதந்திரத்தையும் பொதுப் பட்டியலின் மீதான அதிகாரத்தையும் வழங்குகிறது. 1989—க்கு முந்தைய காங்கிரஸ் தலைமையிலான அரசுகள் அதிகாரத்தை மையத்தில் குவித்தன; 1989—லிருந்து 2014 வரையிலான கூட்டணி ஆட்சிகள் அதிகாரப்பரவலாக்கம் செய்தன. ஆனால், பெரும்பான்மை பலம் கொண்ட பாஜக அரசுகள் 2014—லிருந்து அதிகாரத்தை மையத்தில் குவித்துக்கொண்டிருக்கின்றன. இதனால் ஒன்றிய அரசு முன்னெடுக்கும் எதேச்சாதிகாரம், இந்து மேலாதிக்கம், பெருநிறுவனங்களை மையம் கொண்ட வளர்ச்சி போன்றவற்றை எதிர்க்க முடியாத வகையில் சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை ஒன்றிய அரசினால் கட்டுப்படுத்திட முடியும்.

தமிழில்: ஆசை.

ஞாலம்

காலம் கருதி இடத்தால் செய்வோம்!

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கரோனாத் தீநுண்மித் தாக்கத்தால் ஏற்பட்ட இழப்புகள் மிகுதியானவை. பாதிப்புக்குள்ளானோரின் எண்ணிக்கையும் பெருகிக்கொண்டே இருக்கிறது. ஊரடங்கு போட்டு ஒடுக்க முனைந்தாலும் உளம் அடங்காது உலவும் பலரும் ஒப்புக்கு முகக்கவசம் அணிகிறார்கள். விலகியிருக்கும் பழக்கம் இன்னும் விரிவாகப் பின்பற்றப்பட முடியாத நிலை. திருமண நிகழ்வுக்குப் போகமுடியாவிட்டாலும் இறுதிச் சடங்குகளுக்குச் செல்லவேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்களின் நிலைப்பாடு துயரத்துள் துயரம்.

மருந்து, உணவுப்பொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் வாங்க நேர்ந்தவர்கள் போக, அதிக அவசியம் இல்லாதவர்கள் வெளியில் வருகிறபோது ஏற்படுகிற விளைவுகள் எவை என்பதை அறிந்தும் உணராதவர்களாகவே பலர் இருக்கிறார்கள். விலை கொடுத்து வாங்கிய பொருள்களுடன் இலவசமாக, இந்த நோய்த் தொற்றினையும் எடுத்துப் பரப்பிவிடுகிறவர்களாக இருக்கிறோம் என்கிற உணர்வை அவர்களுக்குள் இன்னும் எப்படி ஊட்டுவது?

இரண்டாவதாக எழுந்துள்ள அலை, இளைஞர்களையும் தாக்கிவருகிறது. மூன்றாவது அலையும் வரப்போகிறது என்கிற முன்னறிவிப்புச்செய்தி, நெஞ் சுரம் மிக்கவர்களையும் கூட, அஞ்ச வைக்கிறது. இருமும்போதும் சற்றே செருமும்போதும்கூட, எங்கே நமக்கும் வந்து தொற்றிக் கொண்டதோ என்று பலரையும் எண்ணவைத்துவிடுகிறது, பயம். மெல்லிய சளிப்படலம் வருவதுபோல் தெரிந்தாலும் உள்ளத்தில் பலவிதமாய் அச்ச ரேகைகள் பரவிவிடுகின்றன. பற்றாக்குறைக்குத் தடுப்பூசி பற்றிய தகவல்களும் வதந்திகளும்.

வீடடங்கி இருப்பவர்களுக்கு இந்த நேரத்தில் ஊடகங்களைப் போல உதவிகரமான நட்பு வேறொன்றும் இல்லை. மன அழுத்தத்தில் இருந்து வெளிவர பத்திரிகைகள் வாசிப்பது, நூல்களைப் பயில்வது நல்லது. உடல் அளவில் வீட்டுக்குள் ஒடுங்கி இருந்தாலும், மன அளவில் வெளியில் உலாப் போகும் அனுபவத்தை, நூல்கள் கொடுக்கும். ஒருவகையில், அது தியானமும் கூட.

பலவகைத் துயர்களால் அலைக்கழிக்கப்படும் மனங்களை ஒருமுகப்படுத்தும் ஆற்றல், ஆன்மிக நூல்களுக்கு உண்டு. திண்ணிய நெஞ்சத்தைத் தருகின்ற நுண்ணிய அனுபவங்களை உள்ளடக்கிய நல்ல இலக்கியங்கள், உள்ள அமைதிக்கு உறுதுணையானவை. அதிலும் சான்றோர்களது வாழ்க்கை வரலாறுகள் ஊன்றுகோல் போன்று உதவக் கூடியவை.இத்தகு அச்சு ஊடகங்கள் எத்தனை இருந்தாலும், காட்சி ஊடகங்களே பலரின் கவனத்தை ஈர்க்கின்றன. உலகின் பல மூலைகளில் இருந்தும் மட்டுமன்றி, உள்ளூர் நடப்புகளையும் உடன் அறிந்து கொள்ள உற்ற துணை, இத்தகு ஊடகங்கள் தாம். உடனுக்குடன் செய்திகளைத் தரும் அவற்றின் வழியே, நல்லவும் அல்லவுமான நடப்புகளைக் காணும்போது, வருத்தமும் துயரமும் எழுவதைத் தவிர்க்க இயலாது. பல நிலைகளில் எச்சரிக்கையாகவும் அக்காட்சிகள் இருந்து



விடுகின்றன. இல்லத்து நடுக்கூடத்தில் முதன்மை இடம்பிடித்திருக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கூடியிருந்து காணத்தக்கவை. அவரவர் தனிமைக்கு உற்ற துணையாக அமைபவை கைப்பேசிகள். மூன்றாவது கையாக நமக்கு முளைத்திருக்கும் கைப்பேசி எத்தனையோ வகைகளில் உதவியாகவும், அதற்கு எந்த விதத்திலும் குறையாத அளவிற்கு உபத்திரவமாகவும் இருப்பது தெரிகிறது. வேறு என்ன செய்வது?

எந்த நேரம் என்றில்லாமல் எல்லா நொடிகளிலும் வந்து குவிகின்றன ஏராளமான செய்திகள், பதிவுகள். எந்த விதத்திலும் தொடர்பில்லாமல் வந்து நிறைகின்ற அவற்றைத் துடைத்து அழிப்பதற்குள் சேமித்து வைத்திருக்கும் மின்கல ஆற்றல் குறைந்துபோகின்றது. அலுவலகத் தொடர்பிற்காகவும், அத்தியாவசியப் பயன்பாட்டிற்காகவும் வைத்திருக்கும் புலனத் தொடர்புகளில் புதிதாக வரும் செய்திகளை அறிந்துகொள்வதற்காக வைத்திருக்கும் தனித்த ஒலிஅறிவிப்பு, இவற்றால் இடைவிடாது



கிருங்கை சேதுபதி

ஒலிப்பது ஒரு பெருந்தொல்லை. பொதுவான பொன்மொழிகளோடு, பொழுதுகளை முன்னிறுத்தி வாழ்த்தும் செய்திகளும், கடவுளர் படங்களும் வந்து வந்து குவிகின்றன. போதாக்குறைக்கு அவரவர்தம் படங்களும் இப்போது, அவற்றையெல்லாம்விட அதிகமாய் வந்து குவிபவை, கரோனாத் தொடர்பான அறிவுரைகள். அடுத்தவர்களின் பதிவுகளில் இருந்து, தொற்றுத் தொடர்பான தகவல்களை எடுத்தெடுத்துப் பதிவிட்டுப் பரவவிடுகிறவர்களின் அடுத்தடுத்த செயற்பாடுகள் இத்தொற்றினைப் போலவே அதிகம் பரவிவருகின்றன.

மருத்துவர்கள் சொல்லிய குறிப்புகளைவிடவும் மனம்போன போக்கில் எழுதிப் பதிவிடுவோர் குறிப்புகளின் எண்ணிக்கை மிகுந்து வருகிறது. தடுக்கவும் முடியாமல், தவிர்க்கவும் முடியாமல் பார்த்துப் பழகியவர்களுக்குள் இந்தப் பதிவுகள் மனத்தின் எங்கோ ஒருமூலையில் இருந்து எழுந்து உளைந்துகொண்டே இருக்கின்றன. கட்செவி அஞ்சலையோ, முகநூல் பக்கங்களையோ பார்க்காமல் இருக்க முடியாத அளவிற்குப் பழகிவிட்டோம் நாம். ஆர்வத்துடன் தொடுதிரையை விலக்கிய காலம் போய், இப்போது அச்சத்துடன்தான் பார்க்க வேண்டியதாயிருக்கிறது. அதிலும் அடுத்தடுத்து எவரது படமேனும் வந்துவிட்டால், 'கடவுளே' என்று பதறவேண்டியிருக்கிறது. பிறந்தநாள் வாழ்த்து, திருமண நாள் வாழ்த்து போன்ற குறிப்புகளைப் பார்க்கிற வரைக்கும் அந்தப் படபடப்பு

அடங்குவதே இல்லை.அதற்காக, அந்தப் பக்கங்களைப் பார்க்காமல் இருக்க முடியுமா? பதிவிடாமல்தான் இருக்க முடியுமா? ஒடுங்கியிருக்கும் இந்த நேரத்தில் உலகத்தோடு தொடர்புகொள்ள அந்த ஊடகவெளிகளை விட்டால், வேறு ஏது கதி? எத்தனை நல்ல செய்தி சொல்லக் கைப்பேசி ஒலித்தாலும் இந்த அச்ச மனோபாவம்தானே உச்சத்தில் இருக்கிறது.எனவே, இத்தகு சாதனங்களைக் கையாளுகிறவர்கள்

கருணையோடு கவனிக்க வேண்டிய ஒன்றை இப்போது சொல்லவேண்டியது நமது இன்றியமையாத கடமையாக இருக்கிறது.

முன்பெல்லாம் இறப்பையோ, துக்கத்தையோ அறிவிப்பதற்கென்று சில ஒழுங்குமுறைகள் இருந்தன. அதிர்ச்சி தரத்தக்க மரணத் தகவல்களை உடனடியாக அறிவிக்கின்ற பழக்கம் இல்லை. மெல்ல மெல்ல, நலக்குறைவாய் இருப்பதாக, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக, அவசர சிகிச்சைப் பிரிவில் இருப்பதாக எடுத்துச் சொல்லுவார்கள். சற்றே அவகாசம் தந்து 'பிழைப்பது அரிது' என்பார்கள்.ஒருவகையில் ஊகித்துக் கொள்ள இடமளித்து, மெல்ல மெல்ல உணர வைப்பார்கள். எந்த அதிர்ச்சியும் வந்து தாக்கிவிடக்கூடாது என்கிற கருணை மரபு அது. இத்தனைக்கும் அந்தக் காலங்களில் இப்போது இருப்பதுபோல், அதிரவருவதாம் 'இதயத்தாக்கு' பலருக்கு இருந்தது இல்லை. இப்போது, அப்படி இல்லையே. எத்தனையோவித நோய்களின் தாக்குதல்களுக்கு ஆளான பெரியவர்கள் இருக்கிறார்களே!

அண்மையில் நடந்த அனுபவ உண்மையோடு இதைச் சொல்வதுதான் முறை. என்னிலும் சற்றே மூத்த என் நெருங்கிய நண்பர் ஒருவர் நலக்குறைவாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அச்சம் தரக்கூடியதாக அமைந்துவிடக் கூடாது என்பதாலும், தகவல் அறிந்து நலம் விசாரிப்பதாக அவரைக் கைப்பேசியில் அழைத்து, உறவும் சுற்றமும் தொல்லை தந்துவிடக்கூடாது என்பதாலும் பலருக்குச் சொல்லவே இல்லை. விரைவில் நலம்பெற்று வீடு சேர்வார் என்று நம்பியிருந்த வேளையில், எதிர்பாராதவிதமாக, இயற்கை எய்திவிட்டார்.

இந்தச் செய்தி வந்த ஒரு சில நொடிகளுக்குள், எப்படியோ தெரிந்து,'கண்ணீர் அஞ்சலி' எனத் தொடங்கி, அடுத்தடுத்து, அவரது படங்களை எடுத்துப் போட்டு என்னென்னவோ எழுதிப் பதிவிட்டுவிட்டனர் சில நண்பர்கள். அதுவரையில், அந்தநண்பர்நலக்குறைவாகஇருந்த செய்தியோ, மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரமோ, பலரும் அறிந்திராத நிலை. அந்தக் கணத்தில், பரபரப்பாக, இந்த அதிர்ச்சிச் செய்தியை அறிவித்த சிலரின் அதீத அவசரத்தால், பலவீன இதயம் உடைய இன்னொரு நண்பர் அதிர்ச்சிக்கும் ஆபத்துக்கும் உள்ளானார். அவரையும் மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய அவசியத்தை உண்டாக்கிவிட்டன இந்த அவசரப் பதிவுகள்.

நண்பரை இழந்த பெருந்துயருடன், இன்னொரு நண்பரைக் காக்கவேண்டிய நெருக்கடியில் இருந்த என்னிடம், 'எனக்கு ஏன் முன்னமே செய்தியைச் சொல்லவில்லை?' என்று உரிமையுடன் கோபித்துக் கொண்ட நண்பர்களின் அக்கறைக்கு நான் எப்படிப் பதில் சொல்வது? இத்தனைக்கும் அவர்கள் கடந்த இரு மாதங்களுக்கும் மேலாகத் தொடர்பிலேயே இல்லை. இதைவிடவும் கொடுமை, இந்தச் செய்தியை எவரிடம் சொல்லி, அதிரவைக்கக்கூடாதுஎன்றுஎண்ணியிருந்தோமோ, அவரையே தொலைபேசியில் அழைத்து அழுது புலம்பி அறிவித்து ஓய்ந்த அன்பர் ஒருவரின் நல்ல பணியை என்ன சொல்லிப் 'பாராட்டுவது'?

முகம் பார்த்துப் பேசிக்கொள்வதில் இருக்கிற ஆசுவாசமும் அவகாசமும் முகநூலில் பார்க்கிறபோது புலப்படுவதில்லை. எத்தனைதான் நெருங்கியவர் என்றாலும் அவரது மனவுணர்வு தெரியாமல், அவரது இல்லத்து நிலைமை புரியாமல், அழைப்பதும் அதிக நேரம் பேசுவதும் அவ்வளவு நல்லதல்ல. அதற்காகப் பேசாமல் இருக்கவும் முடியாதே. காலத்தையும் கருத்தையும் கவனத்தில் கொண்டு பேசுவதும் பதிவிடுவதும் நல்லது நண்பர்களே.

எதையும்,காலம்கருதிஇடத்தால்செய்யவேண்டிய கடப்பாடு, ஞாலம் கருதுகிறவர்களுக்கு மட்டுமல்ல, நம் நட்புக்கும் உரியதென்று உணர்வீர்களாக!

படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

சரித்திரத் தொடர்

சேரமான் கனவு

13

13 பாய்ந்தது ஈட்டி

கொற்றவன்

குளித்து முடித்து கரையேறிய பரணர், 'விர்ர்..' எனும் ஓசையுடன் தனக்கு எதிரே வேகமாய் பாய்ந்து வரும் குத்தீட்டியைப் பார்த்ததும் பெரும் திகைப்புக்கு உள்ளானார். செய்வதறியாது விக்கித்து நின்றவரிடம் இருந்து 'ஓ!..' என்ற ஓலம் எழுந்தது.

பரணரின் பார்வை சென்ற திக்கைப் பார்த்த பூம்பட்டினத்தாரும் அதிர்ந்து போனார்.

பாய்ந்து வந்த அந்தக் குத்தீட்டி, பரணரின் வலப்புறத் தோளுக்கு வெகு அருகாமையில் கடந்து சென்று சரக்கென்று எதன்மீதோ குத்தி நிற்கும் ஓசை கேட்டது.

பரணர் வேகமாய் தன்னைக் கடந்து பாய்ந்த அக்குத்தீட்டியின் பக்கம் திரும்பினார்.

தனக்குப் பின்னால் வாய்பிளந்தபடி வந்தவொரு முதலையின் வாய்க்குள் பாய்ந்து அக்குத்தீட்டி குத்திட்டு நின்றதைக் கண்டதும் அவரின் திகைப்பும் மலைப்பும் மேலும் கூடியது.

பெரும் வேகத்தில் குத்தீட்டி பாய்ந்ததில் முதலை துள்ளிப் புரண்டு நீருக்குள் மூழ்கியது. முதலை மூழ்கிய இடத்தில் சிவப்பும் பச்சையுமாகக் குருதி குபுக்கெனக் கொப்பளித்தது.

சில நொடிகள் தாமதித்திருந்தாலும், தன் வாழ்வு முடிந்திருக்கும் என்பதை நம்பமுடியாதவராய் பார்த்த பரணர், அந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல், முதலை மூழ்கி வளையம் எழும்பிய பேரியாற்றைப் பார்த்தபடியே நின்றவர், ஏதோ நினைவு வந்தவராய் குத்தீட்டி பாய்ந்து வந்த திக்கைப் பார்த்தார்.

அதேநேரம், புலவர் பூம்பட்டினத்தாரும் குத்தீட்டி பாய்ந்து வந்த திசையை பார்வையால் ஆராய்ந்தார்.

அவ்விரு புலவர்களின் பார்வை பதிந்தது, பேரியாற்றங்கரையோரம் தண்ணீரைத் தழுவிய வண்ணம் பூத்துக் குலுங்கி நின்ற ஒரு சரக்கொன்றை மரத்தின் மீதுதான்!

சரக்கொன்றையின் வளைந்த கிளை ஒன்றில் மஞ்சள் மலர்களின் நடுவே இதழ்களில் மலர்ந்த புன்னகையுடன் வில்லவன் நின்றிருந்தான்.

"அதோ வில்லவன்!" பூம்பட்டினத்தார் பூரிப்பில் கூவினார்.

பரணர் தனக்கு கணப்பொழுதில் வந்த ஆபத்தினால் உண்டான அதிர்ச்சி மறைந்து, வில்லவனைக் கண்ட மகிழ்ச்சியில் முகம் மலர்ந்தார்.

அவரது அதரங்கள் தானாய் அவன் பெயரை முணுமுணுத்தன.

"வில்லவா!.. "

புலவர்கள் படித்துறையிலிருந்து கொன்றை மரத்தை நோக்கி நடக்கத் தொடங்க, அவர்கள் தன்னை நோக்கி வருவதற்குள் விருட்டென ஒரே எம்பில் கிளையிலிருந்து தாவி ஆற்றங்கரைக்குக் குதித்த வில்லவன், அவர்களை நோக்கி ஓடி வந்தான்.



புலவர்கள் இருவரையும் எதிர் கொண்ட வில்லவன் கரம் கூப்பி வணங்கி நின்றான்.

"வில்லவா! உன்னைக் கண்டபின்தான் எனக்கு மீண்டும் உயிர் வந்திருக்கிறது!" அவனது கரங்களைப் பற்றிக்கொண்டு உருக்கமாகக் கூறினார் பரணர்.

"உள்ளபடியே உமக்கு உயிர் மீண்டும்தான் கிடைத்திருக்கிறது. வில்லவனின் குத்தீட்டி முதலையிடமிருந்து உமது உயிரைக் காத்திருக்கிறது" புலவர் பூம்பட்டினத்தார் கூற, குறுக்கிட்டான் வில்லவன்.

"இல்லை ஐயா, என் ஆசானின் உயிரைத் தமிழன்னைதான் காத்திருக்கிறாள்!"

"சரியாகச் சொன்னாய் வில்லவா! பரணரின் தமிழுக்குத் தாரைவார்க்கப்பட்டவன் நீ! எனவே தமிழ் தந்த பிள்ளையான நீ, அவர் உயிரைக் காத்தது என்பது தமிழன்னையே காத்ததற்கு ஒப்பானதுதான்!" பெருமையாகச் சொன்னார் பூம்பட்டினத்தார்.

"வில்லவா, இரண்டு நாட்களாக எங்கே போயிருந்தாய்? என்னிடம் சொல்லாமல் ஏன் போனாய்? கல்விச்சாலையில் உள்ள ஒருவரும் அறியாமல் எப்படிப் போனாய்?" பரணர், தான் உயிர் மீண்டதைவிடவும், இரண்டு நாட்களாக தன் உயிரை வதைத்த கேள்விகளை வேகவேகமாய் வார்த்தைகளாய் கொட்டினார்.

"ஆமாம் வில்லவா! நீ காணவில்லை என்ற செய்தி பரவினால் எங்கள் நிலைமை என்னாகும் தெரியுமா?" பூம்பட்டினத்தாரின் குரலில் பெருங்கவலை தொனித்தது.

"ஐயா! மன்னியுங்கள்! மிகவும் இக்கட்டான ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது! அதனால்தான் யாரிடமும் தெரிவிக்காமல் நான் கல்விச்சாலையில் இருந்து வெளியேற வேண்டியதாயிற்று!" பணிவோடு சொன்னான் வில்லவன்.

கணநேரம் அமைதியாய் பார்த்த பரணர், தன் மார்போடு அவனை அணைத்துக் கொண்டார்.

இருவரும் நிறையப் பேசியிருக்க வேண்டும்! இருவரது நிலைப்பாடும் இன்னதென்று ஒருவருக்கொருவர் விளக்கியிருக்க வேண்டும்தான்! ஆனால் அதற்குமேல் அவர்கள் பேசவில்லை! அமைதியாய் அருகிருக்கும் தென்னந்தோப்பு நோக்கி நடந்தார்கள்.

ஆசிரியருக்கும் மாணவனுக்குமான அந்தப் புரிதலைக் கண்டு மலைத்தவராக, பூம்பட்டினத்தார் அவர்களைப் பின் தொடர்ந்தார்.

தமிழுக்காகத் தரப்பட்ட அந்தப் பிள்ளை, தன் குருவின் உயிரைக் காத்த பிள்ளை, அவர் பெயரைக் காக்காமல் விடுவானா?

ஆளப் பிறந்தவன் அவன்! தமிழோடு வாழப் பிறந்தவன்! தமிழாய் நிலைக்கப் போகிறவன்! அவனைப் பற்றிய ஐயம் எதற்கு? சட்டெனத் தனக்குள் தெளிவு வந்தவராய் நடந்த பூம்பட்டினத்தார், அப்போதுதான் கவனித்தார். வில்லவனின் வலது தோளில் நீளமாய் ஒரு வெட்டுக் காயம் இருந்தது.

அதைக் கண்டு பதறிய பூம்பட்டினத்தார், "வில்லவா, இதென்ன இப்படியொரு காயம்?" வேகமாய் வந்து அவன் கரம்பற்றி நிறுத்தி வினவினார்.

பூம்பட்டினத்தாரின் பதற்றத்தைக் கண்டு பரணரும் வில்லவனின் காயத்தைக் கண்டு அலறினார்.

"ஐயோ!.. ஆழமான வெட்டுக்காயமாக இருக்கிறதே! வில்லவா, என்ன நடந்தது என்பதைக் கூறு!"

"ஐயா, எதிர்பாரா விதமாக ஒரு மோதல் ஏற்பட்டுவிட்டது. அதனால் உண்டான காயம்தான் இது!"

அவன் கூறியதைக் கேட்டதும் பரணர் மேலும் பரபரத்தார். "வில்லவா இனியும் என்னிடம் எதையும் மறைக்காதே! நடந்ததை நடந்தபடியே கூறு!" அவரது வார்த்தைகள் கட்டளையாக ஒலித்தன.

அவனது திடீர் மாயம்... அவனுக்குண்டான காயம்... அதற்கான நியாயம்... வில்லவனுக்கு மட்டுமேயான தனிக் கதை! இப்போதைக்கு எவரிடத்தும் பகிர முடியாது அதை! ஆனாலும் ஆசானிடத்தில் என்ன சொல்ல வேண்டும் என்பதை முன்பே முடிவு செய்திருந்தான்.

"தங்களிடம் நான் எதையும் மறைப்பேனா? நடந்ததை எல்லாம் தங்களைத் தனியே சந்தித்து எடுத்துரைக்கத்தான் ஓடோடி வந்தேன். ஆனால்.." என்றவாறு பூம்பட்டினத்தாரைப் பார்த்தான். அவன் பார்வையின் நோக்கத்தைப் புரிந்து கொண்டார் பரணர்.

"இவரிடமிருந்து எந்தத் தகவலும் வெளியே செல்லாது. நீ தயங்காமல் கூறு!"

"ஆம் வில்லவா! உன்மீது பேரன்பு கொண்டவர்களில் நானும் ஒருவன்! இதைப் பரணர் நன்குணர்வார்! நீயும் உணரும் நாள் சீக்கிரம் வரும்! உனக்கொரு சிக்கல் என்றால், அது எங்களுக்கு வந்த பெரும் சிக்கல் என்றே நினைப்போம். தயங்காமல் நீ நடந்ததைக் கூறு!" பூம்பட்டினத்தாரின் குரலிலும் கவலை தெரிந்தது.

"அப்படியெல்லாம் கவலை கொள்ளவேண்டாம்! உங்கள் மீது நம்பிக்கையில்லாமல் இல்லை பட்டினத்தாரே! செய்தி மிகவும் ரகசியமாக இருக்க வேண்டியது தற்போதைய தேவை!" சுற்றிலும் பார்வையைப் படரவிட்டவாறே கூறினான் வில்லவன்.

கல்விச்சாலையிலிருந்து மாணவர்கள் யாரேனும் தென்படுகிறார்களா என ஆராய்ந்தவன், எவரும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டபின், பேசத் தொடங்கினான்.

"ஐயா, நம் முசிறிக்குள் சில யவனக் கொள்ளையர்கள் நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் கொள்ளையர்கள் மட்டுமல்ல, கொடூரக் கொலைகளையும் புரிந்திருக்கிறார்கள். அவர்களில் சிலரை நான் இந்த இரண்டு நாட்களில் அடையாளம் தெரிந்து வைத்திருக்கிறேன். அந்த ஒரு சிலரை நாம் கைது செய்து விட முடியும் என்றாலும், அவர்களது திட்டம் என்ன என்பதையும், அவர்கள் முசிறிக்குள் யாருடன் தொடர்பில் இருக்கிறார்கள் என்பதையும் கண்டுபிடித்தாக வேண்டும்!"

அப்போது இடைமறித்தார் பரணர்.

"வில்லவா, அப்படியானால் இரண்டு நாட்களுக்கு முன்பு நள்ளிரவில், தெற்கே இருக்கும் மணற்குன்றின் அருகே சண்டையிட்டுக் கொண்டிருந்தவர்களில் நீயும் ஒருவனா?" திகைப்புடன் கேட்ட பரணரை

வியப்புடன் நோக்கினான் வில்லவன்.

"ஐயா, அது எப்படித் தங்களுக்கு.."

"அந்த நள்ளிரவில் என் குடிலில் இருந்து அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மறுநாள் முதல் உன்னைக் காணவில்லை என்றறிந்ததும், என் நினைவெல்லாம் உன்னைச் சுற்றியே இருந்ததில், அந்தச் சண்டையை நான் மறந்தே போனேன்."

அதைக் கேட்டு முறுவலித்தான் வில்லவன்.

"ஐயா, அதை மட்டுமா மறந்தீர்கள்? இந்த இரண்டு நாட்களாகத் தாங்கள் குடிலுக்குச் செல்லவும் மறந்து விட்டீர்கள்."

அவன் கூறியதை ஆமோதித்தவாறே பூம்பட்டினத்தாரும் நகைப்புடன் கூறினார்.

"தன் குடிலை மட்டுமா மறந்தார்? இந்த இரண்டு நாட்களும் அவர் தன் உணவு உறக்கத்தையும் அல்லவா மறந்து விட்டார். உன்னைக் காணாத கலக்கத்தில் பித்துப் பிடித்தவராக அல்லவா திரிந்தார்"

பூம்பட்டினத்தார் அவ்வாறு கூறியதும், வில்லவனின் கண்கள் பனிக்கத் தொடங்கியது. ஆசான் தன் மீது பேரன்பு கொண்டவர் என்பதை நன்குணர்ந்தவன்தான் என்றாலும், இரண்டு நாட்களாக அவரது மனநிலையைக் கூறிய புலவரின் மொழிகள், பரணரின் கையறு நிலையைத் தெளிவாகப் படம் வரைந்தாற்போலக் காட்டியது.

அன்பும் கருணையும் வழியும் பரணரின் கண்களைப் பார்த்தான் வில்லவன். அவரது கண்களும் அப்போது துளிர்க்கத் தொடங்கியது.

அம்மூவருக்கும் சில நொடிகள் வார்த்தைகள் வரவில்லை. அன்பின் அலை அங்கே கரை உடைக்காமல் இருக்க மூவரும் தங்களைக் கட்டுக்குள் வைக்க சற்றே சிரமப்பட்டார்கள். அந்தச் சிரமத்தில் சில நொடிகள் அமைதியாகக் கரைந்தன.

மொழிகளால் விளக்க முடியாத அன்பை விழிகள் விளக்கி விடும்!

"மன்னியுங்கள் ஐயா, தங்களை மிகவும் உளைச்சலுக்கு உள்ளாக்கி விட்டேன். நேற்று முழுதும் தங்களை எதிர்பார்த்துத்தான் மேட்டுக் குடிலில் காத்திருந்தேன். ஆனால் தாங்கள்

அப்பக்கமே வரவேயில்லை!”

வில்லவன் கூறியதைக் கேட்டு பலமாகச் சிரித்தார் பூம்பட்டினத்தார்.

“சரிதான்! கையிலே வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த கதை என்பார்களே! அதைத்தான் செய்திருக்கிறாரா இந்தப் புலவர்! ஏனய்யா, இப்படி நீர் செய்து விட்டு படித்துறையில் வந்து வருத்தக் கவி பாடிக் கொண்டிருந்தீரே! தகுமா இது உமக்கு?” எனக் கூறிச் சிரித்தவரின் சிறிப்பினூடாக ஆற்றங்கரையோரப் புதர்களில் ஏதோ சலசலப்பு கேட்டது.

அதைத் தொடர்ந்து ஆற்றில் யாரோ பாய்ந்தாற்போல ‘தொபீர்’ எனும் என்ற சத்தமும் எழுந்தது.

அடுத்த நொடியே வில்லவன் சத்தம் வந்த திசை நோக்கி ஓடினான். தான் நின்றிருந்த கொன்றை மரத்தின் மீதிருந்துதான் ஆற்றில் யாரோ பாய்ந்திருக்க வேண்டும் என்பதையுணர்ந்தவன், வேகவேகமாக கிளைகளைப் பற்றித் தாவி அம்மரத்தின் மீதேறி நின்று, பேரியாற்றைக் கூர்ந்து கவனித்தான்.

எந்த இடத்தில், எது அல்லது யார் பாய்ந்திருக்கக் கூடும் என்பது புரியாவண்ணம் தண்ணீரில் வளையங்களைக் காணாமல் திகைத்தான். காற்றின் திசையில் சிற்றலைகளின் நகர்வை மட்டுமே காண முடிந்தது.

பரணரும் பூம்பட்டினத்தாரும் அம்மரத்தின் அருகே வந்து நின்றார்கள்.

“என்ன வில்லவா, ஏதேனும் தென்படுகிறதா?” பரணர் வினவ, இல்லையென்பதாகத் தலையசைத்த வில்லவனின் பார்வை தண்ணீரின் மீதே நிலைகுத்தியிருந்தது.

“தண்ணீரில் பாய்ந்தது முதலையாகக் கூட இருக்கலாம்” பூம்பட்டினத்தார் கூறினார்.

அப்போது, வில்லவனை மரத்திலிருந்து கீழே இறங்குமாறு சைகை காட்டிய பரணர், கல்விச்சாலையில் இருந்து படித்துறை நோக்கி நான்கைந்து மாணவர்கள் வருவதைச் சுட்டிக் காட்டினார்.

“ஐயா, நாம் உடனடியாக தங்கள் குடிலுக்குச் செல்ல வேண்டும். என் யூகம் சரியாக இருக்குமேயானால், தங்கள் குடிலில் இருப்பவர்களுக்கு கொள்ளையர்களால் ஆபத்து காத்திருக்கிறது. தாங்கள் விரைவாகக் குடிலுக்கு வாருங்கள். மற்றவற்றை அங்கே பேசிக் கொள்ளலாம். இப்போது நான் விடைபெறுகிறேன்” கூறிய அடுத்த நொடியே மரத்திலிருந்து ஆற்றில் பாய்ந்தான் வில்லவன்.

புலவர்கள் இருவரும் திகைப்பும் மலைப்பும் மேலிட சிலையாக நின்றிருந்தார்கள்.

(கனவு தொடரும்...)


VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!!!
VARSHA
1Kg
Traditional taste that Lingers

கோடை மழை

அணுக்கமானவரின்
மரணத்தால் தோன்றும்
வெற்றிடத்தின் அழுத்தத்தில்
இதயம் சிந்தும்
குருதியின் வெம்மையில்
மனதின் வன்மெல்லிய
தன்முனைப்புத் திரை கரைய..
துலங்குகிறது
அகங்கார வஞ்சகங்களின்
பொருளின்மை..

அழுக்குகளைக்
கரைத்த கோடைமழை
நின்றவுடனேயே
படியத் தொடங்குகின்றன...
பச்சிளங் குழவியெனத் துலங்கும்
ம(ன)ர இலைகளில்
கோடைப் புழுதிகள்

கா.சிவா

காலத்தின் கால்

சிறியதை விழுங்கப்
பெரியது...
அதனை விழுங்க
மற்றொன்று...
இடையில் மிதக்கும்
நதியிலை...
என்றபடி கடக்கும்
காலத்தின் கால்
தடத்தைத்தான்
நீங்கள் வாழ்க்கை
என்று கூறித் திரிகிறீர்கள்.

இனியவன் காளிதாஸ்

அன்றாடத்தின் எதிர்கொள்ளல்கள்

பொழுது புலர்கையில்
கண்ணுக்குள்ளேயே
வரிசை கட்டி நிற்கின்றன
அன்றாடத்தின் எதிர்கொள்ளல்கள்
சன்னல் காக்கை
ஒரே மாதிரிதான் கரைகிறது

இங்கேயோ
சோம்பல் எரிச்சல் தயக்கம் துள்ளல்
என ஆயிரம்
ஹார்மோனியக் கட்டைகள்
நாய்க்குட்டி போல் தலைசாய்த்து
காத்துக் கொண்டிருக்கும்

உங்கள் வாகனம்
ஓர் உதையில் புரிந்துகொள்ளும்
தினத்தின் பாதைக்குள்
அன்றைய பாட்டைச்
சுமந்து நகரும்
தினம் என்பது
கிரீம் பிஸ்கெட்டின் எதிரி

அதற்குத் தெரியும்
இரண்டையும் பிரித்துக்கூட
நக்கித் தின்றுவிடும்
நீள் நாக்கை
மாலை மீண்டும் நாய்க்குட்டி
தலைசாய்த்து நிற்கையில்
படியேறுகிறது
கிரீம் உதிர்ந்த சவுத்த ரொட்டி

உமா மோகன்

நீர்க்குமிழி வாழ்க்கை!

பறந்து பறந்து காட்டையே
தன் வசப்படுத்திடும்
பறவையாய்...

தண்ணீருக்குளிருந்தே
தன் தாகம் மறந்து போன
மீனாய்...
மலையை
சிறுசிறு துகளாய் பிரித்தெறிகிற
சிறு உளியாய்..
சிகரம் தொட்டுத் திரும்புகிற
காற்றாய்.. ஒரு போலி
கம்பீரத்தில் தான்
அலைகிறேன்.

உப்பிப் பெருகுகிற
அவஸ்தையால்
நிரம்புவது போலிருக்கிறது
சுயம்!
கைபட்டும் மட்டுமல்ல
காற்று பட்டும் கூட உடையக்கூடும்
நீர்க்குமிழி வாழ்க்கை!

இசைமலர்

“பாதுகாப்புக்கு ஓடிடி.. கலகலப்புக்கு தியேட்டர்!”

டாக்டர் தள்ளிப் போகும் ரகசியம்!

டாக்டர் வரவேண்டிய நேரத்தில் வந்தால் சரி!

“கலகலப்பாகப் படம் பார்க்கும் சுகமே தனி!”

மாடலிங், ஆல்பம், விளம்பரப் படங்கள் எனப் படிப்படியாக அடையாளம் பெற்று தமிழ், தெலுங்கில் முன்னணி நாயகியாக கவனம் ஈர்த்து வருகிறார் அம்ரிதா. “இதுபோன்ற ஊரடங்கு காலகட்டங்களில் மக்களின் பாதுகாப்புதான் முக்கியம். இந்தச் சூழலுக்கு ஓடிடி வரவேற்க வேண்டிய விஷயம். கரோனா முடிவுக்கு வந்ததும் தியேட்டரில் படம் பார்ப்பதுதான் நல்லது. கலகலப்பாகப் படம் பார்க்கும் சுகமே தனி!” என இவர் சமீபத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.

இயக்குநர் நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் உருவான படம் ‘டாக்டர்’. இதில் பிரியங்கா கதாநாயகியாக நடிக்க, வினய், யோகிபாபு, அர்ச்சனா உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர். இசை அனிருத். படத்தில் ‘செல்லம்மா’, ‘ஓ பேபி’, ‘நெஞ்சமே’ உள்ளிட்ட பாடல்கள் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், தயாரிப்பு நிறுவனமான கே.ஜே.ஆர். ஸ்டுடியோஸ் “வெளியீடு தள்ளிப் போவதால் படத்திற்கான நிதிச் சுமை அதிகரிக்கும். ஆனாலும், படத்தை வெளியிடும் சரியான நேரத்தைத்தான் நாங்கள் எதிர்நோக்கியுள்ளோம்.’ எனத் தெரிவித்திருக்கிறது.

நடிகர் விஜய்க்கு ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கில் ஹிட் கொடுக்கும் படத்தில் நடிக்க வேண்டும் என்ற விருப்பம் நீண்ட நாளாகவே உள்ள நிலையில், தெலுங்கில் 'ஓபிரி', 'மகரிஷி' உள்ளிட்ட படங்களை இயக்கிய வம்சி பைடிபல்லியின் கதை விஜய்க்கு வெகுவாகப் பிடித்துப்போக, தனது அடுத்த படமாக தமிழ், தெலுங்கில் அதை உருவாக்கும் எண்ணத்தில் இருக்கிறார். இரண்டு நாயகிகள் கொண்ட இப்படத்தில் ஒரு நாயகிக்கு கீர்த்தி சுரேஷிடம் பேச்சு நடத்தியுள்ளனர். இரு மொழிகளிலும் தனி ரசிகர் வட்டம் கொண்டிருப்பவர் கீர்த்தி. இப்படத்தைத் தெலுங்கு தயாரிப்பாளர் தில்ராஜ் தயாரிக்கிறார்.

விஜயுடன் மீண்டும் ஜோடி

கீர்த்தியின் கீர்த்தி மவுசுதான்!

'வலிமை' நிலை என்ன?

வழமை போலத் தான்!

கொரோனா தொற்று காரணமாகப் பல படப்பிடிப்புகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன், திரையரங்குகளும் மூடப்பட்டுள்ளன. இதனால், 'வலிமை', 'மாநாடு' உள்ளிட்ட பல முக்கிய படங்களின் வெளியீடும் எப்போது என்பது கேள்விக்குறியாகியுள்ளது. மேலும் பல படங்கள் நேரடி ஓடிடி வெளியீடு என்ற தகவலும் வெளியாகிறது. கடந்த வருடம் இதே நேரம் கொரோனா முதல் அலை காரணமாக, 'மாஸ்டர்', 'சூரரைப்போற்று' எனப் பல முக்கிய படங்களின் வெளியீடு தள்ளி போனதும், நேரடியாக ஓடிடியில் வெளியானது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தலவலம்

சீர்காழி

புவனகிரி செயபாலன்

சைவமும் தமிழும் செய்த தவப்பயனால் திருஞானசம்பந்தர் அவதரித்த தலம். சிவபெருமான் அம்மை தந்த ஞானப்பால் பருகிய இடம்!

இத்தலம் கற்ப காலத்தில் அழியாது மூல ஆதாரமாக விளங்கி கைலாய தரிசனப் பேற்றைக் கொடுக்க வல்லது. சைவ சமயத்தவர்களால் பெரிதும் போற்றப்படும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் முதல் நால்வரில் ஒருவரான திருமுறைகளை அருளிச் செய்த திருஞானசம்பந்தர் அவதரிக்கவும், அருள் பெறவும் பேறு பெற்றது இப்புண்ணியத்தலம்!

சீர்காழிக்கு மற்ற பெயர்கள்:

பிரம்மா தன் படைத்தல் தொழில் இடையூறின்றி நடைபெற இறைவனை வழிபட்டு வந்ததால் பிரம்மபுரம். இறைவன் மூங்கில் வடிவமாகத் தோன்றி இந்திரனுக்கு அருள் செய்ததால் வேணுபுரம். சூரபத்மனுக்கு பயந்த தேவர்கள் அடைக்கலம் வேண்டி பூஜித்ததால் புகலி. குரு தன்மை இழந்த வியாழன் குரு பலம் வேண்டி பூஜித்தால் வெங்குரு.

பிரளய காலத்தில் உலகம் முழுவதும் அழிந்தபோது, சிவன் உமையம்மையோடு சுத்தமாயையைத் தோணியாகக் கொண்டு, இங்கு வந்து தங்கியதால் தோணிபுரம். தரையைப் பிளந்து இரணியனைக் கொன்ற வராகமூர்த்தி பூஜித்ததால் பூந்தராய். ராகு பூஜித்ததால் சிரபுரம். புறா வடிவில் தன்னைச் சோதிக்க வந்த சிபிச்சக்கரவர்த்தி அக்னியால் நற்கதி அடைந்ததால் புறவம். சண்பைப் புல்லால் மாய்ந்த தன் குலத்தவரால் வந்த பழி தன்னைத் தொடராமல் இருக்க கண்ணன் பூஜித்தமையால் சண்பை. நடராஜரோடு வாதாடியதால் தனக்கு ஏற்பட்ட குற்றம் நீங்க பத்ரகாளி பூஜித்ததுடன், கண்ணன் தன் வலிமையால் அழித்த காளிங்கன் என்னும் பாம்பு பூஜித்ததால் ஸ்ரீ□காளிபுரம், சீகாழி — மச்சக்காந்தியைக் கூடியதால் ஏற்பட்ட பழிச்சொல் நீங்க பராசரர் பூஜித்ததால் கொச்சை வயம். எத்தலங்களிலும் தொலையாத தம் மலத்தொகுதி நீங்குமாறு உரோமச முனிவர் பூஜித்ததால் கழுமலம் எனப் பன்னிரண்டு பெயர்கள்.

இவையல்லாமல், சங்கநிதிபுரம், பதுமநிதிபுரம், சிவாச்சாரியபுரம், பராசர ஷேத்திரம், புனர்ஜென்மபுரம், கிரிபுரம், உமாபதிபுரம், ஜீவன் முக்திபுரம், நீலகண்ட வெற்பு, மாலைமாற்றுப்பதி, 720 எழு கூற்றிருக்கைப்பதி, இலிங்காடவி, குய்யகாசி, மூலாதார ஷேத்திரம் என்னும் பெயர்களும் உண்டு!

புராண வரலாறு

தோணிபுரம்: ஏழு தீவுகள் அடங்கிய இப்பேரண்டத்தை கடலானது ஒரு ஊழிக்காலத்தில் பொங்கி எழுந்து அழித்தது. பின்னர் இறைவன் அனைத்து உயிர்களையும் மீண்டும் படைக்க திருவுளம் கொண்டார். 64 கலைகளையும் ஆடையாக தரித்து பிரணவத்தைத் துணையாகக் கொண்டு உமாமகேஸ்வரர் எழுந்தருளி தோணியைச் செலுத்திக் கொண்டு வரும்போது, அந்தக் காலத்திலும் அழியாமல் இருந்த இத்தலத்தைக் கண்டு, இதுவே மூலாதாரமாகும்

என்று அருளிச் செய்து, தோணியுடன் இங்கே வீற்றிருந்து அருளினார். இதனால் இதன் பெயர் தோணிபுரம்.

சட்டைநாதர்:

மகாவிஷ்ணு குள்ளமான வடிவில் மாவலி மன்னனிடம் மூன்றடி மண் கேட்க, 'அளிக்கிறேன்' என்றதும், விண்ணையும் மண்ணையும் தன் ஈரடியால் அளந்து, மூன்றாவது அடியை அவன் தலைமேல் வைத்து அவனைப் பாதாள உலகத்திற்கு அனுப்பினார். அதனால் அகங்காரம் கொண்டு உலகை ஆட்டிப் படைத்தார். இதை அறிந்த வடுகநாதர் (ஈசன்) தன் திருக்கரத்தால் மகாவிஷ்ணுவை மார்பில் அடித்து பூமியில் வீழ்த்தினார். லட்சுமி மாங்கல்ய பிச்சைக் கேட்டு இறைவனிடம் வேண்டவும் அருளினார். மகாவிஷ்ணு உயிர்பெற்று வணங்கித் தம் தோலையும் எலும்பையும் அணிந்து கொள்ள வேண்டுமென விண்ணப்பிக்க, இறைவனும் எலும்பைக் கதையாகவும், தோலைச் சட்டையாகவும் போர்த்தி அருள் செய்தார். அதனால் பெருமானுக்கு தண்டபாணி, சட்டைநாதர், வடுகநாதர், ஆபதுத்தாரணர் எனப் பல பெயர்கள் உண்டு!

மலை வளர்ந்த வரலாறு:

ஆரியா பகுதியை ஆண்டு வந்த காலவித்து என்ற அரசனுக்கு புத்திரப் பேறு இல்லாததால் வருந்தி உரோமச முனிவரைக் கண்டு தன் கவலையைத் தெரிவிக்க, கயிலையைத் தரிசித்தால் கவலை நீங்கும் என்று முனிவர் கூறினார். தன்னால் எவ்வாறு சென்று தரிசிக்க முடியும் எனக் கவலையுற்றான் அரசன். அவனைத் தன்னுடைய நாட்டுக்குச் போகச் சொல்லிவிட்டு, தான் கைலாயம் சென்று தவம் செய்தார். தவத்தை மெச்சி இறைவன் முனிவர் முன் தோன்றி 'யாது வேண்டும்?' எனக் கேட்க, 'தென்னாட்டு மக்கள் தங்களைத் தரிசிக்க வேண்டும். அதனால் மலைச்சிகரத்தில் ஒன்றை தென்திசையில் தோற்றுவித்து, அதில் உமாதேவியுடன் வீற்றிருந்து அருள வேண்டும்' எனப் பிரார்த்தித்தார். அதற்கு ஈசன் 'ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் போர் நடக்கும் போது இது நிறைவேறும்' என அருள்புரிந்தார்.

பின்னொரு காலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் தம்முள் யார் வலியவர் என்பது பற்றி சர்ச்சையாகி போர் ஆரம்பித்தது. ஆதிசேடன் தன் ஆயிரம் தலைகளால் கயிலையை இறுக மூடிக்கொண்டான். வாயு தன்னால் இயன்ற



அளவு காற்றை வீசியும், மலையைக் கொஞ்சமும் அசைக்க முடியவில்லை! உலகம் ஊழிக்காலம் போல் அலைந்தது. அதைக்கண்ட தேவர்கள் ஒட்டி கட்டுமலையின் 20 புள்ளினம் (பறவை) ஏந்தும் இடத்தில் உமாமகேஸ்வரர் (தோணியப்பர்) பெரிய உருவத்துடன் எழுந்தருளி இருக்கின்றார்.

வேண்டுகோள்படி, ஆதிசேடன் தனது ஒரு தலையை மெல்ல தூக்கினான். உடனே ஒரு மலைச்சிகரம் பெயர்ந்து, ஒரு பெரும் கிளையும் 11 சிறுகிளைகளுமாக விழுந்தன. பெரும் கிளையான சிகரம் இறைவன் அருளால், 20 பறவைகளால் இங்கு கொண்டு வந்து வைக்கப்பட்டது. காலவித்து அரசனும் தரிசித்தான். பின்னர் அம்மலை மறைந்து நிற்க, மலை வந்து தங்கிய இடத்தில் சுதையால் 20 பறவைகள் தாங்குவது போல கட்டுரை ஒன்றைக் கட்டுவித்து அரசன் தன் நாடு சென்றான் என்கிறது புராணம்.

கோயில் அமைப்பு:

திருக்கோயில் நடுவில் நாற்புறமும் கோபுரங்களுடனும் உயர்ந்த திருச்சுற்று மதிலோடு உள்ளது. அதனுள் பிரம்மபுரீஸ்வரரும், திருநிலை நாயகியும், திருஞானசம்பந்தருக்கு என மூன்று கிழக்குப் பார்த்த தனித்தனி சன்னதிகள். கோயில் மகா மண்டபத்தில் திருஞானசம்பந்தர் உற்சவ மூர்த்தியாகவும், வடக்கு உட்பிரகாரத்தில் முத்துச் சட்டை நாதரும், தெற்கு உட்பிரகாரத்தில் அறுபத்து மூவர் மூலவர்களும் உள்ளனர்.

அங்கேயே சட்டைநாதர் பலிபீடம். மேல் பிரகாரத்தில் வடக்குப் பிரகாரத்திலும் மேலே மலைக்குப் போக படிக்கட்டுகள். இக்கோயிலை இக்கோயிலுக்கு குறுகலான மரப் படிக்கட்டுகளின் வழியே சென்றால், அத்தி மரத்திலான சுமார் 5 அடியில் சட்டைநாதர் ஆடைகள் எதுவுமின்றி அருள்பாலிக்கிறார். புனுகு பூசுவர். அபிஷேகம் இல்லை.

ஆண்கள் மேல் சட்டையைக் கழற்றிய பின் செல்ல வேண்டும். பெண்கள் தம் தலையில் சூடிய பூவினை எடுத்துவிட்டு சட்டைநாதரைத் தரிசித்தபின், மீண்டும் பூவினை தலையில் சூடிக் கொள்ள வேண்டும். இத்தலத்தில் குமரவேல், காளி, பிரம்மன், விஷ்ணு, குரு, இந்திரன், சூரியன், சந்திரன், அக்கினி, ஆதிசேடன், ராகு, கேது, வேதவியாசர் வழிபட்டு பேறு பெற்றுள்ளனர்.

சிவபெருமான் சில தலங்களில் குருமூர்த்தமாக மக்களுக்கு உபதேசம் செய்தும், லிங்கமூர்த்தமாக பல தலங்களில் கொண்டருளியும் சங்கம மூர்த்தியாக அன்பர்களுக்கு சில தலங்களில் அருள்பாலிக்கிறார். இந்த மூன்று மூர்த்தங்களும் ஒருங்கே எழுந்தருளி உள்ளது இங்கு மட்டுமே!

குரு மூர்த்தம்: மலைமீது பெரிய நாயகி சமேதராராக எழுந்தருளி இருக்கும் தோணியப்பரே குருமூர்த்தம். திருஞானசம்பந்தருக்கு ஞான உபதேசம் அருளியவர். இந்த லிங்கத்தை பிரம்மபுரீஸ்வரர் என்று புராணங்கள் கூறுகின்றன. பிரம்மபுரீஸ்வரர் வீற்றிருக்கும் மேல்தளத்தில்

தோணியப்பர் திருக்கோயில் உள்ளது.

லிங்க மூர்த்தம்: லிங்க வடிவில் பிரம்மபுரீஸ்வரர். பிரம்மனால் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு தேவர்கள் மற்றும் பலர் பூஜித்து பேறு பெற்றனர். சங்கம மூர்த்தம்: மலையுச்சியில் சட்டைநாதராக விளங்குகிறார். இவர் இரணியனது உயிரை மாய்த்த நரசிம்மத்தை பிளந்து அதன் எலும்பைக் கதையாகவும், தோலை சட்டையாகவும் கொண்டு விளங்குகிறார்.

அஷ்ட பைரவர்: சிவனின் வீரச்செயல்கள் பெற்ற திருக்கோலம் பைரவர் கோலம். இக்கோலம் அறுபத்து நான்கு வகைப்படும். அவற்றுள் சுந்தர பைரவர், சுயச்சை பைரவர், லோக பைரவர், கால பைரவர், உக்ர பைரவர், பிச்சையா பைரவர், நிர்மாண பைரவர், பீஷ்மண பைரவர் என எட்டு பைரவர்கள். தெற்கு பிரகாரம் வலம்புரி மண்டபத்தில் யோக ஸ்தானத்தில் உள்ளனர். இதுபோல் வேறு எங்கும் இல்லை எனலாம். வெள்ளிக்கிழமை பைரவர் வழிபாட்டுக்கு ஏற்ற நாள்!

திருஞான சம்பந்தர்

கி.பி ஏழாம் நூற்றாண்டு சீர்காழியில் அந்தணர் மரபில் சிவபாத இருதயர் — பகவதி அம்மையாருக்கும், சிவனுக்கு உகந்த நாளான திருவாதிரை நட்சத்திரத்தில் திருஞானசம்பந்தர் அவதரித்தார். திருஞானசம்பந்தர் என்பதற்கு 'அறிவு சேரர்' என்று பொருள். மூன்று வயதான திருஞானசம்பந்தர் ஒருநாள் தன் தந்தையார் நீராடச் செல்லும் போது உடன் சென்றார். சிவபாத இருதயர் மைந்தனை பிரம்ம தீர்த்தக் கரையில் அமர்ந்து இருக்கும்படி சொல்லிவிட்டு பிரம்ம தீர்த்தத்தில் மூழ்கி அகமர்ஷண மந்திரத்தை ஓதத் தொடங்கினார்.

தந்தையைக் காணாமல் போகவே "அம்மே... அப்பா.." என்று அழத் தொடங்கினார் திருஞானசம்பந்தர். தோணியப்பரான ஈசன் உமாதேவியாரோடு ரிஷபம் மீதமர்ந்து காட்சி கொடுத்து கலைஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த திருமுலைப் பாலை ஒரு கிண்ணத்தில் கறந்து ஊட்டுவாயாக எனப் பணிக்க, அதன்படி உமையம்மை செய்ய, திருஞானசம்பந்தர் ஞானம் உடைய சிவஞானம் ஆனார்.

பிரம்ம தீர்த்தத்தில் நீராடி வந்த சிவபாத இருதயர் கடைவாய் வழியாக பால் வழிய நின்ற பிள்ளையைப் பார்த்து 'யார் கொடுத்த எச்சில் பாலை உண்டாய்?' என கோல் கொண்டு அடிக்க ஓங்க... தனக்குப் பால் கொடுத்தவர்களின் அடையாளங்களை உணர்த்தும் விதத்தில்,

'தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்

காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்

ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்தேத்த அருள்செய்த

பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே..' எனத் திருப்பதிகம் பாடினார். மேலும் சில பதிகங்களைப் பாட ஆரம்பித்தார்.

சில நாள் கழித்து திருகோலக்காவிற்கு எழுந்தருளினார். கையினால் தாளமிட்டவாறே 'மடையில் வாளை..' என்ற திருப்பதிகம் பாடினார். பாட்டிற்கு உருகிய பரமன் கை நோவுமென்று ஐந்தெழுத்து வரையப் பெற்ற பொற்றாளம் அளித்து

அருளினார். இவர் பெருமையைக் கேட்டவர்கள் தங்கள் ஊருக்கு எழுந்தருள வேண்டினர். ஆனால் இவர் முதலில் தன் தாய் பிறந்த ஊராகிய திருநனிப்பள்ளி சென்று பதிகம் பாடினார்.

தெய்வத்திருமுறைகளை அருளிச் செய்த திருஞானசம்பந்தர் அவதரிக்கவும் அருள் பெறவும் பேறு பெற்றது புண்ணியத்தலம். எனவே இத்தலத்தை மிதிக்கலாது என்ற புனித நோக்குடன் சுந்தரமூர்த்தி சுவாமிகள் புறநகரிலேயே இருந்துகொண்டே, 'கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே..' எனத் திருப்பதிகம் பாடியுள்ளார். 64 நாயன்மார்களில் ஒருவரான புனித கணநாதர் பிறந்ததும் இத்தலத்தில் தான்!

இறைவன் பிரம்மபுரீஸ்வரர். இறைவி திருநிலைநாயகி. தலவிருட்சம் பாரிஜாத மரம். இது கொன்றைப் பூபோல் பூத்து, மாதுளை போல் காய்த்து, மாவைப் போல் பழுத்து, முறையே மந்திரம், பிணி, மருந்தின் தன்மையைப் பெற்றுள்ளது. தன்னை அடைந்தோருக்கு மலப்பிணி, உடற்பிணி போக்கும் தன்மையது.

தீர்த்தம்: பிரம்ம தீர்த்தம், காளி தீர்த்தம், பராசர தீர்த்தம் உட்பட 22 தீர்த்தங்கள் உள்ளன. தீர்த்தங்களில் முதன்மையானது பிரம்மதீர்த்தம். இந்த தீர்த்தக்கரையில்தான் திருஞானசம்பந்தருக்கு உமையவள் பொற்கிண்ணத்தில் ஞானப்பாலை ஊட்டினாள். இந்த வைபவம் பிரம்மோற்சவம் இரண்டாம் நாள் நடத்தப்படுகிறது.

காளி தீர்த்தம்: காளி தேவி தன் பழி நீங்கும் பொருட்டு தோற்றுவித்த தீர்த்தம். மேற்கு கோபுர வாயிலுக்கு அருகே வெளியில் அமைந்துள்ளது. இது தற்போது கரிக்குளம் என்று விளங்குகின்றது.

பராசர தீர்த்தம்: பராசரரால் தோற்றுவிக்கப்பட்டது. கோயில் உட்பிரகாரத்தில் கிணறு வடிவில் அமைந்துள்ளது. இதிலிருந்துதான் எல்லா மூர்த்தங்களுக்கும் அபிஷேகத்திற்கு திருமஞ்சன நீர் எடுத்துச் செல்லப்படுகிறது.

புறவநதி: புறா வடிவில் வந்த அக்னி தேவனால் சிபிச் சக்கரவர்த்தியின் தாகத்தைப் போக்குவதற்காக காவிரியில் இருந்து கொண்டுவரப்பட்டது.

கழுமல நதி: இந்திரனால் ஏற்படுத்தப்பட்ட நந்தவனத்தை பாதுகாப்பதற்காக விநாயகர் காகம் வடிவில் அகத்தியர் கமண்டலத்தில் இருந்த கவிழ்த்துவிட்டு கொண்டுவந்த தீர்த்தம் இது. நகரின் நாற்புறமும் சூழ்ந்துள்ளது.

விநாய நதி: நகரின் கீழ் பாகத்தில் கழுமல நதியில் இருந்து பிரிந்து செல்கிறது.

இது தவிர சூல தீர்த்தம், வைணவ தீர்த்தம், ராகு தீர்த்தம், ஆழி தீர்த்தம், சங்க தீர்த்தம், சுக்கிர தீர்த்தம், அகத்திய தீர்த்தம், கௌதம தீர்த்தம், வன்னி தீர்த்தம், குமார தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், கேது தீர்த்தம், அண்ட தீர்த்தம் என உள்ளன. இக்கோயிலில் விநாயகர், முருகன், சோமாஸ்கந்தர், தேவி சன்னதிக்கு அருகில் சியாமளா தேவி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி, சிலை வடிவங்களும் 63 நாயன்மார்களும் உள்ளனர். கோயிலினுள் உள்ள மேடையின் கீழ் 18 சித்தர்களில் ஒருவரான 'சத்தாய் முனி சித்தர்' ஜீவசமாதி உள்ளது.

கல்வெட்டுகள்

இத்தலத்தைப் பற்றி படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் 46. படியெடுக்கப்படாதது 1. ஆக 47 கல்வெட்டுகள் உள்ளன. இரண்டாம் குலோத்துங்கன் கல்வெட்டு 3, இரண்டாம் ராஜராஜன் சோழன் 5, மூன்றாம் குலோத்துங்கன் 7, வீரராஜேந்திரன் 3, ராஜாதி ராஜ தேவர் 1, கோனேரின்மை கொண்டான் குறிப்பில் 2, மூன்றாம் ராஜராஜ தேவர் 2, கோப்பெருஞ் சிங்கன் 4, பரகேசரிவர்மன் 1, ராஜகேசரி வர்மன் 3, வீர விருப்பண்ண உடையார் 2. ஆண்டு மட்டும் குறிக்கப் பெற்றது 3. கிருஷ்ணதேவராயர் 1, வேங்கட தேவ மகாராயர் 1, பெயர் குறிப்பிடப்படாதது 8 என 46 கல்வெட்டுகள்.

இக்கல்வெட்டுகளில் அக்கால வழக்கங்கள், அளவை முறைகள், தலம், மூர்த்தி இவைகளின் அமைப்புகள் என்பன தெரிய வருகின்றன, இரண்டாம் குலோத்துங்கன் காலத்திலேயே 100 குழி 1 மா, 20 மா 1 வேலி என இப்போதுள்ள நடைமுறை இருந்துள்ளது. நிலத்தை விற்கும்போது அக்காலத்தில் உள்ள நிறை பொன்னையே குறிப்பிடுவது வழக்கத்தில் இருந்துள்ளது. நிலங்கள் சம்பந்தப்பட்ட பரிவர்த்தனை, விற்பனை இவற்றில் புறவு வரி பார்ப்பாரும், கர்ண நாயகத்தாரும் பெருங்குறிச்சி சபையோரும் கையெழுத்து இடுவது வழக்கம்!

நிலத்தின் விலையை பலரின் ஆவணக்களரியின் முன்னிலையில் வாங்கிக் கொள்வது என்றும், கோயில்களுக்கு நிலம் ஒதுக்குகின்ற காலத்தில் பாசனம் வழி, அந்தராயம் (இடைவெளி) இவற்றையும் இல்லிப் பூண்டும், ராவணன் தாடியும் முளைத்து இருக்கின்ற அலைவாயும் (கடற்கரையோரம்) மற்றும் செம்படவர் குடியிருப்பும் இவற்றை விலக்கியே விற்பதும், இறையிலி செய்வது வழக்கம். நிலங்களை விற்கும் போது நிலத்தோடு நீராணிக்காரர்களையும் சேர்த்து விற்பதும் உண்டு!

இத்தலம் ராஜராஜ வளநாட்டு திருக்கழுமல நாட்டு பிரம்மதேயம் திருக்கழுமலம் என்று குறிக்கப்பட்டுள்ளது. பிரம்மபுரீஸ்வரர் திருக்கழுமல உடையார் என்றும், தோணியப்பம் திருத்தோணிபுரம் உடையார் என்றும், தோணியப்பர் பக்கத்தில் உள்ள அம்பாள் பெரிய நாச்சியார் என்றும், திருஞானசம்பந்தரை ஆளுடைய பிள்ளையார் என்றும் குறிப்பிடுகின்றன, அக்கால அரசர்கள் திருமுறைகளைப் புதுப்பிக்கவும் பூசிக்கவும் போற்றவும் மானியம் அளித்து காப்பாற்றி வந்துள்ளனர்.ஆறாம் நூற்றாண்டு ராஜ மகேந்திரனுக்கு பின் வந்த அரசன் வீரராஜேந்திரன், கோயிலில் தொங்கு விளக்குகள் வைக்கவும் தீபம் ஏற்றவும், ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து பழையனூரில் நிலம் தானமாக கொடுத்து இருக்கிறான். ஏழாம் நூற்றாண்டில் திருத்தோணிபுரம் உடையார் பெரிய நாச்சியார் நிவேதனத்திற்காக பாததூளி சதுர்வேதிமங்கலம் தென்பக்கம் கிராமமான கிடாரங்கொண்டான் சோழன் நல்லூரில் நிலம் வழங்கினான்.

அநபாய சோழன் முதலாம் குலோத்துங்கன் ஆட்சி காலத்தில் இறை பணிக்காக கொடுத்த நிலம் தரிசாகக் கிடக்க அதைத் திருத்தி வேறு ஒருவருக்கு அளித்தான். தேவாரத் திருமுறை எழுதிய ஏடுகள் கோயிலில் வைக்கப்பட்டு இருந்தன. அதைப் பூஜித்து கண்காணிக்க ஒரு தமிழ் விரகர் நியமிக்கப்பட்டார். அவர் அவ்வேடுகளைப் பழுதடையாமல் பாதுகாப்பது, பழுதானால் அவற்றை எழுதி பதிப்பிப்பது, பூஜிப்பது அத்துடன் இறைபணிக்காகவும் நிலம் வேண்டும் என கிராமக்காரரிடம் வேண்ட அவர் விருப்பப்படியே நிலம் வழங்கப்பட்டது.

மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டு வீரபாண்டியன் செய்த கலகங்களை அடக்கினான். அடக்கச் சென்றவர்களுள் சீயங்கன் மாமனாரான பொத்தப்பிச் சோழன். இந்த சீயங்கன் ஏற்பாட்டின்படிதான் பவணந்தி புலவர் நன்னூலை இயற்றினார். பொத்தப்பி சோழன் பாண்டிய நாட்டை வெற்றி பெற்றதற்கு அடையாளமாக மதுரையிலிருந்து நடராஜர் சிலையைக் கொண்டுவந்து சீர்காழியில் பிரதிஷ்டை செய்ததுடன் நித்திய பூஜைக்காக வேண்டும் நிலங்களை அளித்தான். திருஞானசம்பந்தர் கோயில் நிர்வாகிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எதிரிலி சோழ சதுர்வேதி மங்கலத்து பெரும் குறிப்பையார் நிலம் அளித்தார்கள்.

கி.பி 1337 க்கு பிறகு விஜயநகர அரசர் புக்கண மகன் இரண்டாம் அரிசுரன் பட்டத்துக்கு வந்து, தென்னாட்டுப் பிரதிநிதியாக வீர கருப்பண்ண உடையாரை நியமித்தான். அவர் தில்லைவிடங்க நல்லூர் சில பட்டர்களுக்கும், சீர்காழியில் உள்ள திருநெறி மாளிகை மடத்துக்கும் மடப்புரம் கொடுத்தார்.

இரண்டாம் ராஜராஜன், மூன்றாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராஜராஜன், மூன்றாம் கோப்பெருஞ் சிங்கன், கிருஷ்ணதேவராயர், வேங்கட தேவராயர் போன்றோர் கோயிலுக்கு தானம் அளிக்கப்பட்டது சம்பந்தமான கல்வெட்டுகள் உள்ளன.

பூஜைகளும் திருவிழாக்களும்

இவ்வாலயத்தில் தினமும் காமிக, காரண, வாதுள, மிருகேந்திர ஆகம விதிப்படி ஆறு கால பூஜைகள் நடைபெறுகின்றன. சித்திரை மாதம் பிரம்மோற்சவம். இதில் இரண்டாம் திருவிழா திருமுலைப்பால் உற்சவம். அன்று ஆளுடைய பிள்ளையாரான திருஞானசம்பந்தருக்கு மலை மேல் விளங்கும் பெரியநாயகி அம்பாள் ஞானப்பால் ஊட்டி காட்சி கொடுத்த ஐதீகம். இந்தக் காட்சியைக் கண்டு ஞானசம்பந்தருக்கு நிவேதித்த ஞானப்பாலை உண்டு அருள் பெறுவர். திருமுலைப்பால் உண்டால் மறு முலைப்பால் உண்ணார் என்பது ஆன்றோர் வாக்கு! ஆண்டுக்கு ஒருமுறை திருமுலைப்பால் உற்சவத்தன்று இப்பெருமான் வீதி உலா வருவார். திருநிலை நாயகிக்கு ஆடிப்பூர உற்சவமும் நவராத்திரி உற்சவமும் நடைபெறும்.

மலை மேல் விளங்கும் பெரிய நாயகருக்கு நாள்தோறும் நான்கு கால பூஜைகளுடன் சித்திரை, ஆடி, ஐப்பசி, தை மாதப்பிறப்புகளிலும், சித்திரை, மார்கழி, திருவாதிரை, கார்த்திகை மாத கார்த்திகை, மாசி மாத சிவராத்திரியின் தைலமும் கலவைச் சாந்து சாத்தி விசேஷ ஆராதனைகள் நடைபெறும். சட்டைநாதருக்கு சுக்கிரவாரத்தன்று (வெள்ளிக்கிழமை) நள்ளிரவில் பூஜை நடத்தப்படுகின்றன. இவருக்கு புனுகு சட்டம் சாத்தி மகா நைவேத்தியம் இன்றி வடை பாயாசம் நிவேதிப்பது வழக்கம்! இவருக்காக உட்பிரகாரத்தில் உள்ள பலிபீடத்திற்கு நாள்தோறும் நித்திய பூஜை அபிஷேக ஆராதனை நடந்து வருகிறது.

பிரம்மோற்சவம் முடிந்த சுக்கிரவாரத்தன்று உற்சவர் முத்துச்சட்டைநாதர் ஏகதின விசேஷ உற்சவம். காலையில் விசேஷ அலங்காரத்துடன் உற்சவர் புறப்பாடாகி வெளிப்பிரகாரத்தில் உள்ள வலம்புரி மண்டபத்திற்கு எழுந்தருளி அபிஷேக ஆராதனை நடைபெறும். திருஞானசம்பந்தருக்கு நித்திய பூஜையுடன் தை அமாவாசை, வைகாசி மூலம், ஆனி ரோகிணி, ஐப்பசி சதயம் முதலிய நாட்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடந்து வருகின்றன, கோயில் காலை 6 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் 9 மணி வரையும் திறந்திருக்கும். இத்தலத்தைப் பற்றி திருஞான சம்பந்தர் 67, திருநாவுக்கரசர் 3, சுந்தரமூர்த்தி சுவாமிகள் 1 என 71 திருப்பதிகங்கள் பாடி உள்ளனர். திருவாசகத்தில் உள்ள பிடித்த பத்தும் இத்தலத்தில் அருளிச்செய்ததே!

சொத்துக்கள்

தருமபுர ஆதீனத்திற்கு உட்பட்ட தேவஸ்தானங்களுள் இதுவும் ஒன்று. இந்த தேவஸ்தானத்துக்கு நன்செய் சுமார் 1432 ஏக்கர். புன்செய் 279 ஏக்கர். ஜாரி நிலம் ஒரு ஏக்கர். இதற்கு வெள்ளியில் இடபங்கள் பெரியது 2, சிறியது 2, பிரதோஷ வாகனம், வெள்ளிப் பல்லக்கு, மஞ்சம், வெள்ளி மயில் வாகனம் மற்றும் பல வெள்ளி சோடசோபசார பொருட்கள் உள்ளன. அம்பாளுக்கு தடாங்கம், திருஞானசம்பந்தருக்கு தங்கத்தில் பால் கிண்ணம், உபயம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம். 2 காசுமாலை கல்லிழைத்த 40 முக்கோண ஸ்ரீசக்கர தடாங்கம் 2, திருஞானசம்பந்தருக்கு தங்க கவசம், மகர கண்டிகை, கல்லிழைத்த ருத்ராட்ச மாலை, திருநிலை நாயகிக்கு தங்கக் கவசம், முத்து சட்டைநாதருக்கு ஜடாமகுடம் என உள்ளன.

சமயப்பணி

இவ்வாதீனம் சித்திரை பிரம்மோற்சவம், நவராத்திரி போன்ற விழாக் காலங்களில் தமிழறிஞர்கள் புலவர்களைக் கொண்டு சமயச் சொற்பொழிவுகள், சித்திரைத் திருவிழாவின்போது திருமுறை மாநாடு நடத்துகிறது. தலச் சிறப்பினை அறிந்து வழிபட நூல்களையும் திருப்பதிகங்கள், பாராயணம் செய்வதற்காக கையடக்க பதிப்பு நூல்கள் குறிப்புகளுடன் 9 திருமுறைகளையும் அச்சிட்டு வழங்குகின்றது

24.6.1949 முதல் இளைஞர்களுக்கு தேவாரப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சிதம்பரத்தில் இருந்து 20 கிலோ மீட்டர் தூரத்திலும், மயிலாடுதுறையில் இருந்து 20 கிலோமீட்டர் தூரத்திலும் உள்ளது.

(தொடரும் வலம்.....)

புத்தக விமர்சனம்

மஸ்னவி ஷரீப்

ஆன்மிக கவிதைகள்

ஆசிரியர்: ஜலாலுத்தீன் ரூமி

தமிழில்: நரியம்பட்டு எம்.ஏ. ஸலாம்

வெளியீடு:

ஃபஹீமிய்யா பப்ளிஷர்ஸ்

மாடம்பாக்கம்

கூடுவாஞ்சேரி – 603202.

விலை : 3,700
(7தொகுதிகள்)

மௌலானா ஜலாலுத்தீன் ரூமி ரஹ்மத்துல்லாஹி அலைஹியால் பாரசீக மொழியில் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட மஸ்னவி ஷரீப் நூலின் தமிழாக்கம்தான் இந்த நூல்.

மஸ்னவி என்பதற்கு ஈரடி என்று அர்த்தம். இரண்டு வரிகளில் கவிதை மூலம் குர்ஆன், ஹதீஸ், தத்துவம், கதை, இசை, ஆன்மிகம், வரலாறு, உதாரணம், விளக்கம், நாடகம் உள்ளிட்ட அனைத்து அம்சங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இந்நூலில் மஸ்னவி ஷரீபின் கவிதைகள் மூல மொழியான பாரசீகத்திலும், பின்னர் உருது மொழியிலும், பின்னர் அவற்றின் பொருள் தமிழிலும் உள்ளன. "ரகசியத்தைத் தேடுபவனே! இந்த உண்மையை அறிந்து கொள். யாருக்குள்ளே வேதனையுள்ளதோ அவர்களுக்கு சத்தியம் விளங்கிவிடும்' என்ற பொருளை விளக்கும் கவிதை தற்காலத்துக்கும் பொருந்தக் கூடியதாக திகழ்கிறது. இதுபோன்ற ஏராளமான ஞான அகமியங்கள் இந்த நூலில் உள்ளதால் இது இஸ்லாமிய ஆன்மிக காவியமாக உள்ளது.

முகமூடி

எம்.ஏ.சுசீலா

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

ஒடுக்கும் குளிரில் ஐந்து மணிக்கே எங்களை எழுப்பி ஆறுமணியிலிருந்து அங்கே உட்கார வைத்திருந்தது 'முகமூடி'யின் அந்த எச்சரிக்கை அலாரம்தான் என்பதை அசைபோட்டுக்கொண்டே சரிவில் இறங்கி அக்காவிடம் வந்தேன்.

"கருமம்..! பீடியைத் தூக்கிப்போட்டுட்டு நேரா உன் கிட்ட வந்து பேசறான் அவன். உனக்குத்தான் பீடி சிகரெட் நாத்தமே ஆகாதே? அந்த முகமூடிக்காரனை மட்டும் எப்படித்தாங்கா சகிச்சுக்கிறே நீ?"

"அதிருக்கட்டும். நீ அந்த மானேஜர் கால்லே விழுந்து கும்பிட்டே போல இருக்கே? அதுக்கு ஏதாவது பலன் தெரிஞ்சதா?"

அக்காவின் கண்கள் எதையும் தப்ப விட்டிருக்கவில்லை.

அவளது கேள்விக்கு நேரடியாக பதில் சொல்லாமல்,

"ரிலாக்ஸ்டா இருங்கன்னு சொல்றார். மனசிலே என்ன இருக்கோ தெரியல" என்றேன்.

"அதுக்குத்தான் நீ நிமிஷத்துக்கு நிமிஷம் முகமூடி முகமூடின்னு இடிச்சுக்காட்டறியே அவன் இப்ப வந்து ஐடியா கொடுத்துட்டுப்போறான். நம்மளை மாதிரி இங்கே நிறைய சீனியர் சிடிஸன்ஸ் தேறுவாங்க போலே.இருக்கு. ஆனா அவங்களோட சேர்ந்தாப்பிலே குறைஞ்ச வயசுள்ள ஆளுகளும் இருக்கிறதாலே வயசானவங்களை மட்டும் குடும்பத்திலே இருந்து பிரிச்சு அப்படித் துணையில்லாம தனியா அனுப்பி வைக்க மாட்டாங்க. ஆனா, நாம ரெண்டு பேரா மட்டுமே இருக்கிறதாலே நமக்கு டிக்கெட் தர்றது சுலபம்தானாம்.. ஆனா..ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை ஷெட்டுக்குள்ளே தலையை விட்டு நாம இங்கேதான் இருக்கோம்னு அவங்களுக்குக் காட்டிக்கிட்டே இருக்கணுமாம். இப்போ ஒரு சின்ன பிரேக்குங்கிறதாலே சீக்கிரம் டிஃபனை முடிச்சிட்டு வந்து உக்காரச் சொல்றான்"

புதினா, கொத்துமல்லித் தழை தூவிய அந்த ஆலு பரோட்டாவைத் தயிரோடும் ஊறுகாயோடும் சேர்த்துச் சாப்பிட நன்றாகத்தான் இருந்தது.

"மூணு வேளையும் இப்படி ஆலு பரோட்டா, மேதி பரோட்டா, ஃபூல்கா சப்பாத்தின்னு எப்படித்தான் கோதுமையா சாப்பிடறாங்களோ?"

"நாம இட்லி தோசைன்னு அரிசியா உள்ளே தள்றோம், அவங்களுக்கு கோதுமை" என்ற அக்கா, சற்று தூரத்தில் நின்றுகொண்டிருந்த 'முகமூடி'யைக் கைகாட்டி எங்களோடு சாப்பிட வருமாறு அழைத்தாள். நல்ல காலமாய் அவன் அதை மறுத்துக் கை அசைத்தபடி, வலது பக்க

ஹெலிபேட் பக்கமாய் நகர்ந்து சென்றான்.



"நல்ல மனுஷன் அம்மு. ஏனோ உனக்குத்தான் அவனைக் கண்டா ஆகலை"

"அக்கா! நல்லா யோசிச்சுப் பாரேன். இங்கே இத்தனை பேர் காத்திருக்கும்போது நம்ம கிட்ட மட்டும் ஏன் அவனுக்கு இப்படி ஒரு கரிசனம்? ஒருவேளை நாம ரெண்டு பேருமா தனியா வந்திருக்கிறதாலே சுலபமா ஏமாத்திடலாம்னு பார்க்கிறானா"

"சே சே அப்படியெல்லாம் இருக்காது,வா அங்கே போய் உக்காருவோம்" என்று கை கழுவிக்கொண்டாள் அக்கா.

இப்போது ஷெட் கதவு திறந்திருந்தது. கதவுக்குப் பக்கத்திலும், கவுண்டர் பொந்திலும் சின்னச் சின்னக் குழுக்களாக மனிதர்கள் கூடுதலாய் மொய்க்கத் தொடங்கியிருந்தார்கள்.

"நாம உக்கார்றதுக்கு முன்னாடி ஒரு தரம் உள்ளே போய்ப் பார்த்துட்டு வந்துடு அம்மு. ஒரு வேளை கேயாடிக் கெட்கூட கிடைச்சுடலாம். எதுக்கும் ரெண்டு பேருக்கும் போக வர சேர்த்து அஞ்சாயிரத்தைத் தனியா எண்ணி எடுத்து வச்சுக்கோ"

உள்ளேயிருந்த ஒழுங்கற்றகும்பலுக்கு நடுவே மானேஜரின் பார்வை என்மீது படுவதற்காகக் காத்திருந்தேன். இருபது நிமிடங்களுக்குப் பிறகு தற்செயலாகப் பார்ப்பதுபோல் என்னைப் பார்த்தவர்

"வில் கால் யூ பஹன் ஜி, ப்ளீஸ் வெயிட் அவுட்சைட்"என்றார்.

நான் எந்த பதிலோடு திரும்புவேன் என்பதை அக்கா முன்கூட்டியே அனுமானித்திருக்க வேண்டும். என் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காமல் இளசும் பெரிசுமாய்ப் பத்துப்பேர் அடங்கிய தில்லிக் குடும்பம் ஒன்று ஒரு வாரமாய் அங்கே முகாமடித்தபடி டிக்கெட் தவம் இயற்றிக்கொண்டிருந்த கதையை சுவாரசியமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். நிறைய தரம் கேட்டுப் பழகிய வார்த்தைகளை வைத்து அந்தக் கதையின் ஓட்டத்தை என்னாலும் கொஞ்சம் புரிந்துகொள்ள முடிந்தது. எங்கள் ஒன்றரை நாள் முயற்சியும் வியர்த்தமாய்ப் போய்விட ஞ், தொய்ந்து போன

முகங்களோடு நாங்கள் மலை இறங்குவதான ஒரு மனக்காட்சி என்னுள்ளே ஓடத் தொடங்கியபோது வேகமாக எங்களை நோக்கி வந்தான் 'முகமூடி'.

"ஜாயியே அபீ. ஜல்தீ.."

என் வேக நடைக்கு ஈடுகொடுத்தபடி அக்காவும் என்னைப் பின்தொடர்ந்தாள்.

தூரத்து மலைத் தொடர்கள் கோலப்புள்ளிகள் போலச் சிறுத்துக் கரைந்து கொண்டே வர, எங்கள் வாகனம் மலையிறங்கிக்கொண்டிருந்தது. சுழித்தும் நுரைத்தும் சீறியும் நெளிந்தும் — பச்சையும் நீலமும் நீலப்பச்சையுமாய்ப் பல நிறங்கள் காட்டியபடி— அலக் நந்தாவாக, பாகீரதியாக, தேவப் பிரயாகையாக, ருத்ரப் பிரயாகையாக எங்கள் வழித்துணை போலக் கூடவே வந்து கொண்டிருந்தாள் கங்கை.

மூன்று நாட்கள் தொடர்ந்த பயணக் களைப்போடு, ஏதோ சிகரத்தைத் தொட்டுவிட்டு வந்தது போன்ற நிறைவும் வெறுமையும் கலந்த ஓர் உணர்வு எங்கள் இருவரையுமே ஆட்கொண்டிருந்ததால், எதுவுமே பேசிக்கொள்ளத் தோன்றாமல் மௌனத்தில் உறைந்திருந்தோம். கூர்மையான கொண்டை ஊசித் திருப்பம் ஒன்றில் வண்டி இலேசாக உலுக்கிப்போட, உறக்கமும் விழிப்புமாய் இருந்த அக்கா நன்றாகவே விழித்துக்கொண்டாள்.

"என்னக்கா கனவு கண்டு முடிச்சு எழுந்தாச்சா?"

"எல்லாமே கனவு மாதிரிதான் இருக்கு அம்மு. நிஜமாவே நாம மேலே போனோமா, கேதாரைப் பார்த்தோமா..? எல்லாம் எப்படி நடந்து முடிஞ்சது? எதை நம்பறது.. எதை விடறதுஞ்? எதுவுமே சொல்லத் தெரியல எனக்கு"

மதியம் இரண்டே முக்காலுக்குக் கிளம்பும் ஹெலிகாப்டருக்கு பன்னிரண்டு மணியளவில் டிக்கெட் கிடைத்ததும்ஞ், ஏதோ அரக்கப்பரக்கச் சாப்பிட்டுவிட்டுப் பள்ளத்தாக்குகளுக்கும் மலைகளுக்கும் இடையிலான ஏழு நிமிடப் பறத்தலில் கேதாரை எட்டியதும்ஞ், சின்னக் கோயிலை வளைவாகச் சூழ்ந்து அரண் போலிருந்த பனிமலைகளின் காட்சியை — தேவர்கள் கூடிக் குதூகலிக்கும் வட்டமான நாடக அரங்குபோலத் தோன்றிய இமயத்தின் அந்த அற்புதத்தை— சுற்றிச்சுற்றி வந்து பார்த்துக் களித்தபடி குழந்தைகள் போலப் பரவசமுற்றதும், மெல்லிய தூறல் நடுவே வடநாட்டுப் பூசாரி ஒருவரின் துணையோடு இளம் செவ்வண்ணத்தில் இருந்த சுயம்புலிங்கத்தைக் கண் குளிரக்கண்டதும்ஞ்— இவை எல்லாமே உண்மையில் நடந்து முடிந்திருக்கிறதா என்ன?

பயணச்சீட்டு கைக்கு வந்து சேர்ந்தபிறகு ஏனோ அந்த 'முகமூடி' எங்கள் கண்களில் படவே இல்லை. தங்கியிருந்த அறையைக் காலிசெய்தபோதும், சாமான்களைக் காரில் வைத்துவிட்டு நாங்கள் திரும்பி வரும்வரை காத்திருக்கச் சொல்லி ட்ரைவரிடம் சொன்னபோதும், சாப்பிடும்போதும் அக்காவின் கண்கள் அவனை மட்டுமே தேடிக்கொண்டிருக்க, அப்போதும் கூட "கவலைப்படாதேக்கா. நாளைக்கு நாம ஊர் திரும்பறதுக்கு முன்னாடி உன் தத்துப்பிள்ளை கட்டாயமா ஒரு பெரிய தொகையைக்

குறிச்சுக்கிட்டு ஆஜராயிடுவான்" என்றே அவளை கலாய்த்துக்கொண்டிருந்தேன் நான்.

ஆனால்ஞ் நாங்கள் கேதாரிலிருந்து திரும்பிவந்து, மலையிறங்குவதற்குத் தயாரான பிறகும்கூட அவன் எங்கேயுமே தென்படவில்லை.

"ரெண்டு நாளா இங்கேயே சுத்திக்கிட்டு கண்ணிலேபட்டுக்கிட்டே இருந்தானே. இப்போ எங்கே போய் ஒளிஞ் சுக்கிட்டான்" என்று மாய்ந்து போனாள் அக்கா.

"அம்மு நீ என்ன நெனச்சாலும் சரி. முன்பின் தெரியாத நமக்கு அவன் செஞ்சிருக்கிற உதவிக்கு நாம ஏதாவது கொடுத்தே ஆகணும்னு நெனக்கிறேன். அது லஞ்சமெனல்லாம் நெனச்சுக்க வேண்டாம். அது, நாம செஞ்சாக வேண்டிய ஒரு சின்னக் கடமை, அவ்வளவுதான்" என்றபடி விஜயை அழைத்து முகமூடி எங்கே இருந்தாலும் அவனைத் தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்துவிடுமாறு ஒரு இரண்டாயிரம் ரூபாய் நோட்டோடு அவனை அனுப்பி வைத்தாள். நானும் இம்முறை அதற்கு மறுப்புச் சொல்லவில்லை.

இறுகிப்போன முகத்தோடு திரும்பி வந்த ட்ரைவர் விஜய், ரூபாய் நோட்டை அக்காவிடம் கொடுத்துவிட்டு "இனிமேலும் மலையிறங்கத் தாமதித்தால் இருட்டிப்போய்க் கஷ்டமாகி விடக்கூடும்"என்பதை அவளுக்குப் புரியவைத்தபடி காரை ஸ்டார்ட் செய்தான். சரியாக அந்த நேரம் பார்த்து எங்களை நோக்கி எங்கிருந்தோ ஓடி வந்தான் 'முகமூடி'.

"உங்களுக்கு சந்தோஷம்தானேஞ் திருப்திதானே"என்று இந்தியில் அவன் திரும்பத் திரும்பக் கேட்பது புரிந்தது. அக்கா அவனுக்குக் கைகூப்பி நன்றி சொல்லிவிட்டுக் காரணத்தோடு விஜயைப் பார்க்க, அவன் 'பின்னால் சொல்கிறேன்' என்பதுபோல் சைகை செய்தான்.

"பஹன் ஜி.! ஏக் ஹீ ஆஷா ஹை மேரே பாஸ்" என்றபடி அழுக்கும் பிசுக்கும் ஏறிப்போயிருந்த



கைபேசியைத் தன் உள்ளங்கையிலிருந்து எடுத்து விஜயிடம் தந்தபடி எங்கள் இருவரோடும் அதில் புகைப்படம் எடுத்துத் தருமாறு கேட்டுக்கொண்டான் 'முகமூடி'.ருத்ரபிரயாகையை நாங்கள் நெருங்கிக்கொண்டிருந்தபோது விஜய்க்கு ஒரு அழைப்பு.

"பத்திரமா போறோமான்னு அந்த 'பாயி'தான் கேக்கறார்.. தங்கமானவர் மேடம் அவர். அப்ப அவருக்கு எதிரிலே என்னால இதை சொல்ல முடியல. இப்போ சொல்றேன். அவர் இந்த ஹெலி சர்வீஸ்லேயே வேலை பாக்கிறதால பயணிகள்கிட்ட பணம் எதுவும் வாங்கக்கூடாதுன்னு எனக்குத் தெரியும். அது தெரிஞ்சா அவரோட வேலையேகூட போயிடலாம். அதனாலேதான் நீங்க பிரியப்பட்டுத்



தந்த பணத்தை ஒதுக்குப்புறமா கூட்டிக்கிட்டுப் போய் அவர்கிட்ட கொடுத்தேன். 'அவங்க ரெண்டு பேரும் என்னோட மூத்த சகோதரிகள் மாதிரி.., நான் அதைத் தொடறதுகூட பாவம்'னுட்டார்! அஞ்சாறு வருஷமா அவரை எனக்குத் தெரியும் மேடம். பாவம் அந்த மனுஷன். டூரிஸ்ட் கைடா இருந்த அவரோட மகன் .கொஞ்ச வருஷத்துக்கு முன்னாலே கேதாரிலே மலைச்சரிவு வந்தப்ப எந்தப் பாதாளத்திலேயோ விழுந்து மறைஞ் சுபோன ஹெலிகாப்டரோட தானும் காணாமப் போயிட்டான்.

கடைசி வரைக்கும் அதைக் கண்டுபிடிக்கவே முடியல. தன்னோட வாய்க்கோணலை மறைக்கப் போட்டுக்கிட்டிருக்கிற முகமூடி மாதிரி எல்லாத்தையும் மனசுக்குள்ளே போட்டுப் புதைச்சுக்கிட்டுப் பொழப்புக்காக இதே ஹெலிகாப்டர்களோட காலத்தை ஓட்டிக்கிட்டிருக்கார் அவர். ஒருவேளை எந்த ஹெலிகாப்டரிலேயாவது தன்னோட மகன் வந்து இறங்கிடக்கூடாதான்னு எதிர்பார்த்துக்கிட்டிருக்காரோ என்னவோ..?" என்று தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் இடையிடையே இந்திக் கலப்போடு சொல்லி முடித்தபோது விஜயின் குரல் கம்மிப்போயிருந்தது..

ரிஷிகேசத்தை நெருங்கிக்கொண்டிருந்தபோது ஆச்சியிடமிருந்து ஃபோன். ஸ்பீக்கரில் போட்டு அக்காவையும் கேட்க வைத்துக்கொண்டே "ரொம்ப நல்ல தரிசனம் ஆச்சி" என்றபடி நடந்ததை சுருக்கமாய் விவரித்தேன்.

"எல்லாம் அந்தக் கேதார்நாதன் கருணைதான், வேறென்ன?" என்று சொல்லியபடி அவர் அழைப்பை முடித்துக்கொண்டபோது, அக்கா தன் கைபேசியில் வந்திருந்த அந்த வாட்ஸப் செய்தியை என்முன் நீட்டினாள். அக்காவின் எண்ணை சேவ் செய்து வைத்திருந்த 'முகமூடி' மலர்ந்த சிரிப்போடு எங்கள் இருவருக்கும் இடையே தான் நின்றுகொண்டிருக்கும் அந்தப் புகைப்படத்தை எங்களுக்கு அனுப்பி வைத்திருந்தான். அதைத் தொடர்ந்த அடுத்த செய்தி 'கங்காதரிடமிருந்து' என்று அவன் பெயரையும் குறிப்பிட்டிருந்ததுஞ்

ஹெலிபேட் பின்னணியில் நின்றிருந்த கங்காதர், காரில் ஏறிய எங்களுக்கு வெகுநேரம் கையசைத்துக்கொண்டே விடைகொடுத்த அந்தக் காட்சிஞ் பல இரவுகள் என்னை விடாமல் துரத்திக்கொண்டிருந்தது.

VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

Idli / Dosa Wet Mix

ఇడ్లీ దోస పిండి

இட்லி / தோசை மாவு

ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

எளிமையான குடியிருப்பில் ராஜா போல் வாழ்ந்த கி.ரா.

லாஸ்பேட்டை உழவர்சந்தை பின்னால் உள்ள எளிமையான குடியிருப்பில் ராஜா போல் வாழ்ந்தவர் எழுத்தாளர் கி.ரா. எப்போது சென்றாலும் ஏதாவது எழுதியபடி இருப்பார். உரையாடவும் வரிசையாக பலரும் வந்தபடி இருப்பார்கள்.

இதற்கு நடுவிலும், அவரது மனைவி கணவதி அம்மாள் மறையும்வரை ஏதாவது விசயத்தை இருவரும் பரிமாறிக்கொண்டே இருப்பார்கள்.

அவர்களுக்கு செப்டம்பர் 16 மறக்க முடியாத நாள். அவர்களின் திருமண நாளும், கி.ரா.வின் பிறந்தநாளும் ஒரே நாளில் வரும் என்பதால் இருவருக்கும் அது மிகவும் முக்கியமான நாளாகத் திகழ்ந்தது.

சில சமயம் விளையாட்டாக உங்க திருமணத் தேதி ஞாபகமிருக்கா என்று அம்மாவிடம் கேட்டால், "16.9.54" என உடன் பதிலளிப்பார் கி.ரா.

கி.ரா.— கணவதி அம்மாளின் திருமண வாழ்வும் எளிமையாக இல்லை. 19 வயதில் திருமணமாகி வந்த கணவதிக்கு, திருமணம் ஆகும்போதே கி.ரா.வுக்கு காசநோய் பாதிப்பு என்ற விசயம் தெரிந்தது. முக்கியமாக அக்காலத்தில் டிபி என்பதால் கி.ரா. ரொம்ப நாள் உயிரோடு இருக்க மாட்டார் என அவர் காதுபடவே பேசியதைத் தாண்டி கைப்பிடித்தார்.

முதல் குழந்தை மல்லிகா பிறந்து, தனது அம்மா வீட்டில் கணவதி இருந்தபோது சரியான கவனிப்பு இல்லாமல் குழந்தை இறந்தது. அதையடுத்து வைராக்கியத்துடன் சிறு வயதில் அடுத்த பிரசவங்களுக்குத் தனது தாய் வீட்டுக்குச் செல்லாமல் இருந்துள்ளார் கணவதி. கணவர் மீதான அன்பால் குடும்பப் பொறுப்பை கணவதி கையில் எடுத்தார்.

நள்ளிரவு ஒரு மணிக்கு குழந்தைகளுடன் சென்று வயலில் தண்ணீர் பாய்ச்சி, வயல் வேலைகளை மட்டுமில்லாமல் குடும்பப் பொறுப்பையும் கையில் எடுத்து கி.ரா.வைக் குழந்தைபோல் பார்த்துக் கொண்டவர் கணவதி. அதனால் கி.ரா.வுக்கு எப்போதும் கணவதி அம்மாள் மீது ரொம்பப் பாசம்.

தனக்கு வியாதி இருந்ததால் குழந்தைகளைக் கொஞ்சக்கூட கி.ரா.வுக்குத் தயக்கமிருந்தது. அத்துடன் கி.ரா. எழுதும் முதல் கையெழுத்து பிரதியைப் படிப்பது கணவதி அம்மாள்தான். புதுச்சேரி வந்த பிறகு பல நிகழ்வுகளுக்கும் தனது மனைவியுடன் இணைந்தே வருவார் கி.ரா. பல நிகழ்வுகளில் மேடையில் அமர்ந்தாலும் தனது மனைவிக்கும் இருக்கை போட்டு பக்கத்தில் அமரவைத்து அழகு பார்த்தவர் கி.ரா. என்பது பலருக்கும் தெரியும். ஜிப்பா போட்டு ஷேவ் செய்து காட்சி தந்த அவர் திடீரென்று சில ஆண்டுகளாக தாடி வைப்பார், சட்டை அணிவதையும் தவிர்க்கத் தொடங்கினார். இதுதான் பிடித்திருக்கிறது என்பார் இயல்பாக.

மனைவியைப் பற்றி இயல்பாகப் பேசுவார், "திருமணமாகி வரும்போது அவருக்கு சமைக்கத் தெரியாது. புளிச்சாறுதான் வைப்பார். ஆச்சரியமாக சில வாரங்களிலேயே அருமையாக சமைக்கத் தொடங்கினார். அப்படி மணக்கும்" என ரசித்து பேசியபடி இருப்பார்.

இருவரிடமும் பேசியபோது கூறிய ஒரு வார்த்தை "எங்களுக்குள் சண்டையே வந்ததில்லை" என்பதுதான். மனைவியின் மீதான நேசிப்பை கி.ரா.வும், கணவர் மீதான பாசத்தை கணவதி அம்மாளும் நொடிக்கு நொடி உணர்த்தியபடியே வாழ்ந்தனர். கணவதி அம்மாள் இறந்த இரு ஆண்டுகளுக்குள் கி.ரா. இப்போது அவரைத் தேடிச் சென்றுள்ளார். அதுவும் காதல்தான்.

கி.ரா எழுதிய கோபல்ல கிராமம் அவருடைய படைப்புகளில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்த ஒரு படைப்பு. அதன் ஐந்தாவது அத்தியாயத்தில் 137 வயதான மங்கத் தாயாரு அம்மாள் பற்றிக் கூறப்படுகிறது. மங்கத் தயாரு அம்மாளின் நினைவிலிருந்து கம்மவார்கள் ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்ததன் கதை சொல்லப்படுகிறது.

பெருமை

கே.மகேஷ்

சென்னதேவி என்ற மிக அழகிய பெண்ணின் காரணமாக அந்த மக்கள் இடம் பெயர்ந்து வர நேர்ந்தது பற்றிய பூர்வ கதை சொல்லப்படுகிறது. இந்த நாவலின் தொடர்ச்சியாகவே "கோபல்லபுரத்து மக்கள்", "அந்தமான் நாயக்கர்" நாவல்களை கி.ராஜநாராயணன் எழுதினார்.

தமிழ் இலக்கியப் பரப்பில் மறக்கமுடியாத படைப்பாக நிலைத்துவிட்ட கோபல்ல கிராமம் நாவலில் இருந்து சில பகுதிகள்:

ஆந்திர தேசத்திலிருந்து கம்மவார் மட்டும் இங்கே வரவில்லை. ரெட்டியார், கம்பளத்தார், செட்டியார், பிராமணர், பொற்கொல்லர், சக்கிலியர் இப்படி எத்தனையோ.. இவர்கள் இங்கே புறப்பட்டு வந்ததற்கும் காரணங்கள் எத்தனையோ.

தெலுங்கு அரசர்கள் இங்கே ஆட்சி செலுத்தியதையொட்டி வந்தவர்கள், பஞ்சம் பிழைக்க வந்தவர்கள், முஸ்லிம் ராஜாக்களுக்கு பயந்துகொண்டு வந்தவர்கள், இப்படி இப்படி.

கம்மவார் என்று பெயர் வந்ததற்கு மங்கத் தாயாரு அம்மாள் சொல்லும் காரணம் காது வளர்த்து வளையம் போன்ற "கம்ம" என்ற காது ஆபரணத்தை இந்தப் பெண்கள் அணிந்துகொள்வதால் இப்பெயர் வந்தது என்று சொல்லுவாள்.



இலக்கியத்தை வகைப்படுத்துவது விமர்சன அழகியலின் முக்கியமான அங்கம். வகைமைகளின் அடிப்படையில் படிநிலையை உருவாக்குவது அரசியல், வணிகம். கி.ரா.வின் கரிசல் கதைகளும், 'கோபல்ல கிராமம்' நாவலும் ஒரு சின்ன வட்டாரத்தின் புள்ளி என்றால், ஹார்டியின் வெஸ்ஸக்ஸ் நாவல்களையும், மார்குவெஸின் மகோந்தோ புனைகிராமத்தையும் எந்த வரையறைக்குள் அடக்குவது? அப்படியென்றால்,





ஆர்.கே.நாராயணன் தன்னுடைய மனிதர்கள், அனுபவங்கள், கற்பனைகள் எல்லாவற்றையும் மால்குடி புனைநகரத்தின் மீது ஏவிவிட்டதுபோல,

கி.ரா. தன்னுடைய மனிதர்கள், அனுபவங்கள், கற்பனைகள் எல்லாவற்றையும் வெவ்வேறு பெயர்களிலான கரிசல் கிராமங்கள் மீது ஏற்றிவிட்டாரா? "ஆமா, அப்படித்தானே இருக்க முடியும்!" என்று சொன்னார் கி.ரா.

தன்னுடைய 98 வருட வாழ்க்கையில் மூன்றில் இரு பங்கு காலம் மரபார்ந்த இடைசெவல் கிராமத்தில் வாழ்ந்த கி.ரா. ஒரு பங்கு காலம் படுநவீனமான புதுச்சேரியில் வாழ்ந்தார்; பல்கலைக்கழகச் சிறப்புப் பேராசிரியர் பணிநிமித்தமாக வந்தவர், ஊரும் மக்களும் பிடித்துப்போனதாலேயே கடைசி வரை புதுச்சேரியிலேயே வாழ்ந்தார். பண்பாட்டுரீதியாக பிரெஞ்சு மனநிலையை அவர் உன்னதமானதாகக் கருதினார். "இந்தப் பொறப்பு எடுத்த நோக்கம் என்ன? சந்தோஷமா வாழணும். அப்படின்னா பறவைகளை மாதிரி சுதந்திரமா, சந்தோஷமா மனுஷங்களும் வாழணும். எந்தக் கட்டுப்பாடும் கூடாது. அதுக்கு இந்தியக் கலாச்சாரம் இடம் கொடுக்கலையே? அட, விருப்பப்பட்ட ஒருத்தரோட சேர்ந்து வாழ இந்தக் கலாச்சாரம் இடம் கொடுக்கலையே!" என்றவர் கிராமங்களைப் புனித மதிப்பீடுகளுக்குள் வைத்துப் பார்க்கப்படுவதை வெறுத்தார்.

கிராமங்கள் முழுமையாகக் கட்டுப்பெட்டித்தனத்துக்கும், நேரெதிரே நகரங்கள் முழுமையாகத் தாராளத்தனத்துக்கும் கருப்பு வெள்ளை வடிவங்களாக முன்னிறுத்தப்படுவதை கி.ரா. புறங்கையால் தள்ளினார். நவீனத்தின் மீதான விமர்சனத்தை நவீனத்தின் கருவிகளைக் கொண்டே கையாள முற்பட்ட ஏனைய எழுத்தாளர்கள் மத்தியில், நவீனத்துக்கு முற்பட்ட கருவிகளாலான விமர்சனத்தை நவீனத்துக்குப் பிந்தைய காலகட்டத்தின் மொழிக்கு அருகில் கி.ரா. கொண்டுவந்து நிறுத்தினார். "காலமும் இடமும் கணக்கு இல்லை. மனுஷன் இருக்குற இடமெல்லாம் மனுஷ நாத்தம் இருக்கும்!"

மனித வாழ்வின் ஒரு சின்ன நிகழ்வை எழுதக்கூட மனிதரைச் சுற்றிலும் உள்ள உலகம் கி.ரா.வுக்குத் தேவைப்பட்டது. இதற்குத் தனக்கு நன்கு பரிச்சயமான ஒரு களமே வசதியாகப் பட்டதாக அவர் கருதினார்.

மனிதர்களின் மேன்மையை எழுதும்போது எழுதுகிறவர் யார், எழுதப்படுகிறவர் யார் என்பது இங்கே ஒரு பொருட்டு இல்லை; மனிதர்களின் கீழ்மையை எழுதும்போது எழுத்தாளன் விசாரணைக் கூண்டில் ஏற்றப்பட்டுவிடுவான். அவனது சகலப் பின்னணிகளும் அவனோடு கூண்டில் ஏற்றப்படும். கி.ரா. இதை உணர்ந்திருந்தார். "ஒரு பொண்ணோட உடல் வதனத்தைக்கூட இங்கெ நாம கொஞ்சம் கூடக்கொறைச்சலா எழுதிட முடியாது. எதுல இங்கே சாதி — மதம் இல்லை?"

இதையெல்லாம் காட்டிலும் மானுடத்தின் ஆதார சுருதியைப் பிடிப்பதையே தன்னுடைய எழுத்தின் குறி என்று அவர் நம்பினார். அதில் காலமோ

இடமோ மனிதர்களோ வேறுபடவில்லை என்று அவர் கூறினார். "மேல்வயித்துப் பசி, கீழ்வயித்துப் பசி இது ரெண்டு மட்டும்தான் நெஜம். மிச்ச எல்லாமே கற்பனையும் கருத்துகளும் மட்டும்தான். எவ்வளவோ ஜனங்களைப் பாத்துருக்கேன். மனுஷங்களோட ஆதார குணங்கள்ல எந்த வேறுபாட்டையும் நான் பார்க்கலை. தலைமுறைகள் தாண்டியும் இது மாறலை."

நீண்ட காலம் இதை மனதுக்குள் அசை போட்டிருக்கிறேன். மனிதர்களின் ஆதார குணங்கள் எல்லாக் காலங்களிலும், உலகெங்கும் ஒன்றுபோலவேதான் இருக்கின்றனவா? தலாய் லாமாவுக்கும் ராமின் ஜஹான்பெல்லூவுக்கும் இடையிலான ஓர் உரையாடலை வாசித்தபோது, கி.ரா. சொன்னதை தலாய் லாமா விரித்துப் பேசியதுபோல இருந்தது. "இத்தனை ஆயிரம் வருஷங்கள் எப்படி இருந்தோமோ அப்படிதான் அடுத்தடுத்து வரும் ஆயிரம் வருஷங்களிலும் இருப்போம். எவ்வளவு காலமானாலும் மனிதர்களின் உணர்வுகளிலோ, மானுடத்தின் மனநிலையிலோ எந்த மாற்றமும் இல்லை."

கி.ரா. தன்னுடைய ஊர்க்கரையின் பின்னணியில் அந்தக் கடலை எழுதினார். சிற்றூரின் பின்னணியிலிருந்து எழுதப்பட்டதால் அந்த நீர்ப்பரப்பு குளம் அல்ல; பெரும் சமுத்திரத்தின் ஒரு சிறு பகுதி அது. ஐந்நூறு ஆண்டுகளில் இந்தத் தமிழ் நிலத்துக்கு வந்த ஒரு சமூகம் இந்த மண்ணில் ஏற்கெனவே நிலைபெற்றிருந்த பல்லாயிரம் ஆண்டு தொன்மரபோடு கலந்தபோது பீறிட்டெழுந்த பண்பாட்டுப் படைப்பாற்றலின் முகிழ் வெளிப்பாடு அது.

கி.ரா.வும் அப்படியே எண்ணினார். புதிதாக எழுந்துவரும் கருத்துகள், கோட்பாடுகள், போக்குகள் எல்லாவற்றையுமே அக்கறையோடு அவர் கவனித்தார். அதேசமயம், ஆழ்மன ரசனையையே கலையை மதிப்பிட சரியான அளவுகோலாக அவர் எண்ணினார். நம்பும் மதிப்பீடுகளை விடவும், சமூகத்தில் நிலவும் உண்மைகளுக்குக் கதைகள் நெருக்கமாக இருக்க வேண்டும் என்று நினைத்தார். பல நவீன எழுத்தாளர்களைப் போலன்றி பண்டைத் தமிழ் இலக்கியத்திலும் தேர்ச்சி பெற்றிருந்த அவர் கருத்துகள், கோட்பாடுகளால் நியாயமற்ற வகையில் வெகு நீண்ட காலத்துக்கு எந்தவொரு படைப்பையும் தூக்கிப் பிடித்திருக்கவோ, மறைத்து வைத்திருக்கவோ முடியாது என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். சொல்லப்போனால், எழுத்து வடிவக் கதையாடல் மீதே நம்பிக்கையற்றிருந்தவர் அவர். பேச்சுவழக்கை அப்படியே எழுத்துவழக்குக்கு மாற்றுபவராக அவர் இல்லை; ஒரு கதை எழுத பல அமர்வுகள் உட்கார்ந்து அடித்து அடித்துத் திருத்தித் திருத்தி எழுதும் வழக்கத்தையே கொண்டிருந்தார்; பேச்சுவழக்கின் அனுகூலமான தொனியை எழுத்துவழக்கின் அனுகூலமான கச்சிதத்துடன் கலந்து அவர் பயன்படுத்தினார் என்றாலும், செவிவழி உள்ளே நுழையும் வாய்மொழி வழக்காறே காலத்துக்கும் நீடிக்கும், எழுத்து வடிவில் நாம் படிக்கும் எல்லாமும் கால ஓட்டத்தில் மறைந்துபோகும் என்று அவர் திரும்பத்திரும்பச் சொன்னார். ஆகையால், அழகியலை நாட்டாரியல், செவ்வியல், நவீனவியல் என்றெல்லாம் பாகுபடுத்திச் சுருக்குவதை அவர் ஒரு கசந்த புன்னகையோடு கடந்தார். உள்ளபடி இவை எல்லாவற்றிலும் ஊடாடும் படைப்புகளைக் கொடுத்ததே அவருடைய தனித்துவம். காலத்திலும் வெளியிலும் வேர் பிடித்திருந்ததே அவருடைய படைப்புகளின் பெரும் பலம்.

கி.ரா.வின் மரணம் தமிழக வெகுஜனத் தளத்தில் ஒரு பெருஞ்சாவாக எதிர்கொள்ளப்பட்டது. இதுவரை நவீன எழுத்தாளர்கள் யாருக்கும் கிடைத்திருக்காத அங்கீகாரமாக தமிழ்நாடு அரசு மரியாதையுடன் அவர் இறுதிச் சடங்கு நடைபெற்றது; புதுச்சேரி அரசும் தன் பங்குக்கு மரியாதை செய்தது. சொந்த ஊரில் கி.ரா.வுக்குச் சிலை அமைக்கப்படும் என்று அறிவித்தார் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்.

புதினம்

சிவகாமியின்

இரண்டாம் பாகம் : காஞ்சி முற்றுகை

முற்றுகை தொடங்கியது 55

மறு நாள் சூரியோதயம் ஆகும் சமயத்தில் கமலி தன்னுடைய வீட்டுத் திண்ணையில் கவலை தோய்ந்த முகத்துடன் உட்கார்ந்திருந்தாள். இரவெல்லாம் கண் விழித்தபடியாலும் கண்ணீர்விட்டபடியாலும் அவளுடைய கண்கள் வீங்கியிருந்தன. கண்ணபிரான் தகப்பனார் அவள் அருகில் உட்கார்ந்து ஆறுதல் மொழிகள் சொல்லிக் கொண்டிருந்தார்.

முதல் நாள் சாயங்காலம் குமார சக்கரவர்த்தி திரும்பி வந்த செய்தி கிடைத்தவுடனேயே கண்ணபிரானும் அவருடனே திரும்பி வந்திருப்பான் என்று கமலி எதிர்பார்த்தாள். புள்ளலூர்ப் போரில் வெற்றிமாலை சூடிய வீரரை வரவேற்க நகர மாந்தரெல்லாம் திரண்டு போனபோது கண்ணபிரானின் தந்தை தாம் போய்க் கண்ணனை அழைத்து வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார். இரவு வெகுநேரம் கழித்து அவர் திரும்பி வந்து, மாமல்லருடன் கண்ணன் வரவில்லை என்னும் செய்தியைத் தெரிவித்தார்.

காஞ்சி நகரில் யாருமே அன்றிரவு தூங்கவில்லையாதலால், மூன்றாம் ஜாமத்தில் சக்கரவர்த்தியும் திரும்பி வந்துவிட்ட விவரம் கிடைத்தது. நாலாம் ஜாமத்தில் வாதாபிப் படைகள் கோட்டைக்குச் சமீபத்தில் வந்துவிட்ட செய்தியும், கோட்டை வாசல்கள் அடைக்கப்பட்டுப் பாலங்கள் தகர்க்கப்படும் செய்தியும் கிடைத்தன. ஆகவே, இனிமேல் கண்ணபிரான் கோட்டைக்குள்ளே வந்து சேருவதற்கே இடமில்லையென்று ஏற்பட்டது. அதனாலேதான் கமலி துயரக் கடலில் ஆழ்ந்திருக்க, கண்ணனுடைய தந்தை அவளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் திடீரென்று சாக்ஷாத் கண்ணனே வீட்டு வாசலில் வந்து நின்றால், அவர்களுக்கு எப்படியிருக்கும்? கமலி சட்டென்று எழுந்து, "கண்ணா!" என்று அலறிக் கொண்டு ஓடிப்போய் அவனைத் தழுவிக்கொள்ள எண்ணியவள், கண்ணனுக்குப் பின்னால் சக்கரவர்த்திப் பெருமான் குதிரையில் வருவது கண்டு நாணமும் திகைப்பும் அடைந்து நின்றாள்.

"கமலி! கண்ணனைக் கொண்டுவந்து சேர்த்துவிட்டேன். இனிமேல் அவனை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்வது உன்னுடைய பொறுப்பு!" என்று சக்கரவர்த்தி புன்னகையுடன் கூறினார். பிறகு, "உன்னுடைய சௌக்கியத்தைப்பற்றிச் சிவகாமி ரொம்ப விசாரித்தாள், அம்மா! உனக்கு ஆண் குழந்தை பிறந்தால், உடனே சொல்லியனுப்பும்படி கூறினாள்" என்று சொல்லிக்கொண்டே சக்கரவர்த்தி குதிரையைச் செலுத்திக் கொண்டு போனார்.

சக்கரவர்த்தியின் பேச்சினால் வெட்கமடைந்த கமலி கண்ணபிரானைக் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டே வீட்டிற்குள் சென்றாள். கண்ணபிரான் தந்தைக்கு முகமன் கூறிவிட்டுக் கமலியைத் தொடர்ந்து உள்ளே சென்றான்.

"இதென்ன கமலி! நான் வந்ததில் உனக்குச் சந்தோஷம் இல்லையா! என்னைத் திரும்பிக்கூடப் பாராமல் உள்ளே வந்து விட்டாயே! ஒருவேளை கண் தெரியவில்லையா?" என்று கண்ணபிரான் கேட்க, கமலி "ஆமாம்; கண் தெரியவில்லைதான்! இரவெல்லாம் அழுது வீங்கிப்போய் விட்டது" என்றாள்.

55 சபதம்

கல்கி

"ஐயோ! ஏன் அழுதாய்?" என்று சொல்லிக்கொண்டு, கண்ணபிரான் அவள் அருகே நெருங்க, கமலி அவனுடைய கையை உதறி, "இந்த அருமையெல்லாம் நேற்று எங்கே போய் விட்டது? நேற்றிரவே ஏன் வரவில்லை?" என்று கேட்டாள்.

"நேற்றிரவே ஏன் வரவில்லையா? எனக்கும் உனக்கும் மத்தியில் ஒரு பெரிய அகழியும் முதலைகளும் ஒரு பெரிய மதிற்சுவரும் இருந்தபடியாலேதான்" என்றான் கண்ணன்.

"அப்படியா? நீ இரவெல்லாம் கோட்டைக்கு வெளியிலா இருந்தாய்? அகழிப் பாலங்களை எல்லாம் இரவுக்கிரவே உடைத்து விட்டார்களாமே, நீ எப்படி உள்ளே வந்தாய்? நீ புறப்பட்டது முதல் நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்" என்று கமலி பரபரப்புடன் கேட்டாள்.

"கமலி! நான் என்னத்தை என்று சொல்ல! நான் பிறந்த கதையைச் சொல்லவா, வளர்ந்த கதையைச் சொல்லவா? புள்ளலூர்ப் போர்க்களத்துக்குப் போன கதையைச் சொல்லவா? வெள்ளத்தில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடியதைச் சொல்லவா? மாமல்லர் ஏறவேண்டிய ரதத்தில் புத்த பிக்ஷுவை ஏற்றிக்கொண்டு வந்ததைச் சொல்லவா? கோட்டைக்கு வெளியே ராத்திரி எல்லாம் அலைந்து திரிந்ததைச் சொல்லவா?" என்றான் கண்ணன்.

பிறகு தான் காஞ்சியிலிருந்து கிளம்பியது முதல் நடந்த அதிசயமான சம்பவங்களையெல்லாம் விவரமாகக் கூறினான். வராக நதிக்கரையில் புத்தபிக்ஷுவை ரதத்தில் ஏற்றிக் கொண்டு புறப்பட்ட பிறகு நடந்த சம்பவங்களைப்பற்றிக் கண்ணபிரான் கூறிய வரலாறு பின்வருமாறு:

குதிரைகளைக் கண்ணபிரான் எவ்வளவு வேகமாகத் துரத்திய போதிலும் புத்த பிக்ஷுவுக்குப் போதவில்லை. மேலும் மேலும் அவசரப்படுத்தினார். வழியில் இரண்டு இடத்தில் குதிரைகளை மாற்றிக்கொண்டு, அஸ்தமித்து ஒரு நாழிகைக்குப் பிறகு காஞ்சிக் கோட்டையின் தெற்கு வாசலை அடைந்தார்கள்.



பிறகு, புத்த பிக்ஷு சொன்னபடி அகழி ஓரமான சாலையின் வழியாகக் கண்ணபிரான் ரதத்தைச் செலுத்திக் கொண்டு போனான். கொஞ்ச தூரம் போனதும் பிக்ஷு ரதத்திலிருந்து இறங்கிக் காட்டுக்குள் நுழைந்து போனார். சற்று நேரத்துக்கெல்லாம் அகழியில் படகு செல்லும் சப்தம் கேட்கவே, கண்ணபிரான் அந்தத் திசையில் கூர்ந்து நோக்கினான். அப்போதுதான் கீழ் வானத்தில் சந்திரன் உதயமாகியிருந்தது. நீண்டு பரந்த மர நிழல்களுக்கு மத்தியில் ஆங்காங்கு ஊடுருவி வந்த நிலாக் கிரணங்களின் சஞ்சல ஒளியில், அகழியில் ஒரு படகு போவதும் அதில் இரண்டு பிக்ஷுக்கள் இருப்பதும் கண்ணபிரானுக்குத் தெரிந்தன. படகு அக்கரைக்குச் சென்றதும் இருவரும் இறங்கினார்கள். கோட்டை மதிலின் சுவரோரமாகச் சென்றார்கள். திடீரென்று இருவரும் மாயமாக மறைந்தார்கள்.

கண்ணபிரான் நெடுநேரம் வரை அங்கேயே காத்திருந்தான். என்ன செய்கிறதென்று அவனுக்குப் புரியவில்லை. 'அவர்கள் எப்படி மறைந்திருப்பார்கள்?' என்று மூளையைச் செலுத்தித் தீவிரமாக யோசனை செய்தான். 'ஒருவேளை கோட்டைச் சுவரில் இரகசிய வழி இருக்குமோ' என்ற எண்ணம் தோன்றியதும் அவனுடைய உள்ளம் கலங்கியது. புத்த பிக்ஷு தன்னை அங்கேயே இருக்கச் சொல்லியிருப்பதால் எப்படியும் திரும்பி வருவாரென்றும், அப்போது இரகசியத்தைக் கண்டுபிடிக்கலாமென்றும், எண்ணிக் கோட்டைச் சுவரில் அவர்கள் மறைந்த இடத்தில் வைத்த கண்ணை வாங்காமல் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். எப்படியோ அவனையறியாமல் தூக்கம் வந்து கண்ணயர்ந்துவிட்டான். திடீரென்று அவன் கண் விழித்த போது, தூரத்தில்

கடல் குமுறிப்புரண்டெழுந்து வருவது போன்ற பயங்கரமான சப்தம் கேட்டது.

முன்னொரு சமயம் ஏரி உடைத்துக்கொண்டு வெள்ளம் வந்த சப்தத்தை அவன் கேட்டிருக்கிறபடியால், மிக்க பீதியடைந்தவனாய், பரபரப்புடன் ஒரு மரத்தின் மேல் ஏறிச் சப்தம் வந்த திசையை நோக்கினான். வெகு தூரத்தில் வெண்ணிலாவின் ஒளியில் யானைகளும், குதிரைகளும், குடைகளும், கொடிகளும், வேல்களும், வாள்களுமாய்த் திரண்டு வந்த சேனா சமுத்திரத்தைக் கண்டான். வாதாபி சைனியந்தான் அது என்று தெரிந்துகொண்டு, எப்படியாவது கோட்டைக்குள் புகுந்துவிட வேண்டும் என்று தீர்மானித்து ரதத்தை அவசரமாகச் செலுத்திக் கொண்டு, தெற்கு கோட்டை வாசலை அணுகினான். கண்ணபிரான் சத்தம் போட்டுக் கோட்டைக் காவலாளிகளை அழைத்ததில் ஒன்றும் பலன் இல்லை. சற்றுநேரம் அங்கேயே தயங்கி நின்ற பிறகு ஒரு யோசனை உதித்தது. 'புத்த பிக்ஷுக்கள் புகுந்த இரகசிய வழி ஒருவேளை தேடினால் கிடைக்கும்! அதன் வழியாய் கோட்டைக்குள் போய்விடலாம்' என்று ஆசையுடன் திரும்பவும் அதே இடத்துக்கு வந்து சேர்ந்தான். அகழியை எப்படிக் கடப்பது என்ற கேள்வி ஏற்பட்டது. நீந்திப் போகலாம் என்று நினைத்ததும், அகழியில் நூற்றுக்கணக்கான முதலைகள் இருப்பது நினைவு வந்து கதி கலங்கிற்று. இதற்குள்ளாகப் படைகள் வரும் முழக்கம் இன்னும் நெருங்கிக் கேட்கலாயிற்று.

'முதலைகளுக்கு இரையானாலும் ஆகலாம்; எதிரிகளிடம் சிக்கக் கூடாது' என்று எண்ணிக் கண்ணபிரான் அகழியில் இறங்கத் தீர்மானித்தபோது திடீரென்று கோட்டை மதிலின் எதிரே ஒரு கதவு திறந்து துவாரம் காணப்பட்டது. அதற்குள்ளிருந்து இளம் புத்த பிக்ஷு ஓடி வருவது தெரிந்தது. கண்ணபிரான் சட்டென்று மரத்தின் பின்னால் மறைந்து கொண்டான். இளம் பிக்ஷு படகில் ஏறுவதையும், இக்கரைக்கு அதைச் செலுத்தி வருவதையும் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது கண்ணபிரானுடைய மூளை தீவிரமாக வேலை செய்தது. இளம் பிக்ஷு கரையில் இறங்கியவுடனே படகைத் தண்ணீரில் கவிழ்க்கப் போவதைப் பார்த்ததும் கண்ணன் பாய்ந்து வந்து அதைத் தடுத்து, இளம் பிக்ஷுவையும் தூக்கிப் படகில் போட்டுக் கொண்டு, தானும் ஏறினான். மெதுவாகப் படகை அக்கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தான்.

சுவரில் திறக்கப்பட்ட துவாரம் அப்படியே இருந்தது. இளம் பிக்ஷுவை அந்தத் துவாரத்திற்குள் தள்ளிவிட்டு, தானும் உள்ளே புகுந்தான். அகழிக்கு அப்பால் அவன் நிறுத்திவிட்டு வந்த ரதத்தின் ஞாபகம் வந்தது. அந்த நினைவினால் அவன் திரும்பி வெளியே வரப் பார்த்தபோது மிகவும் உறுதி வாய்ந்த வஜ்ரக்கையொன்று தன்னைப் பிடித்து உள்ளே தள்ளுவதை உணர்ந்தான். அந்தக் கை மகேந்திர பல்லவருடைய வைரம் பாய்ந்த கைதான் என்பதை உணர்ந்ததும் கண்ணனுடைய ஆச்சரியம் அளவுகடந்ததாயிற்று. அப்போது சக்கரவர்த்தி, "கண்ணா! இந்தக் கள்ள பிக்ஷு பல்லவ இராஜ்யத்தில் இருந்த வாதாபியின் கடைசி ஒற்றன். இவன் தப்பிப் போகாதபடி தடுத்ததால், பல்லவ சாம்ராஜ்யத்துக்கு ஒரு மகத்தான சேவை செய்திருக்கிறாய் வா, போகலாம் கமலி உனக்காகக் கவலையுடன் காத்திருக்கிறாள்" என்று சொல்லிக்கொண்டே அந்த இரகசிய வாசலுக்குள்ளே தாமும் நுழைந்து இரகசியக் கதவை உள்ளிருந்தபடியே சாத்தினார். அவர்கள் புகுந்த இடம் காஞ்சி மாநகரின் பிரசித்தமான இராஜவிஹாரம் என்று விரைவில் கண்ணனுக்குத் தெரிந்தது.

மேற்கண்ட வரலாற்றை எல்லாம் கூறிவிட்டு, கண்ணபிரான் "கமலி! ஏதோ உன்னுடைய மாங்கல்ய பலத்தினாலேதான் நேற்றிரவு நான் பகைவர்களிடம் சிக்காமலும், முதலைகளுக்கு இரையாகாமலும் பிழைத்து வந்தேன். நான் பிழைத்து வந்தது உண்மைதானா என்று இன்னமும் எனக்குச் சந்தேகமாய்த்தான் இருக்கிறது. உன்னுடைய இரண்டு தளிர் போன்ற கைகளினாலும் என்னை கட்டிக்கொண்டு பார்த்து, நான் உண்மையில் உயிரோடுதானிருக்கிறேனா என்று சொல்லு" என்றான்.

"முடியாது, கண்ணா முடியாது! உன்னை நான் கட்டிக் கொண்டால் சின்னக் கண்ணனுக்குத் தொந்தரவாயிருக்கும்!" என்று கூறிவிட்டுப் பொருள் பொதிந்த புன்னகை புரிந்தாள் கமலி.

(சபதம் தொடரும்)

டிஸ்லெக்சியா

டிஸ்லெக்சியா எனப்படும் வாசிப்புக் குறைபாட்டை முதன்முதலாக விவரித்தவர் ஒரு பொது நல மருத்துவர். 120 ஆண்டுகளுக்கு முன்பே அவர் அதைத் துல்லிதமாக விவரித்து எழுதினார். பிரிங்கல் மோர்கன் என்ற அந்த மருத்துவர், தான் பார்த்த பெர்சி என்ற ஒரு 14 வயது பையனைப் பற்றி 1896—ல் பிரித்தானிய மருத்துவ ஆய்விதழில் பின்வருமாறு பதிவு செய்தார்:

"இவன் புத்திசாலியான ஒரு பையன், அறிவைப் பொருத்தவரையில் யாருக்கும் குறைந்தவன் அல்ல. நன்றாகப் பேசுவான். ஆனால் அவனுக்கு வாசிக்க இயலாமல் இருக்கிறது. அவன் எழுத்தில் மிகையான எழுத்துப் பிழைகள் உள்ளன. உதாரணமாக, Percy என்ற தன் பெயரை Precy என்றும் carefully, peg என்ற சொற்களை முறையே carfuly, pag என்றும் எழுதுகிறான். அவனால் 7 என்ற எண்ணை வாசிக்க முடியும், அனால் அதையே ஏழு என்று சொல் வடிவில் எழுதினால் வாசிக்க முடியவில்லை. அவனுக்கு கண் பார்வையில் கோளாறு எதுவுமில்லை"

அன்று தொட்டு, குழந்தை உளவியலில் அதிக அளவு ஆராயப்பட்ட ஓர் ஆய்வுப் பொருளாகவும், நன்கு கற்றுணரப்பட்ட ஒரு வளர்ச்சிக் குறைபாடாகவும் டிஸ்லெக்சியா விளங்கி வருகிறது. இது வாசிப்புக் குறைபாடு, கற்றல் குறைபாடு, தனிப்பட்ட கற்றல் குறைபாடு என்று பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் டிஸ்லெக்சியா என்ற பெயராலேயே இந்தியாவில் பெரும்பாலும் அறியப்படுகிறது. தமிழில் இதை வாசிப்புக் குறைபாடு என்று அழைப்பது பொருத்தமாக இருக்கும் (இது படிப்புக் குறைபாடு அல்ல என்பதைக் கவனிக்கவும்). டிஸ்லெக்சியா சிக்கலான ஒரு கோளாறு. அதை சரிவர புரிந்துகொள்வது கடினம். மருத்துவர்களும் கல்விப் புலன் சார்ந்தவர்களும் கூட தவறாக கருத்துகளை முன்வைப்பதை இணையதளங்களில் காணக்கூடியதாக உள்ளது.

டிஸ்லெக்சியா என்ற ஒரு வளர்ச்சிக் குறைபாடு உண்டு என்பதை அறியாதவர்கள் பலர் (ஆசிரியர் உட்பட) உள்ளார்கள். அதைப் பற்றி கேள்விப்பட்டவர்கள் கூட அதன் தன்மையையும், அது சிறார்களிடம் ஏற்படுத்தும் தாக்கத்தையும் அறியாதவர்களகவே இருக்கிறார்கள். டிஸ்லெக்சியாவைப் பற்றி பெரும்பான்மையான தமிழ் வலைத்தளங்களிலும், புத்தகங்களிலும் காணப்படும் தகவல்கள் தெளிவற்றவையாகவும், குளறுபடியாகவும் உள்ளன. வேறு சில வளர்ச்சிக் குறைபாடுகளை டிஸ்லெக்சியா என்று தவறாக குழப்பிக் கொள்கிறார்கள். வாய்ப்புக் கேடாக, டிஸ்லெக்சியாவுக்கான சில தனியார் சிறப்புப் பள்ளிகளும் கூட இதற்கு விதிவிலக்கல்ல. அண்மைக் காலமாகத்தான் வாசிப்புக் குறைபாடு பற்றிய அறிமுகம் தமிழ்நாட்டில் ஏற்படத்



எம்.எஸ்.தம்பிராஜா

தொடங்கியுள்ளது. 'தாரே ஜமீன் பர்' (2007) என்ற இந்திப் படம் டிஸ்லெக்சியா உள்ள ஓர் எட்டு வயதுப் பையனின் நிறை குறைகளை அழகாகக் காட்சிப்படுத்தி இருந்தது.

டிஸ்லெக்சியா என்றால் என்ன? அதை வரையறுப்பது எவ்வாறு? அதன் மைய குணாம்சங்கள் யாவை? அதில் காணப்படும் குறைபாடுகளை எவ்வாறு புரிந்து கொள்வது? என்பதில் அறிஞர்கள் இடையே நெடுங்காலமாக பல கருத்து வேற்றுமைகளும், சர்ச்சைகளும் இருந்து வந்தன. ஆனால் கடந்த 20, 30ஆண்டுகளில் டிஸ்லெக்சியா குறித்து ஆய்வாளர்களிடேயும் கல்வியாளர்களிடேயும் பெருமளவு கருத்தொற்றுமை ஏற்பட்டத் தொடங்கியுள்ளது. இதனால் மேற்கு நாடுகளில் டிஸ்லெக்சியா உள்ளவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்க வழிகாட்டும் விதமாக பல ஆவணங்கள் வரையப்பட்டுள்ளன [2, 3]. தற்போது வாசிப்புக் குறைபாடு பின்வருமாறு வரையறை செய்யப்படுகிறது:

"ஒரு மனிதனின் வாசிக்கும் திறனைப் பாதிக்கும் மூளை சார்ந்த கற்றல் குறைபாடு டிஸ்லெக்சியா. இக்குறைபாடு உடையவர்கள் சாதாரண அறிவுக் கூர்மை பெற்றிருந்தும் சொற்களை வாசிப்பதில் குறைவான திறனைப் பெற்றிருப்பர். முறையான கல்வி, போதுமான அளவு அறிவுத்திறன் மற்றும் தேவையான அளவுக்கு சமூக, கலாசாரப் பின்னணி ஆகியவற்றைப் பெற்றிருந்தும்கூட, ஒரு மொழியின் ஒலி வடிவத்தையும், வரி வடிவத்தையும் சாதாரண மனிதர்களைப்போல் ஒரே வேகத்திலும், ஒரே சீராகவும் ஒன்றிணைத்து வாசிக்க முடியாததே "டிஸ்லெக்சியா' என்று சொல்லப்படும் வளர்ச்சிக் குறைபாடு."

அடிப்படையில், டிஸ்லெக்சியா என்பது தனிச் சொற்களை சரிவர வாசிக்கக் கற்றுக்கொள்வதில் உள்ள ஒரு குறைபாட்டைக் குறிக்கும். டிஸ்லெக்சியாவில் வாசிப்புத் திறன் மட்டுமே குன்றி இருக்கும். அறிவுக் கூர்மை, பேச்சு, உடல் இயக்கம், சமூகத் திறன்கள் ஆகியவற்றில் குறைபாடுகள் இருப்பதில்லை. இதனால்தான் இது தனிப்பட்ட கற்றல் குறைபாடு/கோளாறு என்று அழைக்கப்படுகிறது. வாசிப்புக் குறைபாடு உள்ள குழந்தைகள் பொதுவாகவே புத்திசாலிகளாகவும், திறமைசாலிகளாகவும் இருப்பார்கள். எனவே இது மனவளர்ச்சிக் குறைபாடு எனும் அறிவுத்திறன் குறைபாட்டில் இருந்து வித்தியாசமானது.

டிஸ்லெக்சியா உள்ளவர்களில் ஏறத்தாழ 50 சதவிகிதத்தினருக்கு எண் கணிதம், எழுத்து ஆகிய கல்வித் திறன்களிலும் குறைகள் காணப்படுகின்றன.



இவை முறையே டிஸ்கல்குலியா, டிஸ்கிரபியா என்று வழங்கப்படுகின்றன. கூட்டாக இவை மூன்றும் கற்றல் குறைபாடுகள் என்று அழைக்கப்படுகின்றன.

வாசிப்புக் குறைபாட்டின் மூன்று முக்கிய அடையாளங்கள்

வாசிப்புக் குறைபாடு ஒரு நோய் அல்ல. அது ஒரு வளர்ச்சிக் (மேம்பாட்டுக்) குறைபாடு. மூளையில் மொழித் திறனுக்கான பகுதிகள் முழுமையான வளர்ச்சி அடையாததால் ஏற்படும் ஒரு குறைபாடு. சொற்களை வாசிப்பதில் இடர்பாடுகள் உள்ளமையே டிஸ்லெக்சியாவில் காணப்படும் முதன்மையான பிரச்சினை. வாசிப்புக் குறைபாட்டின் முக்கிய அடையாளங்கள் மூன்று. ஒன்று, சொற்களை வாசிக்க சிரமப்படுவதும், பிழையாக வாசிப்பதும். மற்றது, மெதுவாக, தடங்கித் தடங்கி வாசிக்கும் தன்மை. மூன்றாவதாக, எழுதும்போது ஏற்படும் எழுத்துப் பிழைகள்.

இந்த வாசிப்பு சார்ந்த பிரச்சினைகள் அறிவாற்றல் குறைபாட்டினால் ஏற்படுபவை அல்ல. கல்வி வாய்ப்புக் குறைவினால் உண்டாகும் பின்னடைவும் அல்ல. நல்ல அறிவு இருந்தும், போதுமான கல்வி பெற்று இருந்தாலும் வாசிப்பில் தன் வயதை ஒத்த சிறார்களை விட குறிப்பிடும்படி, அதாவது இரண்டு ஆண்டுகளாவது, பின்தங்கி இருப்பதுதான் டிஸ்லெக்சியாவின் பிரதானமான அறிகுறி.

இவர்கள் வாசிப்பில் பல வகையான பிழைகள் இருக்கும். ஓர் எழுத்தை விட்டுவிட்டு வாசிப்பது (தகவல் தகல்), ஓர் எழுத்துக்கு பதிலாக வேறு ஓர் எழுத்தை புகுத்துவது (பகுப்பு பருப்பு), ஒரு சொல்லுக்குப் பதிலாக வேறு ஒரு சொல்லை பாவிப்பது (தவறு தப்பு) போன்ற பல வாசிப்புப் பிழைகள் இருக்கும். புதிய சொற்களைக் கற்றுக்கொள்ள சிரமப்படுவார்கள், ஒரு முறை கற்ற சொற்களை விரைவில் மறந்துவிடுவார்கள்.

டிஸ்லெக்சியா உள்ள பிள்ளைகளின் எழுத்தில் பல வகையான எழுத்துப் பிழைகள் இருக்கும். சில எழுத்துகளை விட்டுவிட்டு எழுதுவது, தவறான எழுத்தைப் பாவிப்பது போன்ற பிழைகள் காணப்படும். தமிழில் எழுதும்போது எழுத்து வடிவங்களில் விலங்கு, துணை எழுத்து, கொம்பு, சுழி ஆகியவற்றில் பிழைகள் காணப்படும். எழுத்துகள் தாறுமாறாக இருக்கும். சொற்களின் எழுத்துகளின் வரிசைக் கிரமம் மாறி இருக்கும். இடம் வலம் மாறி எழுதுவதுதான் (தீ # பீ) டிஸ்லெக்சியாவில் உள்ள பிரதான எழுத்துப்பிழை என்ற தவறான ஒரு கருத்து பலரிடையே உண்டு. ஆனால் இதில் உண்மையில்லை. வளரும் பிள்ளைகள் பலர் இந்தத் தவறை செய்வதுண்டு.

விரைவாக வாசிப்பது இவர்களுக்குக் கைவராத ஒரு கலை. சிலர் ஐந்தாம், ஆறாம் வகுப்பிலும் எழுத்துக் கூட்டி வாசிப்பார்கள். வயது வந்த பின்னும் கூட விரைவாக வாசிக்க இவர்கள் சிரமப்படுகிறார்கள். கடுமையான சொற்களை (உ—ம். புறநானூறு, சுற்றுப்புறம்) வாசிப்பதில் இடர்பாடுகள் இருக்கும்.

கண்களுக்குப் புலனாகாத குறைபாடு

வாசிப்பதில் இவர்களுக்கு உள்ள சிரமங்களை ஆசிரியர்களும், பெற்றோர்களும் படிப்பில் அக்கறை இன்மை, சோம்பல், விளையாட்டுப் புத்தி, அறிவுக் கூர்மையின்மை என்று அர்த்தப்படுத்திக் கொள்கிறார்கள். அல்லது போகப்போக சரியாகிவிடும் என்று அலட்சியப் படுத்துகிறார்கள். மேலும், டிஸ்லெக்சியா பற்றிய விழிப்புணர்வு ஆசிரியர்களிடம் கூட குறைவாகவே உள்ளது. டிஸ்லெக்சியா என்று ஒன்று இல்லை, அது வெறும் கற்பிதம் என்று எண்ணுகிறவர்களும் உண்டு. இதனால் 120 ஆண்டுகளாக அறியப்பட்ட போதிலும் டிஸ்லெக்சியா பெரும்பாலும் கண்களுக்குப் புலப்படாத ஒரு குறைபாடாகவே இருந்து வருகிறது. பள்ளி, குடும்பம் மற்றும் பணியிடத்தில் இவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் கல்வி இழக்கிறார்கள், வாழ்வியல் வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறாமல் சமுதாயத்தின் விளிம்புக்குத்

படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com



தள்ளப்படுகிறார்கள். இவர்களுக்கு படிப்பு வராது என்று தீர்மானிக்கப்பட்டு, பலர் பள்ளியில் இருந்து விலக்கப்படுகிறார்கள். பலர் தானாகவே படிப்பை நிறுத்திவிடுகிறார்கள். வேறு சிலர் குற்றச் செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

டிஸ்லெக்சியா என்ற வாசிப்புக் குறைபாடு எல்லா மொழி பேசுபவர்களிடையேயும் காணப்படுகிறது [6]. பெரும்பாலான ஆய்வுகள் ஆங்கில மொழி பேசும் நாடுகளிலேயே நடத்தப்பட்டுள்ளன. ஆயினும், சீன, ஜப்பானிய, ஐரோப்பிய மொழி பேசுவர்களிடையேயும் பல ஆராய்ச்சிககள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியாவில் டிஸ்லெக்சியா பற்றிய ஆராய்ச்சிகள் மிகக் குறைவு. நடத்தப்பட்டுள்ள ஓரிரு ஆய்வுகள் டிஸ்லெக்சியா இந்திய மொழிகள் பேசுபர்களிடையேயும் காணப்படுகிறது என்பதை ஐயமற நிறுவியுள்ளன.

பல நாடுகளிலும் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின்படி டிஸ்லெக்சியா 5—ல் இருந்து 10 விழுக்காடு சிறார்களுக்கு உண்டு என்று அறியப்படுகிறது [8]. இதை 5 விழுக்காடு என்று எடுத்துக் கொண்டாலும் 40 மாணவர்கள் உள்ள ஒரு வகுப்பில் 2 பேர், 2000 மாணவர்களைக் கொண்ட ஒரு மேல்நிலைப் பள்ளியில் 100 பேர் என்ற அளவில் டிஸ்லெக்சியா காணப்படும் என்று எதிர்பார்க்கலாம். டிஸ்லெக்சியா ஆண்களில் கூடுதலாக, ஆண்:பெண் விகிதம் 2:1 என்ற அளவில், காணப்படுகிறது.

ஏன் உண்டாகிறது?

டிஸ்லெக்சியா சில குடும்பங்களில் பரம்பரை பரம்பரையாக ஏற்படுகிறது. டிஸ்லெக்சியா உள்ள ஒரு பையனின் தகப்பனாருக்கு டிஸ்லெக்சியா இருக்கும் வாய்ப்பு 44% என்றும், தாய்க்கு 33% என்றும் ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன [9]. எனவே, இந்தக் குறைபாடு உண்டாவதற்கு மரபணுக்கள் ஓரளவு காரணமாக இருக்கின்றன. டிஸ்லெக்சியாவை உண்டுபண்ணும் மரபணுக்கள் சிலவும் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆயினும் இந்த மரபணுக்கள் உள்ளவர்களில் 15 சவிகிதத்தினரே டிஸ்லெக்சியாவால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, சூழல் சார்ந்த வேறு காரணிகளும் காரணமாக இருக்க வேண்டும். ஆனால் இது பற்றி தெளிவாகத் தெரியவில்லை. இந்த மறபணுக்களினதும் மற்றும் அறியப்பட்டாத பல காரணிகளின் தாக்கம் காரணமாக ஆரம்பகால மூளை வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. இதனால் மொழிசார்ந்த உளவியல் படிமுறைகளில் சில குறைபாடுகள் ஏற்படுகின்றன.

மூளையில் காணப்படும் வளர்ச்சிக் குறைபாடுகள்

டிஸ்லெக்சியா உள்ளவர்களின் மூளையை காந்த அதிர்வு அலை வரைவு (எஃப் எம்.ஆர்.ஐ) கொண்டு பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. அதுவும் சொற்களை வாசிக்கும்போது இச்சோதனைகளைச் செய்வதால் மூளையில் எந்தெந்தப் பகுதிகள் திறம்பட இயங்கவில்லை என்பதை ஒரு காணொளியைப் போல காட்சிப்படுத்தி அறிய முடியும். டிஸ்லெக்சியா உள்ளவர்களின் மூளையின் மேலுறையின் செயல்பாட்டில் சில குறிப்பிட்ட வித்தியாசங்கள் உள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. காட்டாக, இவர்களின் இடதுபக்க மூளையில் உள்ள மொழிசார்ந்த மையம் குறைவாக இயங்குகிறது என்று தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக ஒரு சொல்லில் உள்ள எழுத்தின் ஒலியையும், அதன் வடிவத்தையும் தொடர்புபடுத்தியும், ஒருங்கிணைத்துப் பார்ப்பதும் இவர்களுக்குக் கடினமாக உள்ளது. இந்த உளவியல் திறன் குறைவாக இருப்பதால் மொழியை வாசிக்கக் கற்றுக்கொள்வதில் தடுமாற்றங்கள் ஏற்படுகின்றன. இதுவே டிஸ்லெக்கியாவில் உள்ள அடிப்படை உளவியல் சார்ந்த கோளாறு.

ஆங்கிலத்துக்கும் தமிழுக்கும் உள்ள இந்த வித்தியாசங்கள் முக்கியமானவை. ஆங்கில வாசிப்பு முறையை ஆராய்ச்சி செய்த அளவுக்கு தமிழ் உட்பட இந்திய மொழி வாசிப்பு ஆராய்ச்சி செய்யப்படவில்லை. டிஸ்லெக்சியா பற்றி தமிழில் உள்ள கட்டுரைகளும் புத்தகங்களும், பள்ளிக்கூடங்களும் ஆங்கிலம் கற்றுக்கொடுப்பதை பற்றித்தான் பேசுகின்றன!

ஆரம்ப அறிகுறிகள்

டிஸ்லெக்சியா குழந்தையின் வாசிப்புத்திறனை பாதிப்பதால், குழந்தையைப் பள்ளியில் சேர்த்த பின்பே இக்குறைபாடு இருப்பது பெரும்பாலும் தெரியவருகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும்



ஒவ்வொரு விதத்தில் இக்குறைபாட்டின் அறிகுறிகள் இருக்கக்கூடும். டிஸ்லெக்சியாவை 5 வயதுக்கு முன்னரே அடையாளம் காண இயலும் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஆனாலும் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் கூட 7 அல்லது 8 வயதில்தான், அதாவது 2 அல்லது 3 ஆண்டுகள் ஆரம்பப் பள்ளியில் படித்த பின்தான், அடையாளம் காணப்படுகிறது.

வாசிப்புக் குறைபாட்டில் காணப்படும் சில ஆரம்ப அறிகுறிகள் (2 — 5 வயது வரை) பின்வருமாறு: அரிச்சுவடியை கற்றுக்கொள்வதில் சிரமங்கள்,எதுகை மோனையுடன், "நிலா நிலா ஓடிவா, நில்லாமல் ஓடி வா" போன்ற பாலர் பாடல்கள் பாடுவதில் இடர்பாடுகள், பொருட்கள், நிறங்கள், எண்கள் ஆகியவற்றின் பெயர்களைக் கூறுவதில் குழப்பங்கள், கதைகளைக் கேட்பதில் விருப்பம் காட்டுவார்கள், ஆனால் தானாக வாசிப்பதில் சிரத்தையின்மை, பிற குழந்தைகளோடு ஒப்பிடுகையில் தாமதமான பேச்சு வளர்ச்சி, வயதுக்குப் பொருத்தமற்ற மழலைப் பேச்சு, சொற்களை ஒலிப்பதில் குழப்பங்கள் (வண்ணத்துப் பூச்சி பல்லாத்தி பிச்சி), தன் பெயரில் உள்ள எழுத்துகளை அறிந்துகொள்ள முடியாமை, தொடக்கப் பள்ளியிலும் மேல்நிலைப் பள்ளியிலும் (6 வயதின் பின்), தனது வயதுக்குரிய நிலையை விட 2 வகுப்புகள் குறைவான வாசிப்புத் திறன், மெதுவாக, தடங்கித் தடங்கி வாசிக்கும் தன்மை, வகுப்பில் உரக்க வாசிப்பதில் சிரமங்கள், ஆசிரியர் கரும்பலகையில் எழுதியதைப் பார்த்து எழுதுவதில் சிரமங்கள், வாய்மொழியாக பதில்கள் கூற முடிந்தாலும் அதை எழுத்தில் வார்ப்பதில் இடர்பாடு, கடும் எழுத்துப் பிழைகள், இரண்டாவது மொழி ஒன்றைக் கற்றுக்கொள்வதில் தடங்கல்கள்

கூற வந்த விஷயத்துக்குத் தக்க வார்த்தைகளைகளைத் தேர்ந்தெடுப்பதில் சங்கடங்கள்.

வயது போகப்போக இந்த மாணவர்கள் வாசிப்பில் பின்தங்கி இருக்கிறார்கள் என்பது அப்பட்டமாகத் தெரிய வரும். காட்டாக, டிஸ்லெக்சியா உள்ள எட்டு வயது பையன் ஒருவன் ஐந்து வயதான அவன் தங்கையின் பாடப் புத்தகத்தை வாசிக்க சிரமப்பட்டான்! ஆனாலும் இதை அறிவுத் திறன் குறைபாடு அல்லது சோம்பேரித்தனம், போகப் போக சரியாகிவிடும் என்று தவறாக பல ஆசிரியர்களும் பெற்றோர்களும் எண்ணுவதுண்டு.

மற்ற பாடங்கள் கற்றுக் கொடுப்பதிலும் சில வித்தியாசமான அணுகுமுறைகளைக் கடைப்பிடித்தால் இந்த மாணவர்கள் விரைவாகக் கற்றுக் கொள்கிறார்கள் என்று ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. எழுத்தை மட்டும் ஆதாரமாகக் கொள்ளாமல் வரைபடங்கள், காணொளிகள், கலந்தாய்வுகள், செய்முறை அனுபவம் போன்ற கற்றல் முறைகள் மூலம் இவர்கள் பெரும் பலனடைகிறார்கள்.

இதுவரை டிஸ்லெக்சியா ஒரு குறைபாடாகவே பார்க்கப்பட்டது என்பதைக் கவனிக்கவும். டிஸ்லெக்சியா உள்ள சிறுவர், சிறுமியரிடையே பல ஆற்றல்களும் வலிமைகளும் தேங்கிக் கிடக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. பள்ளிக்கூடங்கள் இவர்களின் குறை, நிறைகளை அறிந்து முனைப்புடன் செயல்படுவது அவசியம். டிஸ்லெக்சியா உள்ள பலர் இயல்பாகவே புத்திக் கூர்மை கொண்டவர்களாகவும், படிப்பில் ஆர்வம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள். சிலர் கைத்திறன், ஓவியம், இசை, கணனித் திறன் போன்ற துறைகளில் வல்லவர்களாக இருப்பார்கள். பள்ளிக்கூடங்கள் இத்திறன்களை வளர்தெடுக்க முன்வர வேண்டும்.

வாசிப்புக் குறைபாடு உள்ள மாற்றுத் திறனாளி மாணவர்களை அசட்டை செய்வதால் திறன் மிக்க பலரை நாடு இழந்து கொண்டிருக்கிறது. டிஸ்லெக்சியா உள்ள மாணவர்களும் அவர்கள் பெற்றொர்களும் படும் அல்லல் சொல்லி மாளாது. கல்வித் துறையின் கவனம் இவர்களின் பக்கம் திரும்புமா என்று காத்துக்கொண்டு இருக்காமல் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வி பெறும் உரிமையை நிலைநாட்ட குரல் எழுப்ப முன்வர வேண்டும்.

கரோனா இரண்டாம் அலை: சிறிய மாற்றத்தால் வெல்லலாம்!

கொரோனா தீநுண்மியை விட மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டது என்றால் அது அச்சமும், கவலையும் தான். கொரோனா பெருந்தொற்று நமது உடல், தொழில், நிதி, உறவுகள் ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

நம்மைச் சுற்றி நடக்கும் செயல்களுக்கு நமது உடல் அச்சத்தையும், கவலையையும் இயற்கையாக வெளிப்படுத்தும். ஆனால், அதையும் மீறி இந்த கொடிய தீநுண்மியில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும், உயிர் வாழவும் எதிர்ப்புத் தன்மைக்கு நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்.

மருத்துவமனைகளில் படுக்கை, ஆக்சிஜன் தட்டுப்பாடு நிலவுகிறது என்ற நிச்சயமற்ற தகவல்களால் மன அழுத்தம், கவலை உணர்வு அதிகரிப்பது இயற்கை. மன அழுத்தமும், கவலையும் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைத்தும், ரத்தத்தில் சர்க்கரை அளவை அதிகரித்தும், ரத்த அழுத்தத்தை அதிகரித்தும், சுவாசத்தைக் குறைத்தும் பல பாதிப்புகளை அளிக்கும் என அறிவியல் ஆய்வுகள் கூறுகின்றன. நீண்ட நாள்களாக அச்சத்துடன் வாழ்ந்தால் நோயை எதிர்ப்பதில் செயலிழந்துவிடுவோம்.

அச்சத்தை சரியான பாதையில் கொண்டு சென்று பயன்படுத்தவில்லை என்றால் அது இழப்பை ஏற்படுத்தும் உணர்ச்சியாகவே இருக்கும்.

கொரோனா தீநுண்மியால் பாதிக்கப்பட்டவர்களில் நோய் அறிகுறிகள் பெருமளவில் இல்லாத ஏராளமானோர் வீடுகளில் தனிமைப்படுத்தி கொண்டு குணமடைந்துள்ளனர். கடுமையான நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் மருத்துவமனைகளுக்கு சென்று சிகிச்சை பெற்று குணமடைந்துள்ளனர். வீடுகளிலேயே தனிமைப்படுத்தி கொண்டு சாதாரணமாக குணமடைந்த ஏராளமானோர் தங்களின் வாழ்க்கை முறைகளில் சிறிய மாற்றங்களைக் கடைப்பிடித்தவர்களாவர். அவர்கள் செய்ததை நீங்களும் பின்பற்றினால் சிறந்த பலன்களைப் பெறலாம். அவர்கள் அப்படி என்ன செய்தார்கள்?

1. வீட்டிலிருப்பது

கொரோனா பாதிப்பு தொடரை உடைப்பதோ அல்லது கூட்டுவதோ நம்மிடமே உள்ளது. ஆகையால், தற்போதைய உடனடித் தேவை வீட்டிலேயே இருப்பதுதான் முக்கியமானது.

2. நிம்மதியான உறக்கம்

கொரோனா தீநுண்மி தொற்றை எதிர்கொள்ள தேவையான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் எத்தனை விதமான பானங்களை வேண்டுமானாலும் எடுத்துக் கொண்டாலும், உடலுக்கு தேவை நிம்மதியான உறக்கம்.

உறக்கமும், நோய் எதிர்ப்பு சக்தி குறைவும்தான் கொரோனா நோயாளிகளை குணமடைவதில் இருந்து தாமதப்படுத்துகின்றன என அறிவியல்

ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆகையால், கொரோனா வால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் இரவு நேர உறக்கத்துக்கு முக்கியத்துவம் அளியுங்கள்.

3. வைட்டமின்கள் தேவை

நோய் எதிர்ப்பு சக்திக்காக இந்த வகை மருந்துகள் உலகம் முழுவதும் வழங்கப்படுகின்றன. இவை பாதிப்பில் இருந்து மீளவும், மேம்படவும், நுரையீரலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதில் இருந்து தடுக்கவும் உதவுகின்றன. இவை உணவுகளில் இருந்தும் கிடைக்கும். எனவே அவற்றை கூடுதலாக சேர்த்து கொள்ள வேண்டியது அவசியம்.

வைட்டமின் சி — எலுமிச்சம் பழம், ஆரஞ்சு பழம், அன்னாசிப்பழம், நெல்லிக்காய், கொய்யா, குடைமிளகாய், பப்பாளி பழங்களில் கிடைக்கும்.

துத்தநாகம் (ஜிங்க்) — பூசணிக்காய் விதைகள், டபுள் பீன்ஸ், சுண்டல், சூரியகாந்தி விதைகள், இறால், சிப்பிகள், நண்டு, முந்திரி, பாதாம், முட்டை,

ஸிங்க் குட்டினோ

சிக்கன், மட்டன் ஆகியவற்றிலும் கிடைக்கும்.

செலினியம் — காளான், முட்டை, சீஸ்களில் கிடைக்கும்.

வைட்டமின் டி3 — சூரிய ஒளி, காளான், முட்டை

4. மஞ்சள் பூசணிக்காய் சூப்

வெங்காயம், சிறு கேரட், சிவப்பு பயிறு, பட்டாணி, மஞ்சள் பூசணிக்காய் (பரங்கிக்காய்), இஞ்சி —பூண்டு, உப்பு, மிளகு, மஞ்சள், புதினா, தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை தண்ணீருடன் சேர்த்து சுமார் 30 நிமிடம் கொதிக்க வைத்து சூடாக சாப்பிடவும். இத்துடன் கருஞ்சீரகத்தை சேர்த்து கொள்வது நல்லது.



5. புரதச் சத்துள்ள உணவுகளை உண்ணுதல்:

புரதச் சத்து உணவுகள் நமது உடலில் உள்ள ஒவ்வொரு உயிரணுக்களை கட்டமைக்கக் கூடியதாகும்.

சைவ உணவுகள் — பச்சைப் பட்டாணி, பயறு — பருப்பு வகைகள், பீன்ஸ், சுண்டல்.அசைவ உணவுகள் — முட்டை, மீன், சிக்கன், மட்டன்

6. மூச்சுப் பயிற்சி செய்தல்

உடல் சோர்வு இல்லாமல் இருந்தால் வீட்டில் நடைப்பயிற்சி செய்துவிட்டு, யோகா, மூச்சுப் பயிற்சி அல்லது பிராணாயாமம் ஆகியவற்றை செய்ய வேண்டும். இதன் மூலம் உடலுக்கு கூடுதல் ஆக்சிஜன் கிடைக்கும். பலூன்களை வாயால் ஊதி வெடிக்கச் செய்வதாலும் நுரையீரல் வலுவடையும்.

7. மூளைக்கு வேலை கொடுங்கள்

மனதை உற்சாகப்படுத்தும் விதத்தில் செயல்பட வேண்டும். எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி பிறருக்கு உதவுவது அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிக்கும். பணம், நிதி உதவிகள் அளிப்பது மட்டுமல்லாமல் பிற வழிகளிலும் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும். உங்கள் சொந்தங்களின் நலனுக்காக பிரார்த்தித்து அவர்களுடன் தொலைபேசியில் உரையாடலாம்.

8. இஞ்சி டீ

தோல் நீக்கிய இஞ்சி துண்டு, லவங்கம், துளசி இலை, கற்பூரவள்ளி இலை, மிளகு, ஏலக்காய், இடித்த பூண்டு, பெருஞ்சீரகம், ஓமம், சீரகம் ஆகியவற்றை தண்ணீரில் 10 நிமிடங்கள் கொதிக்க வைத்து வடிகட்டி குடிக்கவும். இந்த வகை டீ, நுரையீரல் செயல்பாட்டை சீராக்க உதவும்.

9. உடல் வலியைப் போக்க

கொரோனா தொற்று பாதிப்பால் உடல் வலி வழக்கமாக இருக்கும். மருத்துவர்கள் அளிக்கும் மருந்துகளைத் தவிர உணவு முறையில் சேர்க்க வேண்டிய உணவுப் பொருள்கள்.

—மஞ்சள், இஞ்சி, பூண்டு, மிளகு, சீரகம், மிளகு, தேங்காய் எண்ணெய் அல்லது நெய் ஆகியவற்றை தினசரி உணவு சமைக்கும்போது சேர்த்து கொள்ள வேண்டும்.

—எலுமிச்சை அல்லது சாத்துக்குடி பழரசத்தை எடுத்து கொள்ளலாம். (நீரிழிவு பாதிப்பு இல்லாதவர்களுக்கு)

—ஆலிவ் ஆயிலை பச்சை காய்கறிகளுடன் (சாலட்) சேர்த்து சாப்பிடலாம்.

— உப்பில் ஊற வைக்காத பாதாம், அக்ரூட், முந்திரி

—ஆளி விதைகள், மீன், சியா விதைகள் (ஓமேகா 3 கொண்டவை)

—பச்சை அல்லது சிவப்பு மிளகாய் சேர்த்து கொள்ளலாம்.

—சர்க்கரை, பதப்படுத்தப்பட்ட மாமிச உணவுகள், பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட உணவுகள், ரீபைண்ட் ஆயில், சிகரெட், மதுபானங்கள் ஆகியவற்றை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

—ஆழ்ந்த உறக்கம்.

—தேங்காய், எள், ஆமணக்கு எண்ணெய் ஆகியவற்றை சமமாக சேர்த்து சற்று சூடாக்கி மூட்டு மற்றும் உடல் இணைப்பு பகுதிகளில் தூங்குவதற்கு முன்பு தேய்க்கவும்.

10. நீராவி பிடித்தல்

இப்படி செய்வதால் மார்பு, நாசி பகுதிகள் விரிவடைவதுடன், உடலில் இருக்கும் சளியும் வெளியேறும். ஓமம், மஞ்சள் தூள், 2—3 துளி நீலகிரி தைலத்தைச் சேர்த்து 3 முதல் 5 நிமிடங்களுக்கு நீராவி பிடிக்க வேண்டும். அதிகமாக சளி இருந்தால் பால் பொருள்களை தவிர்க்கலாம்.

11. தடுப்பூசி செலுத்துவதற்கு முன்பும், பின்பும்

செலுத்துவதற்கு முன்: இரவில் நன்றாக உறங்கிவிட்டு, நன்றாக தண்ணீர் பருக வேண்டும். டீ, காபி, மதுபானங்களை நான்கு நாள்களுக்கு முன்பு நிறுத்திவிட வேண்டும். துத்தநாகம் நிரம்பிய உணவுகளை எடுத்து கொள்ள வேண்டும். தடுப்பூசிகள் மீது நம்பிக்கை வைத்து எடுத்து கொள்ள வேண்டும்.

செலுத்திக் கொண்ட பின்பு: உடலில் சிறு மாற்றங்கள் ஏற்பட்டால் தடுப்பூசி வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது என்று எடுத்துக் கொள்ள வேண்டும். உடலில் எதிர்ப்பு சக்தி உற்பத்தியாக ஆரம்பித்துவிட்டது என்றும் கருதலாம். சற்று காய்ச்சல், குளிர், சோர்வு, தலைவலி, மயக்கம், மூட்டு அல்லது தசை வலி ஆகியவை ஒன்று அல்லது மூன்று நாள்களுக்கு இருக்கும்.

* முழுமையாக ஓய்வு எடுக்க வேண்டும். இளநீர், எலுமிச்சை சாறு, தர்பூசணி, ஆரஞ்ச், பப்பாளி ஆகிய பழங்களை எடுத்து கொள்ளலாம்.
* காய்ச்சல் இருந்தால் உடலை சூடாக வைத்து கொள்ள இஞ்சி டீயை பருகலாம்.

* சுவாசப் பயிற்சியும், நிம்மதியான உறக்கமும் இயற்கை மருந்துகளாக உதவும்.

* பசிக்கு ஏற்ப உண்ண வேண்டும். வீட்டில் உருவாக்கிய உணவுகளையே சிறிது சிறிதாக இடைவெளிவிட்டு உண்ணலாம்.

* தேங்காய், எள், ஆமணக்கு எண்ணெய் ஆகியவற்றை சமமாக சேர்த்து சற்று சூடாக்கி உடல் வலிக்கு பயன்படுத்தலாம்.

* தலைவலிக்கு சூடான நீரில் மிளகை சேர்த்து குடிக்கலாம்.

* வெறும் வயிற்றில் நோய் கஞ்சியை சாப்பிடலாம். 10 நாள்கள் வரை சிகரெட், மதுபானங்களை உட்கொள்ளக் கூடாது.

12. மன அமைதியுடன் இருக்க வேண்டும்

இன்றைய சூழலில் சமூக வலைதளங்கள், ஊடகங்களில் வெளியாகும் உணர்ச்சிமிக்க செய்திகளைக் காணுவதைத் தவிர்ப்பது நல்லது. மனம் அமைதியுடன் இருக்க வேண்டும்.

கொரோனா வால் ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கும் அதேவேளையில் லட்சக்கணக்கானோர் குணமாகிறார்கள். இதில் நல்லதும், கெட்டதும் உள்ளது. இதில் நாம் எதை எடுத்துக் கொள்ளப்போகிறோம் என்பது முக்கியம். கவலையும், அச்சமும், மன உலைச்சலும் நமக்கு உதவப் போவதில்லை. ஆகையால், நமது அன்றாட வாழ்க்கை முறையில் சிறிதாக மாற்றினால் வெற்றி பெறலாம்.

அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் மனிதர்களுக்கு உள்ளது. முதலில் நாம் அதற்கு உள்பட வேண்டும். ஆகையால், வாழ்க்கை முறையில் இதுபோன்ற சற்று மாறுதல்களை செய்து உங்கள் உடல் வலுப்பெற அனுமதியுங்கள்.

அமைதி காப்போம்.... அனைவரையும் பாதுகாப்போம்...

உறவின்

உறவுகளை மேம்படுத்துவோம் !

துறவிகளுக்கு குடும்பம் என்பது உலகம் தழுவிய வகையில் அமைந்திருப்பது. அதை வடமொழியில் "வசுதைவ குடும்பகம்' என்று கூறுவர். தமிழில் கிடைத்திருக்கும் இலக்கியங்களில் முதல் இலக்கியமாகத் திகழும் நக்கீரரின் திருமுருகாற்றுப்படை "உலகம் உவப்ப' என்று தொடங்குகிறது. தெய்வச் சேக்கிழார் அருளிய பெரிய புராணம் "உலகெலாம்' என்றும், கம்பர் அருளிய கம்பராமாயணம் "உலகம் யாவையும் தாமுள வாக்கலும்' என்று அமைந்திருப்பதைக் கொண்டும் உலகத்தைப் பற்றிய சிந்தனையை நம் முன்னோர்கள் கொண்டிருந்ததை அறியமுடிகிறது.

நம் முன்னோர்கள் இல்லறத்தில் இருந்தாலும் கூட உலகம் முழுவதையும் தமது குடும்பமாகக் காண்பதையே சிந்தையாகக் கொண்டு செயலாற்றியவர்கள். "யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கின்ற அடிப்படையில் அவர்தம் சிந்தனை விரிவுபட்டிருந்தது.

விடுதலை பெறும்போது இந்தியாவில் 540க்கும் மேற்பட்ட அரசுகள் இருந்தன. அதற்கு முன்னதாக பல்வேறு பாளையப்பட்டுகள், குறுநில மன்னர்கள் என ஒவ்வொரு ஒன்றியம் கூட ஒவ்வொரு நாடாக இருந்ததை வரலாற்றின் மூலம் அறியமுடிகிறது. இவ்வாறு சிறு சிறு நாடுகள் இணைந்து சிற்றரசாக மாறி அவையும் இணைந்து இப்போது இந்தியா என்ற பெருநாடாக மாறி உள்ளது. இது ஒருவித வளர்ச்சி. இந்தியா மற்றும் அண்டைநாடுகள் இணைந்து ஐக்கியநாடுகள் என்ற அமைப்பில் ஒன்றிணைந்துள்ளது மற்றொரு வகை வளர்ச்சி.

நமது நாடு என்கின்ற எண்ணம் பரந்து செல்வதை உணரமுடிகிறது. குழந்தையாக இருக்கும்போது நாம் என்று கருதும் நாம், சிறிது வளர்ந்து நமது குடும்பம் என்று கருதுகிறோம். இன்னும் சிறிது வளர்ந்து நமது சுற்றத்தைச் சார்ந்தவர்கள் என்று கருதுகிறோம். இன்னும் சிறிது வளர்ந்து நமது குலத்தைச் சார்ந்தவர்கள் என்று கருதுகிறோம்.

அடுத்தாற்போல, நமது மண்டலத்தைச் சார்ந்தவர்கள் என்று கருதினோம். பின்னர் வளர வளர நமது மொழி பேசக் கூடியவர்கள், இனத்தைச் சார்ந்தவர்கள், மாவட்டத்தைச் சார்ந்தவர்கள், மாநிலத்தைச் சார்ந்தவர்கள், நாட்டைச் சார்ந்தவர்கள் என்று வளர்ந்து வளர்ந்து முன்னோர்கள் கூறியதைப் போல உலகம் நம்முடையது என்ற எண்ணம் வலுப்பெற்றதை அறியமுடிகிறது.

நம்முடைய முன்னோர்கள் இதை ஒருலக ஆட்சி என்று சொல்கிறார்கள். இதற்கு வித்திட்டது சங்கப்புலவர் கணியன் பூங்குன்றனார் காலம். உலகத்தை பூமிபந்து (குளோபல்) என்று சொன்னார்கள். பின்னர் அறிவியல் வளர்ச்சி

மகிமை!

மற்றும் தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சியின் காரணமாக உலகச்சிற்றூர் (குளோபல் வில்லேஜ்) என்று சொன்னார்கள். இதை அடுத்தகட்டமாக உலகம் என்பது ஒரு குடும்பம் (குளோபல் ஃபேமிலி) என்று அனைவரும் சொல்லக்கூடிய வகையில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் எவ்வாறு ஒருவருக்கொருவர் வளர்ச்சி அடைய துணைநிற்கிறோமோ அதைப்போல அனைத்து நாட்டைச் சார்ந்தவர்களும் நம் குடும்ப உறுப்பினர்கள் என எண்ணி இச்சிந்தனையை வளப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபை மே மாதம் 15}ஆம் நாளை சர்வதேசக் குடும்ப நாள் (இன்டர்நேஷனல் ஃபேமிலி டே) என அறிவித்து இருக்கின்றது. அதன் அடிப்படையில் இவ்வாண்டு அனைவரும் குடும்ப நாளில் இயற்கையாகவே வீட்டை விட்டு யாரும் வெளியே செல்லாமல் வீட்டுக்குள்ளேயே இருக்கக்கூடிய சூழல் ஏற்பட்டுவிட்டது. இந்தச் சூழலிலே உடல் பாதிப்பை விட பலரும் உள்ளப் பாதிப்போடு இருக்கின்றோம்.

சார்ந்தலிங்க மருதாசல அடிகளார்

நம்முடைய பாரத நாட்டிலே குறிப்பாகத் தமிழகத்திலே கூட்டுக் குடும்ப வாழ்க்கை என்பது மிகச் சிறப்பாக இருந்து வந்தது. ஒரே குடும்பத்தில் தாத்தா, பாட்டி, பேரன், கொள்ளுப் பேரன், எள்ளுப் பேரன் என்கின்ற அடிப்படையிலே ஐந்தாறு தலைமுறையினர் இருந்ததைப் பார்க்க முடியும். அதனால் குடும்ப உறுப்பினர் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தது. ஒவ்வொருவருக்கும் ஐந்திலிருந்து பத்துக் குழந்தைகள் வரைக்கும் இருந்தனர். ஒரு சிற்றூர் போலவே ஒரு கூட்டுக்குடும்பம் இருந்து வந்தது.

அது காலப்போக்கில் மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாக குடும்பக் கட்டுப்பாடு நெறி வந்தபோது மிகவேகமாகக் குடும்பத்தில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து முற்காலத்தில் வேலைவாய்ப்புகள் தொழில்கள் எல்லாம் நம்முடைய ஊரைச் சார்ந்ததாகவே இருந்தன.

"நல்லா இருக்கேன்"
என்று சொல்லும்போது...
"உண்மையை சொல்"
என்று கேட்கும் உறவுகள்
இருப்பது வரம்...!

கல்வி வளர்ச்சி காரணமாக வேலைவாய்ப்புகளும் தொழில்களும் படிப்படியாக நகரங்களுக்கு சென்றன.

நகரங்களில் இருந்து மாநிலங்களுக்கு இடையே மலர்ந்தது. அடுத்து இப்போது நாடுகளுக்கு இடையே எல்லா நாடுகளிலேயும் எல்லா நாட்டவரும் இருக்கிறார்கள் என்ற அளவுக்கு நாம் விரிந்து இருப்பதனால் இந்தக் கூட்டுக் குடும்ப வாழ்க்கை என்பது ஒருபுறம் குறைந்து கொண்டே வருகிறது.

முதலிலே நாம் இருவர் நமக்கு இருவர் என்ற கொள்கை இருந்தது. அதிலிருந்து நாம் இருவர் நமக்கு ஒருவர் என்ற கொள்கை வந்தது. அதன் காரணமாக அந்த ஒரு குழந்தையும் அயல் மண்ணிலே இருக்கக்கூடிய சூழலில் இரண்டு பேர் மட்டும் உள்ள குடும்பமாக நம்முடைய குடும்பங்கள் வந்தன. இன்னும் பல்வேறு வகையான மேலை நாட்டுத் தாக்கங்கள், ஊடகங்களினுடைய தாக்கங்கள் இவற்றினால் இருவர் உள்ள குடும்பங்களும் தனிமனிதக் குடும்பங்களாக மாறிவிட்டன. நான் தனிமனிதனாக இருக்கின்றேன் என்று சொல்வதும் வளர்ந்து வருகின்றது.

பெரும்பாலும் நாமெல்லாம் நம் குடும்பத்தோடு இருக்கின்றோம். ஒரு சில இடங்களிலே தாத்தா பாட்டியோடு அப்பா அம்மாவோடு குழந்தைகளோடு ஒரே குடும்பமாக இருக்கின்றோம். பெரியவர்கள் தங்கள் குடும்பத்தினுடைய வரலாற்றைப் பதிவு செய்யலாம். தங்களின் முன்னோர்கள் பெயர்கள், தொழில்கள், சிறப்புகள், உறவினர்கள் முதலியவற்றை இளையோருக்கு எடுத்துச் சொல்லலாம்.

அடுத்த தலைமுறையினர் தமது குடும்பத்தை எவ்வாறு வளப்படுத்தலாம், அன்பு, அரவணைப்பு, சுகாதாரம் ஆகியவற்றை எப்படி மேம்படுத்தலாம் என்பதைப் பற்றி தம்முடைய மூத்த தலைமுறையினரிடம் கற்றுக் கொள்ளலாம். குடும்பத்தில் இணக்கம், அமைதி, நட்பு ஆகிய பண்புகள் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளலாம்.

அதற்கு அடுத்த நிலையில் 20 முதல் 40 வயது வரை இருப்பவர்கள் தங்கள் குடும்ப இணைப்பினை மேம்படுத்தும் வகையில் பெரியவர்களுக்குக் கதை சொல்லும் போட்டி முதலான சிறு சிறு போட்டிகள் நடத்தலாம். மூத்தோரிடையே பொதிந்து கிடக்கும் நாட்டுப்புறத் தாலாட்டு, ஒப்பாரி, நடவு, சடங்குப் பாடல்கள் முதலிய கலைகளை வெளிப்படுத்தலாம். ஒத்த வயது கொண்ட உறவுகளிடையே சிறிய அளவில் ஓவியம், கவிதை போன்ற போட்டிகளை நடத்தலாம். 20 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு நம் பாரம்பரிய விளையாட்டுகளைக் கற்றுக் கொடுக்கலாம்.

சுகாதாரம் சார்ந்த விளையாட்டுக்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதன் வாயிலாக





அவற்றைப் பயன்படுத்தாமல் தமிழிலே இருக்கும் வழிவழியான உறவுகளை அறிமுகம் செய்து இன்புறலாம். தூரத்து உறவினர்களுக்கு காணொலி அழைப்புகள் மூலம் தொடர்பு கொண்டு தத்தம் இல்லங்களில் பொங்கும் இன்பத்தினைப் பகிர்ந்து கொள்ளலாம். இவ்வாறாக இன்பத்தினைப் பகிர்ந்து கொள்ளவே விழாக்களை வைத்தார்கள்.

காதணி விழாக்கள் முதலியவை, தம் குழந்தை இந்தப் பருவத்தைக் கடந்துவிட்டாள் என்பதை காட்டவே நடத்தப் பெறுகின்றன. திருமணங்களும் அதுபோலவே அடுத்தடுத்து நடக்க இருக்கும் திருமணங்களைக் காட்டவும், உறவினர்களை காட்டவுமே. இத்தகைய பண்டிகைகளும், விழாக்களும் அருகி வரும் காலத்தில் உறவுகளை மேம்படுத்த வேண்டியது ஒவ்வொரு குடும்பத்தினரின் கடமையாகும்.

குடும்பத்தில் மன மகிழ்ச்சியும் நிம்மதியும் மேம்பட வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளலாம். இந்த வகையில் நீங்கள் அவ்வப்போது கூட்டாக இணைந்து இதுபோன்ற பணிகளை செய்ய வேண்டும். இந்தப் பணிகளைச் செய்யும் போது கூடவே இறைவனையும் மறக்கக் கூடாது. இறைவனையே நாம் பார்க்கும்போது குடும்பமாகத்தான் வழிபடுகிறோம்.



சிவபெருமான், அவர் மனைவி உமையம்மை, அவர்தம் மகன்கள் விநாயகர், முருகன், அவர் மைத்துனர் திருமால், திருமால் மனைவி திருமகள், இவர்கள் மகன் நான்முகன், அவர் மனைவி கலைமகள் என்ற பிணைப்போடு நம்மைப் படைத்து, காத்து, அழிக்கும் தெய்வங்களும் ஒரு குடும்ப உறவிலேயே நமக்கு வழிகாட்டுகின்றன. இத்தகைய குடும்ப உறவுகளை மேம்படுத்தும் வகையில் அமைந்த, "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்', "செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கி' போன்ற தேவாரப் பாடல்களை நாள்தோறும் காலையில் விளக்கினை ஏற்றி ஓதி நலம் பெறலாம். அதேபோல நம் தமிழகத்தின் பண்பாடுகளில் சிறந்த உறவு முறைகளைக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யலாம்.

ஆங்கிலத்திலே சித்தப்பா, பெரியப்பா, மாமா என அனைவருக்குமே "அங்கிள்' என்ற சொல்தான். சித்தி, பெரியம்மா, அத்தை என அனைவருக்குமே "ஆன்ட்டி' என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது.

தீநுண்மிக் காலத்தில் வெளியில் போக முடியாமல் பொது முடக்கம் குடும்பத்தினர் அனைவரையும் வீட்டிற்குள் இருந்தாக வேண்டிய சூழலை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக் குழந்தைகளுக்குக் குடும்ப உணர்வை ஏற்படுத்துவதும், உறவுகளை உணர வைப்பதும் நமது கடமை.

தமிழ் 2021

நற்றமிழரின் நாடித்துடிப்பு

JANUARY

FEBRUARY

MARCH

APRIL

MAY

JUNE

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30			

JULY

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

AUGUST

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

SEPTEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

OCTOBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30
31						

NOVEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				

DECEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com

Email: editor@ithamil.com

VARSHA™

IDLI/DOSA BATTER

Let's eat the Best!